# மாயலோகம் விட்டு
# மோட்ச பயணம்



## சகரியா பூணன்

விளக்கவுரை

# மாயலோகம் விட்டு மோட்ச பயணம்



சகரியா பூணன்

விளக்கவுரை

**Pilgrim's Progress - Tamil Narration**

**Zac Poonen**

© Zac Poonen, 2018

tamil.cfcindia.com

1 3 5 7 9 10 8 6 4 2

Paper Back ISBN : 978-81-939898-3-8

"Scripture Quotations are from The Holy Bible, BSI-Tamil O.V
Published by: The Bible Society India.
Used by Permission. All rights reserved".

**This book has been copyrighted to prevent misuse.**

**No part of this work may be reproduced or transmitted in any form or by any means - for example, electronic or mechanical, including photocopying and recording without the prior written permission of the publisher.**

For further details please contact:

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

## பயண சுவடுகள் . . .


1. ‘மோட்ச பயண’ ஆரம்பம் இடுக்கமான வழி! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 7
2. ‘ஜீவனுக்குள்’ நடத்த பாடுபடும் சபை! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 13
3. கிறிஸ்தியானின் ‘பாவ சுமை’ நீங்கியது! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 16
4. இரட்சிக்கப்பட்டு ‘இனி வளராத’ நிர்விசாரம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
5. ‘ஆவிக்குரிய பெருமை’ வளர்ச்சிக்குத் தடை! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 26
6. ‘இம்மானுவேல் தேசம்’ காண்பித்த சபை! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 32
7. ‘பிசாசை எதிர்த்து’ முன்னேறிய கிறிஸ்தியான் ! . . . . . . . . . . . . . . . . . . . . . . 37
8. ஜெபம் இல்லாமல், பயணத்தில் ஜெயம் இல்லை! . . . . . . . . . . . . . . . . . . . . . 41
9. சாத்தானின் தந்திரத்திலிருந்து காத்த கர்த்தர்! . . . . . . . . . . . . . . . . . . . . . . 44
10. வீழ்ச்சியில் கை தூக்கிய உண்மையுள்ளவன்! . . . . . . . . . . . . . . . . . . . . . . 47
11. ‘கிறிஸ்தவன்’ என்ற அறிக்கையில் முன்னேற்றம்! . . . . . . . . . . . . . . . . . . . 51
12. சத்தியத்திற்குப் பலியான உண்மையுள்ளவன்! . . . . . . . . . . . . . . . . . . . . . . 61
13. உலக ஆவியின் பிரதான வலை “பணம்” . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 65
14. குறுகலான ‘ஜீவ வழி’ விலகிடக்கூடாது! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 70
15. பாதாள குழி விடுவித்த ‘வாக்குதத்த’ சாவி! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 75
16. பாதை செவ்வைப்படுத்திய, மேய்ப்பர்கள்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 81
17. பயணத்தில் ‘ஆவிக்குரிய உறக்கம்’ கூடாது! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 87
18. முகஸ்துதியா? சிட்சிக்கும் ஆண்டவரா? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 94
19. ‘ஆவிக்குரிய முதிர்ச்சியிலும்’ அபாயம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 98
20. ‘மோட்ச பயண’ முடிவின் கெம்பீரம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 102

## ‘தேவன் கனப்படுத்திய’ மோட்ச பயண புத்தகம்!

வேதாகமத்திற்கு அடுத்து, ஜான் பணியன் எழுதிய “மோட்ச பயணம்” (Pilgrim’s Progress) சுமார் 200 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, கடந்த 325 ஆண்டுகளாய் முழு உலகத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஒரே காரணம் ‘தேவன் ஜான் பணியனை கனம் செய்தார்!’ என்பதேயாகும். ஒரு மனிதன் எழுதும் செய்திகளை தேவன் உற்றுநோக்கி, அதிலுள்ள மதிப்புகளை அறியும்போது, அந்த செய்தியை உலகமெங்கும் பரப்பிட தேவன் வழிவகுக்கிறார்!

இவ்வளவு பிரபல்யமாய் தேவன் இப்புத்தகத்தை பயன்படுத்திய போதும், இந்தப் புத்தகத்தை எழுதிய **ஜான் பணியன்**, தன் எழுத்து ஊழியத்தை வைத்து பணம் சம்பாதிக்கவில்லை! இதை நான் குறிப்பிடு வதற்கு காரணம், புத்தகங்கள் எழுதும் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் அனைவரும், அதை வைத்து பலகோடி பணம் சம்பாதிக்கிறார்கள். இவ்விஷயத்தில், நம்முடைய ‘கிறிஸ்தவ ஐக்கிய சபை’ விலக்கா யிருக்கிறது! இவ்வாறு, புத்தகம் எழுதுவதின் மூலமாய் பணம் சம்பாதிக்காத தேவ தாசர்களின் புத்தகங்கள் மாத்திரமே இன்றும் சிறந்த புத்தகங்களாக நிலைத்து நிற்கிறது. ஜான் பணியனைப்போலவே, வாட்ச்மென் நீ, A.W.டோசர் போன்ற சிறந்த ஆவிக்குரிய தலைவர்களின் புத்தகங்கள் அதில் அடங்கும்.

**ஆகவே, பணம் சம்பாதிப்பதை மனதில் கொள்ளாமல், தேவனை நேசித்து புத்தகங்கள் எழுதிய ஆசிரியர்களின் புத்தகங்களையே நான் விரும்பி வாசிப்பதுண்டு!**

உத்தம தாசனாய் விளங்கிய ஜான் பணியன் ஒரு ஏழை மனிதன்! அவருடைய தொழில், சமையலறையில் உபயோகிக்கும் பாத்திரங்களைப் பழுது நீக்கித் தரும் வேலையாகும். அவருடைய மனைவி, தனது 30வது வயதில் மரித்துவிட்டார். அவருடைய நான்கு பிள்ளைகளில், ஒரு பிள்ளை ‘பார்வை இல்லாத’ குருட்டு பிள்ளையாகும்! தன் சிறிய வீட்டில் சில குடும்பங்களை வைத்து ஜான் பணியன் கூட்டங்கள் நடத்தினார். அங்குள்ள இங்கிலாந்து தேசத்து சட்டத்தின்படி, தலைமை பிஷப்பின் நியமனம் இல்லாமல் பிரசங்கித்திட, தடை வைக்கப்பட்டிருந்தது. அப்படியே பிரசங்கித்தால் இங்கிலாந்து அரசரின் ஆணைப்படி, சிறையில் அடைக்கப்படுவார்கள். ‘இனி அவ்வாறு பிரசங்கிக்க மாட்டேன்’ என தடை மீறிய ஒரு பிரசங்கி கூறினால், 3 மாதங்கள் மாத்திரமே சிறையில் அடைக்கப்பட்டு விடுவிக்கப்படுவார். ஆனால், 3மாதத்தில் சிறையிலிருந்து ஜான் பணியனை விடுவித்தபோது, அவரோ

**“நான் வீட்டிற்குச் சென்றதும் மீண்டும் பிரசங்கிப்பேன்!”** என கூறினார். உடனே அவரை மீண்டும் சிறையில் அடைத்தார்கள். இதுபோன்ற சிறைவாசகத்தில் கஷ்டப்பட்ட ஏழை மனிதன்தான் ஜான் பணியன்!

இவ்வாறு ஜான் பணியன் முதல் 3 மாதங்களுக்குப் பிறகு, தொடர்ந்து **12 ஆண்டுகள் சிறைச்சாலையில்** அடைக்கப்பட்டிருந்தார். அவர் மீது இருந்த ஒரே குற்றம் “நான் சுவிசேஷகத்தை தொடர்ந்து பிரசங்கிப்பேன்!” என்பதுதான்!

ஜான் பணியனைப்போலவே, அப்போஸ்தலனாகிய பவுலும் புத்தகங்கள் எழுதி, தன் நிருபத்தின் மூலமாய் பணம் சம்பாதிக்கவில்லை! ஆகவேதான் இந்த அப்போஸ்தலர்களின் நிருபங்கள் அடங்கிய வேத புத்தகம் ‘முதல் தரமாய்’ உலகமெங்கும் பிரபல்யமாய் தேவன் பயன்படுத்தி வருகிறார். இந்த பவுல் சிறைச்சாலையில் இருந்து கொண்டு பல நிருபங்களை எழுதினார். அதுபோலவே ஜான் பணியன் 12- வருட சிறைச்சாலையில் இருக்கும்போதுதான் “மோட்ச பயணம்” என்ற இந்தப் புத்தகத்தை எழுதினார். இந்தப் புத்தகம் பல்லாயிரம் ஜனங்களை உத்தம கிறிஸ்தவ ஜீவியத்திற்கு சவாலிட்டு அழைத்துச் சென்றுள்ளது!

நீங்களும் ஆசீர்வதிக்கப்படவே, இந்த புத்தகம்!

– சகரியா பூணன்

“நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது!”

“இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும்
உங்கள் இரட்சிப்பு
நிறைவேறப் பிரயாசப்படுங்கள்”

(பிலிப்பியர்.3:20; 2:12)



# 1

## 'மோட்ச பயண' ஆரம்பம், இடுக்கமான வழி

**சு**விசேஷ ஊழியத்திற்காக சிறையில் அடைக்கப்பட்ட தேவ தாசன் ஜான் பணியனுக்கு 'நிதர்சனமாய்' தேவன் காண்பித்த சித்திரமே இந்த அபூர்வமான மோட்ச பயண சித்திரம் ஆகும்!

தன் கையில் வேதாகமும், தன் முதுகில் பார சுமையும் சுமந்து கொண்டு செல்லும் இவரின் பெயர் 'கிறிஸ்தியான்' அல்லது 'மோட்ச பயணி' என்பதாகும். இந்த கிறிஸ்தியான் வேதாகமத்தை ஒரு நாளில் படித்தார். பாவத்தைக்குறித்தும், நித்திய நியாயத்தீர்பைக்குறித்தும் படித்த கிறிஸ்தியான் தன் மனச்சாட்சியில் அதிகமாய் குத்துண்டு, தன்மீது பெரிய பாவ சுமை இருப்பதை உணர்ந்தான்.



ஒரு மனிதன் மெய்யான உணர்வோடு வேதம் வாசித்தால், அவனுடைய மனசாட்சியில் தன் பாவத்தை உணர்ந்து அதை ஒரு பாரமாய் இருப்பதைக் காண்பான். அவ்வாறாகவே இந்த கிறிஸ்தியான் **தன் சுமையை உணர்ந்தான்.** அந்த சுமையே தன்னைவிட்டு இறக்கிவிட

வெகுவாய் முயற்சித்தான்! இதுபோன்ற ஒரு நல்ல ஆரம்பம் கொண்டவர்கள் எவர்களோ, அவர்களே 'கிறிஸ்தவன்' என அழைக்கப்படுவதற்கு தகுதி பெற்றவர்கள். இன்னும் தன் சுமையை போக்கிடும் வழியை அறியாதபடியால் இந்த மோட்ச பயணி 'கிறிஸ்தவனாய்' இன்னும் மாறவில்லை. இன்றும் அநேகர் மனசாட்சியின் பார சுமையை உணர்ந்தாலும், இரட்சிப்பின் வழியை அறியாதிருக்கிறார்கள்.

தன் வீட்டாரிடம் அவர் ஓடிச்சென்று, பாவம் கொடிது என்றும், அதற்கு நித்திய நியாயத்தீர்ப்பை இறைவன் வைத்திருக்கிறார் என்றும், இந்த பாவ சுமையிலிருந்து நீங்களும் விடுதலை பெற, என்னோடு வாருங்கள் என்றும் அழைத்தபோது, **கிறிஸ்தியானின் மனைவி, பிள்ளைகள் மறுத்து விட்டனர்.** அதுமாத்திரமல்லாமல் அவனுடைய மனைவியும் அவன் பிள்ளைகளும் கிறிஸ்தியான் கூறியதைக் கேட்டு கைகொட்டி சிரித்து பரியாசம் பண்ணினார்கள். இதுபோன்ற நிலையே, இன்றும் திரளான கிறிஸ்தவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். முதலாவது கிறிஸ்தியான் திகைத்தபோதிலும் 'உணர்வுள்ள மனசாட்சி கொண்டவர்கள் மாத்திரமே' பாவத்தின் சுமையை உணரமுடியும் என்பதை கிறிஸ்தியான் விளங்கிக் கொண்டான்.

மிகுந்த பாரத்துடன் வெளியே வந்த கிறிஸ்தியான், சுவிசேஷ பிரசங்கி ஒருவரைக் கண்டான்.



"ஐயோ, இந்த பாவ சுமையிலிருந்து நான் எவ்வாறு விடுதலை பெறுவது?" என கேட்டான். அதற்கு அந்த பிரசங்கி "உன்னை அழுத்தும் இந்த பாவ சுமைக்காக நீ முதலாவது மனந்திரும்ப வேண்டும், பின்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திட வேண்டும்! அவர்

ஒருவரே உனக்கு விடுதலை தரமுடியும். அதோ அங்கு காணும் **சிறிய வாசலுக்குச் செல்,** அங்கு விடுதலையின் வழியை அல்லது இரட்சிப்பின் வழியை அறிந்துகொள்வாய்" என கூறவே, கிறிஸ்தியான் தன்னுடைய விடுதலைக்காக அந்த வாசலை நோக்கி ஓடத்தொடங்கினான்.



கிறிஸ்தியான் ஓடுவதைக் கண்ட அவன் மனைவியும், பிள்ளைகளும், உறவினர்களும் "எங்கே ஓடுகிறீர்கள்? உமக்கென்ன பைத்தியமா? உம்முடைய முதுகில் அப்படி எந்த ஒரு சுமையும் இல்லை! எங்கள் முதுகில் ஒரு சுமையும் இல்லை! உங்களுக்கு மாத்திரம் சுமையா?" என்றெல்லாம் கூறி கிறிஸ்தியானை விரட்டி வந்தார்கள்! "இந்த பிரசங்கிகள் பேச்சை நம்பாதே, நீ அங்கே செல்ல வேண்டாம்" என உரத்த சத்தமாய் கூறினார்கள். ஆனால் கிறிஸ்தியானோ அவர்களுடைய பரிகாசத்தையும், உரத்த சத்தத்தையும் புறக்கணித்து தன் காதுகளை இறுகப் பொத்திகொண்டு வேகமாய் ஓடினான்!

ஏனென்றால், தன் பாவ சுமையிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஒரே தீர்மானமே அவன் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது. இயேசுவும் அவ்வாறாகவே, இந்த கிறிஸ்தியானைப்போல் "பலவந்தம் செய்கிறவர்கள் மாத்திரமே தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பார்கள்" என கூறினார். இதுபோன்ற தடைகளுக்கு அநேகர் தயங்கி தங்கள் பாவ சுமையோடு தேங்கிவிட்டார்கள். 'பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்' என தீர்மானத்துடன் வாஞ்சிக்கும் மக்களே **'விடுதலையை மறுக்கும்' ஜனங்களின் குரலுக்கு** தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டும் தீவிரமாய் ஓடுவார்கள். இதுபோன்று, 'இரட்சிப்படைவதற்கு' தீவிரமாய் வந்தவர்கள் மாத்திரமே மெய்யான

இரட்சிப்பைக் கண்டடைந்தார்கள். அப்படியில்லையென்றால், இரட்சிப்படைந்தோம் என கூறிக்கொண்டு, இன்னும் ‘இரட்சிக்கப் படாமலே’ அநேகர் சபையில் அமர்ந்திருக்கிறார்கள்! இப்படி ஒரு துயரத்தை, அவர்கள் உணராமலும் இருக்கிறார்கள்.



இந்த தடையை தாண்டி வந்த கிறிஸ்தியானை 1.**பிடிவாதக்காரன்** 2.**உலகசமரசன்** ஆகிய நண்பர்கள் குறுக்கிட்டு ஓட்டத்தை தடை செய்தார்கள். அவர்கள் கிறிஸ்தியானைப் பார்த்து “நாம் ஒரே பட்டணத்தைச் சேர்ந்தவர்கள்! அப்படியிருக்க, நீ எங்களை விட்டு, வேறு ஒரு திசைக்கு செல்வது நியாயமில்லை” என சமரசம் செய்வதற்கு ‘கிறிஸ்தியானை’ கட்டாயப்படுத்தினார்கள்.

நாம் இரட்சிக்கப்பட விரும்பும் நேரத்தில், பல்வேறு சிந்தனைகள் நம்மை ஆட்கொண்டு, இந்த உலகத்தை விட்டு விலகி வாழ்வதை மறுத்து, தடையாக வந்து நிற்கும். எப்படியாவது, பாவ வாழ்க்கையை விட்டு விலக வேண்டும், அதன் கெட்ட மனசாட்சியை ஒழித்திட வேண்டும் என்ற உறுதியான தீர்மானம் கொண்டவர்கள் மாத்திரமே, இரட்சிப்பை கண்டடைய இரட்சகராகிய கிறிஸ்துவிடம் வந்து சேருவார்கள். “வருத்தப்பட்டு பாரம் சுமந்திடும் அவர்களையே” தன்னிடம் வரும்படி இயேசுவும் அழைத்தார்!



இந்த கிறிஸ்தியானோ, மிகுந்த மனஉறுதியோடு அவர்களுடைய வாதங்களை புறக்கணித்தான். சலிப்புற்ற பிடிவாதக்காரன், கிறிஸ்தியானை விட்டு விலகிச் சென்றான்.

ஆனால், 'உலகசமரசன்' "பிடிவாதக்காரன் போனால் போகட்டும், ஆனால் நான் உன்னோடு கூட நீ செல்லும் திசைக்கு வந்துபார்க்க ஆசைப்படுகிறேன்" என கூறினான். இருவரும் நடந்து செல்கையில், கிறிஸ்தியான் உலகசமரசனைப் பார்த்து "கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எவ்வளவு பயங்கரம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அந்த தெய்வ பயமே, நான் இரட்சிப்படையும் ஸ்தலத்திற்கு, அது எவ்வளவு குறுகியதாயிருந்தாலும், நான் முன்னேறிச் செல்ல என்னை உந்துகிறது" என்றெல்லாம் பேசிக்கொண்டே முன்னேறிச் சென்றான்.

உலகசமரசனோ "நீ ஏன் இவ்வாறு மெதுவாய் நடக்கிறாய், நீ செல்லும் இடத்திற்கு வேகமாய் செல்லலாம்" எனக்கூறினான். அதுஏனென்றால், உலகசமரசன் 'தன் பாவ பாரத்தை' உணராதவனாய் நடந்து வந்தான்! கிறிஸ்தியானோ "என் சுமையின் பாரம் அதிகம். வேகமாய் செல்ல முடியாது" என கூறினான்!



திடீரென்று இருவரும் 'உளையான சேற்றில்' விழுந்தார்கள். இந்த உளையான சேற்றிற்கு பெயர் "**மனச்சோர்வு**" என்பதாகும். உடனே உலகசமரசன் எழுந்து நின்று "ஒருவன் இரட்சிப்படைவதற்கு, இப்படி ஒரு கஷ்டம் என்றால், இந்த பாதை எனக்கு தேவையில்லை"..... என, விழுந்த அதே வேகத்தில், உலகசமரசன் தன் பயணத்திலிருந்து வெளியேறி "**நீ வந்துவிடு இந்த பயணம் கடினம்**"எனக்கூறி, கிறிஸ்தியானை சபித்து,

இப்பாதை கடினம் என கூறினான். உலகத்தோடு ஒத்தவேஷம் தரிப்பவர்கள் தேவனுடைய வழியில் நடப்பதைப்போல், சில காலம் இருந்தாலும், அவர்களால் நித்திய ஜீவ பாதையில் தொடர்ந்து பயணிக்க இயலாது!

கிறிஸ்தியான், உலகசமரசனுக்கு மறுக்கவே, அவனும் ஓடிவிட்டான். இவன் உலகத்தோடு ஒத்தவேஷம் தரித்துக்கொண்டே பரலோகத்துக்கும் வந்து சேரலாம் என எண்ணிக்கொண்டான். இன்றும் அநேக மக்கள் இவனைப்போலவே “இரண்டு எஜமான்களை சேவிக்கலாம், பரலோக ராஜ்ஜியத்தையும் பெறலாம்” என எண்ணி தங்களை வஞ்சித்துக் கொள்கிறார்கள்.



சோர்வின் குழியில் விழுந்த கிறிஸ்தியான், உதவிக்காக கூக்குரலிட்டான்! அந்த சமயத்தில் **‘சகாயன்’** என அழைக்கப்பட்ட ஒருவர் அங்கு வந்தார். அவர், கிறிஸ்தியானுக்கு உதவிசெய்து உளையான சேற்றிலிருந்து தூக்கிவிட்டார். இந்த உலக வாழ்விலிருந்து தேவன் காட்டும் பயணத்திற்கு செல்பவர்கள் துன்பம் அடைந்தாலும், தொடர்ந்து **தேவனுடைய உதவி கரத்தை** எப்போதும் காண்பார்கள்!!

பாவ சுமையிலிருந்தும், உலக பாரத்திலிருந்தும் விடுதலை பெற விரும்பும் யாவருக்கும் ‘ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை’ பரம உதவி தேடும் யாவருக்கும் தேவன் தருகிறார் என எபிரெயர்.4:16 நமக்கு மகிழ்ச்சியுடன் கூறுகிறது. இந்த சகாயத்தையே மோட்ச பயணம் தொடர்ந்த கிறிஸ்தியான் அனுபவித்தான்!



# 2

## 'ஜீவனுக்குள்' நடத்த பாடுபடும் சபை!

சேற்றிலிருந்து மீண்டு வந்த கிறிஸ்தியான், மிகுந்த மகிழ்ச்சியுடன் நாகரீக வஸ்திரத்தோடு மிடுக்காக அமர்ந்திருந்த **'உலக ஞானியை'** சந்தித்தான்.



இவன் ஓர் சிறந்த மார்க்கவாதியாய், தன் சொந்த அறிவின்படி இந்த உலகத்திலிருந்து இரட்சிக்கப்படுகிற வழியை நாடியவன். இவன் செல்வந்தனாயும், துன்பத்தை சகிக்க மறுத்தவனாயும் இருந்தான். அவன் கிறிஸ்தியானைப் பார்த்து "நீ ஒரு நல்ல வாழ்க்கையை வாழ விரும்பினால் **'ஒழுக்க தேசம்'** என்ற ஊருக்கு போ!" அங்கு **'வேத பிரமாணி'** என்ற மனிதனை சந்திப்பாய். அவன் உலக அறிவு மாத்திரமல்லாமல், வேதம் முழுவதும் கற்றறிந்த பண்டிதன்! அவன் உனக்கு தேவனுடைய பிரமாணங்களை எவ்வாறு கைக்கொள்வது, அதன்மூலம் எப்படி இரட்சிக்கப்படுவது என்பதையெல்லாம் விளக்கிக் காண்பிப்பான். ஆனால் உண்மையில், நியாயப்பிரமாணம் பல வழிகள் கொண்ட குகைக்குள் நுழைந்தது போலாகும்.



அதில் நுழைந்த ஒருவன், வெளியே வருவதற்குரிய வாசலை கண்டுபிடிக்காமல் சிக்கலில் அகப்பட்டுக்கொள்வான்! என்பதே நியாயப்பிரமாணத்தின் வழியாய் இருக்கிறது.

நியாயப்பிரமாணம் கைக்கொண்டு வாழ்பவன், இரட்சிக்கப் படலாம் அல்லது நீதிமானாக்கப்படலாம் என்பதெல்லாம் சுய முயற்சிகளே ஆகும். அவ்வாறு **சுய முயற்சிகளால்** பெற்றுக்கொள்ளும் எந்த நீதியும் தேவனுடைய பார்வையில் 'அருவருப்பான கந்தைகள்' என வேதம் தெளிவாய் கூறுகிறது. இவைகளையெல்லாம் கேட்ட கிறிஸ்தியான், நியாயப்பிரமாணம் தனக்கு உதவி செய்யக்கூடுமோ? என சிந்தித்து, நியாயப்பிரமாணத்தின் வழியான சீனாய் மலைக்கு ஏறினான்!

அங்கு கொளுந்து விட்டு எரிந்த அக்கினியைக் கண்ட கிறிஸ்தியான், சீனாய் மலையின் வழி தன்னை இரட்சிக்க இயலாது என்பதை அறிந்து தெளிவடைந்தான். இதுபோன்ற தெளிவு நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரமாய் இருக்கிறது.

**அதாவது, நம் சொந்த கிரியைகளின் மூலமாக இரட்சிக்கப்பட முடியாது என்பதையும் தேவனுடைய கிருபையினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் என்பதும் நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் முதல் அஸ்திபாரமாய் இருக்கிறது.**

இந்த அஸ்திபாரத்திற்கு மேல்தான் நம் கிறிஸ்தவ மாளிகை கட்டப்பட முடியும். அது, பரிசுத்தாவியின் உதவி கொண்டு, நம் சுயத்தை வெறுத்து, நாள்தோறும் சிலுவை எடுத்து ஆண்டவரைப் பின்பற்றும் ஜீவியமாகும்!!

இந்த நேரத்தில், கிறிஸ்தியான் ஆரம்பத்தில் சந்தித்த சுவிசேஷகனை மீண்டுமாய் பார்த்தான். சுவிசேஷகன் "நான் உன்னை அந்த குறுகிய

திட்டி வாசலை நோக்கிப் போகும்படியே கூறினேன்! நீ ஏன் வழியில் சந்தித்த மற்றவர்களின் ஆலோசனையை கேட்டாய்?" என கடிந்து கொண்டார். "பிரமாணத்தை கைக்கொண்டு நல்லவனாய் மாறலாம் என எண்ணி உன் நேரத்தை வீணடித்துவிட்டாய்.... சீக்கிரமாய் அந்த திட்டி வாசலுக்குச் செல், காலம் கடந்து இருட்டபோகிறது" என கடிந்து கொண்டான். நான் உனக்கு மீண்டும் சொல்லுகிறேன். நியாயப் பிரமாணத்தின் நல்ல கிரியைகள் மூலம் நாம் இரட்சிக்கப்பட முடியாது! ஆனால் **விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்!** என சுவிசேஷம் போதித்தான். தன்னைக் கடிந்துகொண்ட சுவிசேஷகனுக்கு கிறிஸ்தியான் நன்றி கூறினான். நாமும், கடிந்து புத்தி சொல்லும் ஊழியர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க கவனம் கொள்ள வேண்டும். இப்போது கிறிஸ்தியான், மீண்டும் தன் பயணத்தை திட்டி வாசல் நோக்கி புறப்பட்டான்.



அந்த குறுகலான வாசல் வழியாய் கவனத்துடன் சென்ற கிறிஸ்தியான், தன்னை வீழ்த்த பிசாசானவன் எய்த அம்பைக் கண்டு வேகமாய் கதவை தட்டினான்! கதவை திறந்த வாசல் காவலாளி, கிறிஸ்தியானை உள்ளே இழுத்துக் கொண்டான்.

இன்றும், ஜனங்களை ஜீவனுக்குள் நடத்தும் இடுக்கமான வாசலையும், நெருக்கமான வழியையும் காண முடியாதபடி பிசாசானவன் ஜனங்களைத் தடுக்கிறான். ஆனால், மெய்யான தேவனுடைய சபை, தன் அர்ப்பண ஊழியம் மூலமாய் 'ஜீவன் தரும்' இந்த இடுக்கமான வாசலுக்கு நேராய் ஜனங்களை நடத்துவதற்கு உத்தமமாய் பாடுபடும்!



# 3

## கிறிஸ்தியானின் 'பாவ சுமை' நீங்கியது!

பிசாசின் தாக்குதலிலிருந்து காவலாளி இழுத்துக் கொள்ள, பாதுகாப்பாய் உள்ளே வந்த கிறிஸ்தியான் ஒரு வீட்டை அங்கு கண்டான். அந்த வீடு "வியாக்கியானியின் வீடாய்" இருந்தது.



வியாக்கியானி என்பதின் பொருள், வேறொரு மொழியை நமது மொழிக்கு, மொழி பெயர்த்து தருவதே ஆகும். அனைத்து வேத வாக்கியங் களும் வேறொரு மொழி என்றும், அது நமக்கு பரிசுத்தாவியினால் வியாக்கியானம் செய்யப்படாவிட்டால், வேத வாக்கியங்களை கற்றுக் கொள்ள முடியாது என்பதையும் இன்றைய திரளான கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்!

**பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ள 39 புத்தகங்களை வைத்திருந்த பரிசேயர்கள், பரிசுத்தாவியின் வியாக்கியானத்தை அறியாதபடியால், இயேசுவை பழைய ஏற்பாடு புத்தகங்கள் மேசியா என விளக்கியதை காண முடியாதவர்களாய் இருந்தார்கள்.**

ஆகவே, தனது மேசியாவை **பெயல்செபூல்** என அழைத்தார்கள்.

ஆனால், சாதாரண படிப்பறிவில்லாத பேதுரு, பரிசுத்தாவியின் நிறைவின் மூலமாய் நல்ல வியாக்கியான வெளிப்பாட்டை பெற்றிருந்தார். ஆகவே பேதுரு கூறும்போது இவர் பெயல்செபூல் அல்ல **"மெய்யாகவே தேவ குமாரன்!"** என அறிக்கையிட்டார்.



ஆகவே, இந்த வியாக்கியான வீடு, கிறிஸ்தியானுக்கு சிறந்த வியாக்கியானத்தை தந்து, தேவன் வாக்குரைத்த வாக்குதத்த பூமிக்கு நடத்தும் உதவியாளராய் இருந்தது. வீட்டிற்கு உள்ளே நுழைந்த கிறிஸ்தியானுக்கு, அபிஷேகம் நிறைந்த ஒரு மனிதன் காட்டப் பட்டான். வேத வாக்கியத்திலிருந்து அவர் கூறும் செய்திகளை கவனித்து கேட்கவும் கட்டளையிடப்பட்டான். அந்த வியாக்கியானியானவன் எதிரே ஆசீர்வாதத்தை குறிக்கும் ஓர் கிரீடம் இருந்தது. அவருக்கு பின்னால் உலகம் தள்ளப்பட்டிருப்பதையும் கிறிஸ்தியான் கண்டான். அவருடைய கரத்தில் வேத புத்தகம் மாத்திரமே இருந்தது.

கிறிஸ்து தன் சபைக்கு, போதகர்களை வரமாய் தந்துள்ளார். நாம் வேத வாக்கியங்களை புரிந்து கொண்டாலும், ஆழமான சத்தியங் களையோ கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட போதகர்கள் மூலமாய் அவரது ஜனங்களைப் போதித்து நடத்தும்படி வைத்திருக்கிறார். ஆகவே அவர் கூறும் பிரசங்க போதகங்களை கிறிஸ்தியான் கவனித்து கேட்கும்படி அறிவுறுத்தப்பட்டான்! சபையும், சபையில் தேவன் தந்த போதகர்களும் நம் ஆத்தும ஜீவியத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதை அநேகர் அறியாமலே இருக்கிறார்கள். இதனிமித்தமாய், தாங்கள் எதிர்கொள்ளும் சோதனைகளில், மிக எளிதில் வீழ்ச்சியடைகிறார்கள்!



அந்த வியாக்கியானி கிறிஸ்தியானை ஒரு அறைக்கு கொண்டு சென்றார். அந்த அறையில் **கோபத்தால் நிறைந்த** ஒரு பையன் இருந்தான். அடுத்த அறையில் **பொறுமை நிறைந்த** ஒரு பையன் இருந்தான். கோபம் நிறைந்த பையன் உலகத்தாரை வெளிப்படுத்தினான். தனக்கு யாதொன்று கிடைக்காவிட்டால் ஆத்திரமடையும் உலகமக்கள்!

மற்றொரு அறையிலிருந்த பையன் தேவனுடைய பிள்ளைகளை வெளிப்படுத்தினான். அவன் எப்போதும் பொறுமையோடும், போதுமென்கிற மனதுடனும் இருந்தான்! நம் கிறிஸ்தவ ஜீவிய பயணத்தில், பொறுமை, நிதானம் என்பது மிக அவசியமாகும். இந்த உலகமும், உலகப்பொருட்களும் மனுஷர்களுக்கு ஏராளமான பிரச்சனைகளையும், நிம்மதியற்ற சூழ்நிலைகளையும் தருகிறபடியால், எப்போதுமே, ஆத்திரம் கொண்ட ஜனங்களாகவே ஜீவிக்கிறார்கள். இதனிமித்தமாய், அவர்கள் மனதில் எப்போதும் 'திருப்தியற்ற' நிலை நிரந்தரமாய் தங்கிவிடுகிறது.

மேலும், நாம் அனைவருமே 'கோபாவேசம்' கொண்டவர்களாகவே பிறந்தோம். ஒவ்வொரு சிறு குழந்தையும் கோபமும் பிடிவாதகுணமும் கொண்டதுதான்! இந்த நிலையில்தான் நாம் அனைவரும் இருந்தோம். இதற்கெல்லாம் நேர்மாறாக, அடுத்த அறையிலிருந்த பையன் சாந்தமுடன் அமர்ந்திருப்பதைப் பாருங்கள்.

**தேவனிடம் இளைப்பாறுதலைப் பெற்றவர்கள், சாந்தமும் பொறுமையும் உள்ளவர்களாய் இருப்பார்கள். இந்த நிலைக்கே நாம் யாவரும் மாறி வர வேண்டும்!**

இவ்வாறாக, தன் மோட்ச பயணத்திற்குரிய மிக முக்கியமான குணாதிசயத்தை, கிறிஸ்தியான் விளங்கிக்கொண்டான்!

கிறிஸ்தியான் அடுத்த அறைக்குச் சென்றபோது கொளுந்துவிட்டு **எரியும் அக்கினியையும்** அதை அணைப்பதற்கு சாத்தான் **தண்ணீர் ஊற்றுவதையும்** கண்டான்!



அக்கினியானது இயேசு கிறிஸ்துவின் மீதுகொண்ட அன்பையும், பிறர் மீது கொண்ட அன்பையும் குறிக்கிறது. உண்மையான சீஷன், இருதயத்தில் கொளுந்துவிட்டு எரியும் இந்த அன்பின் அக்கினியை, சாத்தான் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும், கசப்புகளை கொட்டி னாலும் அக்கினியானது தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கச் செய்கிறான்.

ஏனெனில் அடுத்த பக்கத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் **'நிலைத்த அன்பிற்காக'** உதவும் வல்லமையை ஊற்றிக்கொண்டேயிருக்கிறார். நம்முடைய அக்கினி அவிந்து போகாமல், நாம் அன்பில் குளிர்ந்து போகாமல் இருக்க பரிசுத்தாவியானவர் எண்ணெய் ஊற்றி நமக்கு உதவி செய்து, தொடர்ந்து எரியும்படிச் செய்கிறார். ஆகவேதான், நாம் **தொடர்ச்சியாய் ஆவியின் அபிஷேகத்தை பெற வேண்டும்** என வேதம் நமக்கு புத்திச் சொல்லுகிறது. பரிசுத்தாவி, கிருபைக்கே ஒப்பிடப்பட்டிருக்கிறது.

கிருபையின் ஊற்று நமக்குள் எப்போதும் தொடர்ச்சியாய் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். சத்துருவானவன், அன்பின் அக்கினியை அவித்துவிட நாள்தோறும் தண்ணீர் ஊற்றுகிறான். ஆகவேதான், பரிசுத்தாவியின் எண்ணெய் நமக்கு நாள்தோறும் அவசியமாய் இருக்கிறது. சிலர் தனது ஆதி அன்பில் குறைந்து, கோபமும் மூர்க்கமும் அடைவதற்கு காரணம், சாத்தான் ஊற்றிய தண்ணீரால் பாதிக்கப்பட்டு அக்கினி அவர்கள் வாழ்வில் குறைய தொடங்கிவிட்டது என்ற அடையாளமேயாகும்! பிசாசின் தந்திரமான 'குளிர்ச்சிக்கு' நாம்

யாவருமே மிகுந்த கவனமாயிருக்க வேண்டும். அநேக சமயங்களில், அந்த குளிர்ந்த தன்மை, அன்பின் தாழ்ச்சியாகவே இருக்கிறது!



அடுத்து **'மனச்சோர்வு'** என்ற மனிதனை பரிசுத்தாவியானவர் காண்பித்தார். இவன் தன் ஜீவியத்தில் பின்மாற்றமடைந்து, நம்பிக்கை இழந்து, மனச்சோர்வு என்னும் சிறைக்குள் அடைப்பட்டு போனான். இது ஒரு ஆபத்தான இடம். நாம் தோல்வியடைந்தாலும், மனந்தளராமல் மனந்திரும்பிவிட வேண்டும்.

**எந்த வீழ்ச்சியிலும் மனந்திரும்ப மனம் கொண்டவர்களுக்கு இதுபோன்ற சிறை இருப்பதில்லை. இன்றும் கிறிஸ்தவ உலகில் மனந்திரும்ப மனதில்லாமல் நிரந்தரமான சோர்விற்குள் அடைப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். நாமோ எந்நிலையிலும் மனந்திரும்ப மனம் கொண்டவர்களாயிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே சோர்வு நம்மை தாக்காது!**

தேவனுடைய கிருபையை அலட்சியப்படுத்தி, தங்கள் மனச்சாட்சியை உணர்வில்லாது மழுக்கிப்போட்டவர்கள் சோர்வு என்னும் இந்த சிறைக்குள் அடைப்பட்டு போவார்கள் என்பதை அறிந்து, நாம் விழித்திருக்கக்கடவோம்.

'நீதிமான்' ஏழுமுறை வீழ்ந்தாலும் எழுந்திருப்பான்! என்றே வேதம் கூறுகிறது. அவன் வீழ்ச்சியடைந்தபடியால், அல்லது அவன் பலமுறை வீழ்ச்சியடைகிறபடியால், அவனுக்கு 'நீதிமான்' என்று பெயர் சூட்டப் படவில்லை! அப்படி நிச்சயமாய் இல்லை. ஆனால், அவன் ஏழுமுறை விழுந்தாலும், புதிய ஏற்பாட்டில் இயேசு கூறியதைப்போல் ஏழு எழுபது தடவை விழுந்தாலும்.... வீழ்ச்சியில் தங்கிவிடாமல், சோர்ந்து போகாமல்,

ஒவ்வொரு வீழ்ச்சியிலும், அவன் குதித்து எழுந்து விட்டால், அவனையே 'நீதிமான்' என வேதம் பெயர் சூட்டி மகிழ்கின்றது!

பரிசுத்தாவியின் வழிநடத்துதலை தொடர்ந்து கேட்ட கிறிஸ்தியான்,



இருபக்கமும் சுவர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தான். அந்த நெருக்கமான வழி இரட்சிப்பின் சுவராய் இருந்தது. அதன் வழியாய் தொடர்ந்து நடக்கையில் சிலுவையின் வழிக்கு வந்தான். சிலுவையை கிறிஸ்தியான் நெருங்கி வந்ததும் **அவன் தோளில் இருந்த பாவ சுமை உருண்டோடி விழுந்தது.** அந்த சுமை இயேசுகிறிஸ்துவின் கல்லறைக் குழிக்குள் விழுவதைப்போன்று காட்சியளித்தது.

அவனை அழுத்திய பாவம் இனி வெளிவரப்போவதில்லை. ஏனெனில் இயேசு பாவத்தையும், பாதாள கல்லறையையும் ஜெயித்தார்! புதிய உடன்படிக்கை வழங்கும் "**இனி நான் உன் பாவத்தை நினைவு கூர்வதில்லை**" என்ற பாக்கியத்தை கிறிஸ்தியான் கண்டடைந்தான். கிறிஸ்தியான் சிலுவைக்கு முன்பாக தன் கையை விரித்து நின்றான்.

"கர்த்தாவே என் கையில் நற்கிரியை ஏதும் இல்லை. என்னை பாவி யாகவே ஏற்றுக்கொள்ளும்" எனக்கூறி இரட்சிப்பை கண்டடைந்தான். இன்று அநேகர் இருப்பதைப்போல் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன், ஆகவே நான் பிறவியிலேயே இரட்சிக்கப்பட்டேன் என கூற முற்படாதிருங்கள். நல்ல கிறிஸ்தவ குடும்பமோ அல்லது நல்ல ஒழுக்கமான ஜீவியமோ கிறிஸ்துவின் இரட்சிப்பை உங்களுக்கு கொண்டு வராது. வெறுமையாய் வருகிறேன்..... **நான் ஒரு பாவி** என சிலுவையண்டையில் வந்தவர்கள் மாத்திரமே மெய்யான இரட்சிப்பை கண்டடைவார்கள்!



# 4

## இரட்சிக்கப்பட்டு 'இனி வளராத' நிர்விசாரம்

இயேசு, கிறிஸ்தவர்களுக்காக மரிக்கவில்லை! **பாவிகளுக்காகவே** மரித்தார் என்ற உணர்வை, ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன் நன்றாய் விளங்கியிருந்தால் மாத்திரமே, அவன் இரட்சிக்கப்பட முடியும்.

இந்த கிறிஸ்தவத்தில் காணும், "நாங்கள் பரம்பரை பரம்பரையாய் கிறிஸ்தவர்கள்" என தங்கள் முன்னோரை சுட்டிக்காட்டி, தங்களை கிறிஸ்தவர்களென்றோ அல்லது தங்களை இரட்சிக்கப்பட்டவர் களென்றோ இன்று அனேகர் எண்ணுகிறார்கள். இதுபோன்றவர்களில் அனேகர் "நாங்கள் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த நாள் முதற்கொண்டே, இரட்சிக்கப்பட்டுவிட்டோம்!" என தங்களையே வஞ்சனை செய்து கொள்கிறார்கள்!!



கிறிஸ்தியான், தன் இரு கைகளையும் உயர்த்தி என்னிடம் நற்கிரியைகள் ஒன்றுமில்லை அல்லது ஓய்வுநாள் போன்ற ஆசரிப்புகளை கைக்கொண்ட நீதிமானாயும் வரவில்லை! என கதறியே மெய்யான இரட்சிப்பைக் கண்டடைந்தான். அதனிமித்தமே **'இரட்சிப்பின் சந்தோஷம்'**

கிறிஸ்தியானின் உள்ளத்தை நிறைத்தது.



இரட்சிப்படைந்து உள்ளே பிரவேசித்த கிறிஸ்தியானை மூன்று தூதர்கள் சந்தித்தார்கள். ஒரு தூதன் "உனக்கு சமாதானம் உண்டாவதாக!" எனக் கூறினார். இரண்டாவது தூதன் கிறிஸ்தியானின் அழுக்கான வஸ்திரங்களை அகற்றி "கிறிஸ்துவின் நீதியின் ஆடையை" அவனுக்கு உடுத்துவித்தான். மூன்றாவது தூதன், அவனுடைய நெற்றியில் ஒரு முத்திரையைப் பதித்து "நீ தேவனுக்குச் சொந்தம்" எனக் கூறினான். பிறகு பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் அனுமதி பத்திரச் சுருளை அவனுக்குக் கொடுத்தான். "இப்போது நீ பரலோகத்திற்குள் போகலாம்" ஆகிலும், இந்த சுருளை நீ எப்போதும் பற்றியிருக்க வேண்டும்! இல்லையென்றால் பரலோகத்தின் உள்ளே நீ பிரவேசிக்க இயலாது!" என எச்சரித்தான்.

**அந்த சுருள் "இரட்சிப்பின் நிச்சயம்" என்பதேயாகும். ஆம், பாவம் மன்னிக்கப்பட்டது என்பது மாத்திரமல்ல.... பாவம் மன்னிக்கப்பட்டது என்ற நிச்சயத்தையும் நாம் பெற்றிருக்க வேண்டும்!**

நம் பாவம் மன்னிக்கப்பட்டிருந்தாலும், அதற்குரிய நிச்சயத்தை நாம் பெற்றிருக்காவிட்டால், நாம் ஒருபோதும் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்திட முடியாது. அந்த நிச்சயத்தை ஒரு மனிதன் மூலமாய் பெறுவதல்ல. அந்த நிச்சயத்தை **தேவனிடத்தில்** நீங்கள் கேட்டே பெற்றுக் கொள்ள வேண்டும்! அந்த நிச்சயத்தை பெற்ற அடுத்த கணமே அவனுடைய பெயர் 'மோட்ச பயணி' என்பதற்குப் பதிலாய் "கிறிஸ்தவன்" என்ற மறுபெயர் பெற்றான். அப்போஸ்தலர்.11:26 - ம் வசனம் கூறுகிறதைப்போல், **அன்று சீஷர்கள் மாத்திரமே கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டார்கள்!** இன்றோ, பாவ வாழ்க்கையில் வாழ்பவர்கள் கூட

தங்களை கிறிஸ்தவன் என கூறிக் கொள்கிறார்கள். ஆனால், கிறிஸ்தியான் மெய்யாகவே மறுபடியும் பிறந்தபடியால் 'நானொரு கிறிஸ்தவன்' என ஆர்ப்பரித்து பாடி மகிழ்ந்தான்!



கிறிஸ்தவ பயணமோ நீண்டதோர் பயணமாகும்! தொடர்ந்து பயணம் செய்த கிறிஸ்தியான் மூன்று மனிதர்களை சந்தித்தான். அவர்கள் 3 பேருமே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அவர்கள் கால்களில் சங்கிலி மாட்டப்பட்டிருந்தன. இவர்களில் ஒருவனுடைய பெயர் 'வஞ்சிக்கப்படக் கூடியவன்!' இரண்டாவது நபரின் பெயர் 'சோம்பேறி!' மூன்றாவது நபரின் பெயர் 'இனி ஒரு குறைவுமில்லை!' என எண்ணிக்கொண்டவன்.

இந்த மூவரும், இன்றைய கிறிஸ்தவர்களின் மனநிலையை வெளிப்படுத்துகிறார்கள். எளிதில் வஞ்சிக்கப்படுபவன் "இயேசுவின் நாமத்தில் ஒருவர் அற்புதம் செய்தால், அவர் கூறும் உபதேசங்கள் அனைத்தையும் உடனே நம்புகிறவர்கள்!" இன்று சிலர் 'மேஜிக்ஷோவில்' காண்பதைக்கூட அப்படியே நம்புவார்கள்.... இவர்களே எளிதில் வஞ்சிக்கப்பட கூடியவர்கள்.

அடுத்தவனோ சோம்பேறித்தனத்தால் பாதிக்கப்பட்டவன். **ஒழுங்கின் கட்டுப்பாட்டின்படி வாழாத சோம்பேறி!** ஆவிக்குரிய ரீதியான சோம்பேறித்தனத்தில் "நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன்! இனி நான் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை" என்ற மனநிலை கொண்டவர்கள். இவனும் தனக்கு தானே சிறைச்சங்கிலி பூட்டப்பட்டிருந்தான். மூன்றாவது நபர் "எனக்குள் எல்லாம் சரியாய்தான் இருக்கிறது, நான் செய்வது சரிதான்" என்ற மனப்பான்மை கொண்டவன். இவ்வாறாக, தான் செல்லும் வழியை சீர்தூக்கிப் பார்த்து, தன் நித்திய ஜீவ பயணத்தில் பாதை தவறாமல் செல்லுவதற்கு தங்களை சரிசெய்து கொள்ள மறுக்கும்

*நிர்விசாரம் கொண்டவர்களே, இந்த ஆவிக்குரிய சோம்பேறிகளாவர்!*

> **உணர்வுள்ள இருதயம் கொண்டு "உமக்கு வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ? என்னை சோதித்தருளும்!" என தாவீது கூறிய நல்ல உணர்வை இவர்கள் இழக்கிறார்கள்!**

*பல வருடம் சபையில் இருப்பவர்கள் கூட "எனக்குள் ஒரு குறைவும் இல்லை, எல்லாம் சரியாய்தான் செய்கிறேன்" என கூறுபவர்கள், இந்த மனுஷன் கிடப்பதைப்போலவே வளர்ச்சியின்றி கிடப்பார்கள். இதுபோன்ற மனநிலை கொண்ட 3 - பேரையும் கிறிஸ்தியான் உலுக்கி எழுப்பிவிட்டான். நாமும் அவ்வாறாகவே இதுபோன்ற 3 - வித மனநிலையை கொண்டவர்களை உலுக்கி எழுப்பி "உங்களின் உதாசினமான வாழ்க்கை பெரும் அபாயம்!" என எச்சரிக்க வேண்டும். என்னதான் கிறிஸ்தியான் அவர்களை உலுக்கி எச்சரித்தாலும், அவர்களோ அவனது எச்சரிப்புகளை எல்லாம் கேட்டுவிட்டு "அதெல்லாம் ஒன்றும் எங்களை பாதிக்காது" என அலட்சியப்படுத்தி மீண்டும் படுத்து உறங்கி விட்டார்கள்!*



# 5

## 'ஆவிக்குரிய பெருமை' வளர்ச்சிக்குத் தடை

இன்றும் 'தேவனுடைய எச்சரிப்புகளை' சிறிதுகூட மனதில் கொள்ளாமல், அலட்சியமாய் தங்கள் சொந்த வழிகளில் முடங்கி கிடப்பவர்கள் அனேகர்! ஆனால் ஒரு உத்தம கிறிஸ்தவமோ, தங்கள் வாழ்வின் ஒரு நாளைக்கூட 'அலட்சிய போங்காய்' வாழ்ந்திட மாட்டார்கள்!



கிறிஸ்தியான், தன் பயணத்தை தொடர்ந்த வேளையில், இயேசு, யோவான் 10-ல் குறிப்பிட்டதைப்போல் ஒரு மனிதன் சுவர் ஏறி குதித்ததைக் கண்டான். அவனுடைய வாழ்வில், தன்னை தாழ்த்திடும் தாழ்மையோ அல்லது அனுதினமும் எடுக்க வேண்டிய சிலுவையின் பங்கோ, ஏதும் இல்லாதிருந்தது. இவ்வாறு சிலுவையின் வழியில் வராமல், உள்ளே குதித்து வர முயன்றவனின் கரத்தில், **பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் 'பத்திரச்சுருள்'** இல்லாதிருந்தது. இதுபோன்றவர்கள், தாங்களும் மோட்ச பயணிகள் என எண்ணும் துணிகரம் கொண்டு, உள்ளே பிரவேசித்தாலும், பயணத்தின் இறுதி வாசல் வரும்போது, பரலோக வாசலை காப்பவர்கள்

“இயேசு உன்னை மன்னித்து நீதிமானாக்கித் தந்த அனுமதிச் சுருள் எங்கே?” எனக்கேட்டு, அவனுக்கு அனுமதி மறுப்பார்கள்! என வேதம் திட்டமாய் கூறுகிறது. இவ்வாறாகவே, இன்றும் பல வருடங்களாய் சபையில் அமர்ந்திருப்பவர்கள் ‘சிலுவையின் இடுக்கமான நேர் வழியை’ மறுதலித்தவர்கள்! நீங்கள் ஒரு சிறந்த ஐக்கிய சபையில் ஜீவகாலமெல்லாம் இவ்வாறு அமர்ந்திருந்தாலும், சிலுவையின் வழியில் வாழ்ந்திட மறுத்த உங்களிடம் ‘இயேசு வழங்கிய அனுமதிச் சுருள் எங்கே?’ எனக் கேட்கும் அந்த கடைசி நாளில், நீங்கள் நிச்சயமாய் அதிர்ச்சிக்குள்ளாவீர்கள்!



தன் பயணத்தை தொடர்ந்த கிறிஸ்தியான், வழியில் இரண்டு பேரை சந்தித்தான். அதில் ஒருவன் ஏற்கெனவே மதிலேறி குதித்தவன் என்பதை கிறிஸ்தியான் அறிந்தான். மற்ற இரண்டு பேர்களில் ஒருவன் பெயர் “பெயர் கிறிஸ்தவன்”. இவன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். கிறிஸ்தவ பெயரோடு திருமணம் செய்தவன், கிறிஸ்தவ ஆலயங்களுக்கு தவறாமல் சென்றவன்! இவனிடம் தன்னை தாழ்த்துவதென்பதோ, சிலுவை சுமப்பதென்பதோ, நொறுங்குண்ட ஜீவியம் என்பதோ சிறிதுகூட காணப்படவில்லை. அந்த இரண்டாவது மனிதனின் பெயர் ‘மாய்மாலன்’. நீங்கள் வேதத்தை கவனித்துப் பார்த்தால், இயேசு, வேறு எதைக் காட்டிலும் மாய்மாலத்தையே அதிகமாய் கண்டித்துப் பேசினார்.

எங்கெல்லாம் மாய்மாலம் இருக்கிறதோ, அங்கே இரட்சிப்பும் அவர்களுக்கு தூரமாய் நின்றுவிடும். இந்த மாய்மாலக்காரர்களின் சொந்த ஊர் ‘மாய மகிமை’ என்பதேயாகும். இவர்கள், தங்களைத்தான் தாழ்த்துவதோ, தன் சிலுவை எடுத்து குருவை பின்பற்றுவதோ போன்ற ஜீவியத்தை மறுத்து, தங்கள் ஊரார்களைப் போலவே மாய மகிமையை தேடியவர்கள்.

இந்த இரண்டு பேரும், கிறிஸ்தியானோடு கைகோர்த்து பயணம் செய்வதைப்போல் மாயம் செய்தார்கள்.



ஆனால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், அவர்களின் மாயம் வெளுத்துப் போனது.

சேர்ந்து சென்ற அந்த பயணத்தின்போது **'துன்பத்தின் மலை'** ஒன்றை சந்தித்தார்கள். நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் எதிர்ப்பும், உபத்திரவங்களும் வரும் என இயேசு கூறியிருந்தார். இந்த சரியான நேரத்தில்தான் மாயமான இந்த கிறிஸ்தவர்களின் உண்மை நிலை வெளியானது.

எனவே இந்த இரண்டு மாய்மாலக்காரர்களில் ஒருவன் அந்த மலையில் ஏறுவதற்கு பதிலாய் *'அபாயம்'* என்ற எளிய வழிக்கு திரும்பினான். இன்னொருவன் *'அழிவு'* என்ற எளிய வழிக்கு திரும்பி நடந்தான். இந்த இடத்தில் கிறிஸ்தியானும் அந்த மலையைக் கண்டு சற்று சோர்வடைந்தாலும், **அந்த மலை வாரி வழங்கிய நீர் ஊற்றை** கண்டான்.

தன்னைத் தாழ்த்தி, முழங்கால்படியிட்டு, அந்த ஊற்றுக்கண்ணின் தண்ணீரை பருகி பருகி புத்துணர்ச்சி பெற்றான். அந்த ஜீவத்தண்ணீரே 'பரிசுத்தாவியானவர்!' நாம் சோர்ந்து போகும் நேரமெல்லாம், கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்க 'பரிசுத்தாவியானவரே' நமக்கு எப்போதும் உதவி செய்கிறார்! பரலோக ராஜ்ஜியத்தின் வழி 'அநேக உபத்திரங்களை' கடந்து செல்லும் வழி என்பதை அநேகர் அறிவதில்லை! ஆதி அப்போஸ்தலர்களோ, துன்பத்தின் பாதையை, தாங்கள் சரியான வழியில் போய் கொண்டிருக்கிறோம் என்பதை அறியும் அடையாளமாய் பெற்றிருந்தார்கள். எனவேதான், "அநேக உபத்திரவங்களின் வழியாய்" தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்! என

அப்போஸ்தல நடபடிகளில் பவுல் கூறியதை நாம் காண்கிறோம்!



கிறிஸ்தியான் அந்த மலையை ஏறிக்கடந்தவுடன், களைப்புடன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அப்போது அவனிடம் பெருமை சற்று தலைதூக்கி, தான் பெற்ற அனுமதி சுருளைக் குறித்தும், ஜெயமாய் கடந்து வந்த பாதையைக் குறித்தும் **மேன்மை பாராட்டி 'பெருமைக்கு' இடம் கொடுத்தான்!** ஒரு மனிதன் பெருமை அடையும்போது என்ன சம்பவிக்கும்? இதுபோன்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் ஆவிக்குரிய தூக்கத்திற்குள் சென்று விடுவார்கள்.

இவர்களின் எண்ணத்தில், அன்று தேவாலயத்தில் நின்றவனைப் போலவே "நான் மற்றவர்களைப் போல் இல்லை..... சிறந்த வழியில் நடந்து வருகிறேன்" என்ற ஆவிக்குரிய பெருமையின் எண்ணத்தால் ஆட்கொள்ளப்படுகிறார்கள்! இவர்கள் சந்திக்கும் இந்த அபாயமே, ஆவிக்குரிய வளர்ச்சியை ஸ்தம்பித்திடும் **கொடிய ஆவிக்குரிய தூக்கமாகும்!** இதுபோன்ற "வளர்ச்சியில் ஸ்தம்பிக்கும் நிலை" நம்மில் ஒருவருக்காவது ஏற்படாது இருக்க தேவன் கிருபைச் செய்வாராக!

பெருமையின் எண்ணம் கிறிஸ்தியானுக்கு வந்த உடன் வளர்ச்சியில் குன்றி ஆவிக்குரிய தூக்கத்திற்குள் சென்றுவிட்டான். இந்த நிலையில், அவன் பெருமைக்கு காரணமான 'அனுமதி சுருள்' அவன் கையிலிருந்து நழுவி, அவன் உட்கார்ந்திருந்த ஆசனத்திற்கு பின்னே கீழே விழுந்து விட்டது. ஆகிலும், தன்னிடமிருந்து அந்த 'இரட்சிப்பின் சுருள்' கீழே விழுந்ததை அறியாதவனைப் போல் இருந்தான். ஒன்றை இழப்பதும், அவ்வாறு இழந்ததை அறியாது இருப்பதும், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு அபாயம் நிறைந்த நிலை என்பதை அறியுங்கள்!



ஆகிலும், கிறிஸ்தியான் திடீரென்று விழித்துக் கொண்டான். மீண்டும் தன்னை துரிதப்படுத்திக்கொண்டு, அந்த குன்றின் மேல் நடந்து சென்றான். அச்சமயத்தில், தாங்கள் சென்ற பாதையிலிருந்து திரும்பி ஓடிவந்த இரண்டு நபர்களைக் கண்டான். ஒருவனுடைய பெயர், **பயந்தவன்!** மற்றொருவனுடைய பெயர், **சந்தேகிப்பவன்!**

அவர்கள் திரும்பி ஓடி வந்த போது "வழியில் சிங்கம்...சிங்கம்" என அலறினார்கள். இதைக் கேட்ட கிறிஸ்தியானும் கிலேசம் அடைந்தான். இந்த சூழ்நிலையில், தான் வைத்திருந்த அனுமதி சுருளில் ஏதேனும் வழியோ அல்லது ஆறுதலோ இருக்கிறதா? எனக் கண்டறிய முயன்ற போது, அவன் பெற்றிருந்த சுருள் காணாமல் போனதைக் கண்டான்!

**கிறிஸ்தவ ஜீவியத்தில், எப்போதெல்லாம் பயம் வருகிறதோ, அப்போதெல்லாம் தேவனுடைய வசனத்தில், ஆறுதலான வாக்குதத்தங்கள் உண்டு. பயந்திருக்கும் நம்மிடம் "நீ பயப்படாதே, நான் உன்னைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் நின்று காப்பேன்!" என்றெல்லாம் கூறி நம்மைத் தேற்றுவார்!**

ஆனால், தன்னிடம் தரப்பட்ட சுருள் காணாமல் போனதை உணர்ந்து, கிறிஸ்தியான் திரும்பவும் பின்பாக ஓடிச்சென்று அவன் அமர்ந்திருந்த ஆசனத்திற்கு கீழ் கிடந்த சுருளைக் கண்டுபிடித்தான்.

நம் யாவருடைய ஜீவியத்திலும் "**இரட்சிப்பின் நிச்சயமாகிய இந்த சுருள்**" நம்மோடு எப்போதும் இருக்க வேண்டும். யாரெல்லாம் இந்த இரட்சிப்பின் நிச்சயத்தை இழக்கிறார்களோ, அதுபோன்ற ஜனங்களே பயந்து, திரும்பி ஓடி வந்து, பின்மாறுவார்கள்.

ஆனால் யோவான்.6:37 கூறுகின்ற ஆச்சரியமான வசனமாகிய

“என்னிடத்தில் வருகிற ஒருவனையும், நான் புறம்பே தள்ளுவதில்லை” என்பதை மறவாமல் நாம் ஆண்டவரிடமே திரும்பிச் செல்ல வேண்டும்.



இதுபோன்ற ஆறுதலான இயேசுவின் வார்த்தைகள், நமக்கு மீண்டும் ‘இரட்சிப்பின் நிச்சயத்தை’ நம் இருதயத்திற்கு தந்துவிடும். இப்போது, தன்னுடைய தவறுக்கு வருந்திய கிறிஸ்தியான், இரட்சிப்பின் நிச்சயத்தையும் அது வழங்கும் சந்தோஷத்தையும் திரும்பப் பெற்றான்!



# 6

## 'இம்மானுவேல் தேசம்' காண்பித்த சபை!

உற்சாகமடைந்த கிறிஸ்தியான், தன் பயணத்தை தொடர்ந்தபோது காரிருள் நேரமாய் இருந்தது. ஆகிலும், திடமனதோடு முன்னேறியபோது, ஓர் ஆச்சரியமான மாளிகையை கண்ணுற்றான்! அந்த மாளிகையின் பெயர் **'வசீகரம்'** என்பதாகும். இந்த இருள் நேரத்தில், எப்படியாகிலும் அந்த மாளிகைக்கு சென்றுவிட விரும்பினான்.



அச்சமயத்தில் வழி அருகே அந்த இரண்டு சிங்கங்களை சந்தித்தான். அந்த சிங்கங்கள், அந்த மாளிகையின் அருகாமையில் இருந்தபடியால் திடுக்கிட்டான்.

அச்சமயத்தில் அந்த அரண்மனைக் காவலாளி "நீ ஒன்றுக்கும் பயப்படாதே! அது பிசாசுதான், ஆகிலும் அவைகள் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதைப் பார்!" என சத்தமிட்டான். அந்த இடுக்கமான பாதையின் விளிம்பின் ஓரம் வரை மாத்திரமே இந்த சிங்கங்கள் வர முடிந்தது அல்லாமல், இடுக்கமான பாதைக்குள் அவைகள்

வரமுடியாதபடி சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. ஒருவன் இடுக்கமான பாதையின் வழியாய் வராமல், விலகி.... விசால வழிக்குள் சென்றால் இந்த சிங்கங்கள் அதுபோன்றவர்களை நிச்சயமாய் பீறிப்போடும்! இந்த சிங்கங்கள் எவ்வளவு கர்ஜனை செய்தாலும், நம்மைத் தீண்ட முடியாது என்பதை நாம் உறுதியாய் அறிந்திருக்க வேண்டும்!

ஆகவே, சிங்கம் போன்ற கடினமான சூழ்நிலை வரும்போதெல்லாம் ஏசாயா 35 - ம் அதிகாரத்தில் வாசிப்பது போல் "உன்னத பாதையில் நடந்து வருவோரை, சிங்கங்கள் மேற்கொள்வதில்லை" என்ற வசனத்தையே நாமும் நினைவுகூர்ந்திட வேண்டும்!

தன் பயணத்தின் முடிவாக, ஒரு அரண்மனைக்கு கிறிஸ்தியான் வந்து சேர்ந்தான். அவனை வரவேற்ற வாசல் காவலாளி, அங்கே அன்று இரவு தங்கிச் செல்லும்படி கூறினான். அந்த அரண்மனை வீடானது **'ஞானம்' என்ற மிக கவனமுள்ள சகோதரியினால்** பராமரிக்கப்பட்டு வந்தது. கிறிஸ்தியான் மேற்கொண்ட பயணத்தில் வரும் அனைவருக்குமே ஒரு பெயர் இருந்தது.



அது அவர்களின் குணாதிசயத்தின்படி கெட்ட குணத்தின் பெயராகவோ! அல்லது நற்குணத்தின் பெயராகவோ! இருந்தது.

ஜீவனுள்ள தேவனுடைய சபையை ஆண்டு நடத்தும் மிக முக்கியமான பங்காய் ஞானம் விளங்குகிறது. இந்த கிறிஸ்தியானை, அந்த அரண்மனை வீட்டிலிருந்த மூன்று சகோதரிகளுக்கு, சகோதரி ஞானம் அறிமுகப்படுத்தி வைத்தாள். முதல் சகோதரியின் பெயர், **தேவ பக்தி.** இரண்டாவது சகோதரியின் பெயர், **விழிப்புள்ளவள்.** மூன்றாவது சகோதரியின் பெயர், **திவ்ய அன்பு!** இந்த மூன்று குணாதிசயங்களும் தேவனுடைய சபைக்கு மிகுந்த அவசியமாயிருக்கிறது.

அதில் பிரதானமான முக்கியத்துவம் ஞானமே ஆகும்! தேவ பக்தியான யாவரும் இந்த உலகத்தோடு சிறிதேனும் கலந்துவிடாதபடி கவனமாயிருப்பதும், தேவனிடத்தில் அன்புகூர்ந்து பிறரிடத்தில் அன்புகூர்வதுமே அந்த மூன்று முக்கிய குணாதிசயங்கள்!



இந்த அரண்மனையைப் போன்றதாகவே சபையும் இருக்கிறது. மேற்கண்ட குணாதிசயங்கள் சபையில் இருந்தால் மாத்திரமே, நாம் கிறிஸ்துவுக்குள் முன்னேறி வளர்ந்திட முடியும்.

ஞானம், கிறிஸ்தியானைப்பார்த்து "பரலோக இராஜ்ஜிய பிரபு, இந்த அரண்மனையை ஏற்படுத்தி, இங்கு வருபவர்களை உற்சாகப்படுத்தும்படி கட்டளையிட்டுள்ளார்" எனக்கூறினார். ஆம், அதுவே மெய்யான **சபையாகிய அரண்மனை!** உலகத்தின் பல பாகங்களிலும் இந்த அரண்மனை வீடு ஸ்தாபிக்கப்பட்டு, அங்கு வருபவர்களை 'இடுக்கமான ஜீவ பாதை வழியாய்' தொடர்ந்து பயணம் செய்ய உற்சாகப்படுத்தும் அவரது சபை!



கிறிஸ்தியான், பயணத்தில் களைப்பாய் இருந்தபடியால், அவன் இளைப்பாறும்படி ஒரு விருந்தினர் அறையை திறந்து கொடுத்தார்கள்.

அந்த அறையின் பெயர் **'சமாதானம்'** என்பதாகும். நாம் அனைவருமே இரவு நேரத்தில் இளைப்பாறுகிறோம். நம் இளைப்பாறுதல் சமாதானமா யிருக்க வேண்டும். எபே.4:26 கூறுகிறபடி "சூரிய அஸ்தமனம் ஆவதற்கு முன்பாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது!" எனக்கூறும் புத்திமதியைக் காண்கிறோம். பகல் நேரத்தில் ஏராளமான பாடுகளைக் கடந்து நாம் சென்றிருக்கக் கூடும். அவ்வேளையில், நிதானமிழந்து கோபப்பட்டிருக் கலாம்.... அதை உடனே மன்னிக்கும்படி ஆண்டவரிடம் ஒப்புரவாக வேண்டும்! இவ்வாறாக, நீங்கள் படுக்கைக்குச் செல்லுகின்ற நேரத்தில் உங்கள் இருதயத்தில் **'பூரண சமாதானம்'** இருந்திட வேண்டும். 'அலைகழிக்கும் மனதோடு' நாம் ஒருபோதும் படுக்கைக்குச் செல்லக் கூடாது! யாரோ ஒரு சிலரைக் குறித்தோ அல்லது ஒரு சூழ்நிலையைக் குறித்தோ நமக்குள் சமாதானம் இழந்து இருக்கவே கூடாது! உங்கள் கவலையெல்லாம் ஆண்டவர் மீது வைத்து விட்டு, எந்த பிரச்சனை யானாலும் அவரிடம் தெரிவித்துவிட்டு ..... பின்பு அவரிடம், நீங்கள் மறவாமல் **'நன்றி'** கூறின பிறகு, தேவ சமாதானம் உங்கள் இருதயத்தை காத்துக்கொள்ளும்! **நன்றி உள்ளத்தோடு நித்திரை செய்கிறவர்கள்,** விடியும் நேரம் வரை, மிகுந்த சமாதானத்துடன் நித்திரைச் செய்து எழுவார்கள்.



தங்கள் நித்திரைக்கு இவர்கள் பயன்படுத்தும் 'தலையணை' என்ன தெரியுமா? "ஓர் சுத்த மனசாட்சி!" நீங்கள் படுக்கும் ஒவ்வொரு இரவும் இந்த தலையணையை மாத்திரமே உபயோகித்து நித்திரை செய்யுங்கள்!

ஞான சகோதரி, அடுத்த நாளில் கிறிஸ்தியானை ஒரு ஆயுத சாலைக்கு அழைத்துச் சென்றாள். **அங்குள்ள ஆயுதங்கள், பிசாசிடம் யுத்தம் செய்யும்படி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள்!** அரைக்கச்சை, பாதரட்சை,

*தலைச்சீரா, கேடயம் மற்றும் கருக்குள்ள பட்டயம் ஆகியவைகளால் நிறைந்திருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து சர்வாயுத வர்க்கங்களும், ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவனுக்கும் தேவையா யிருந்தது. இதைக் குறித்த விளக்கத்தை எபேசியர்.6:11-18- ம் வசனம் வரை வாசிக்கிறோம். சத்தியம் என்னும் அரைக்கச்சை, சுவிசேஷத்தை அறிவிக்க சென்றிட 'ஒருபோதும் பிய்ந்து போகாத' பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், நீதி என்னும் மார்க்கவசம், இரட்சண்யம் என்னும் தலைச்சீரா..... ஆகிய இவையாவும் சாத்தானுக்கு விரோதமாய் யுத்தம் செய்வதற்கு மிக அவசியம் ஆகும்!!*



பின்பு அந்த அரண்மனையின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்று, தூரத்தில் தோன்றிய அழகு நிறைந்த மலைகளைக் காட்டினாள்! பசுமையான திராட்சை தோட்டங்களையும் காட்டினாள்! நறுமணம் நிறைந்த மலர் தோட்டங்களையும் காட்டினாள்! இவைகளைக் காட்டியபின்பு "**இதுவே இம்மானுவேலின் தேசம்**" என மகிழ்ந்து கூறினாள். மேலும் கிறிஸ்தியானைப் பார்த்து "நீ பரலோக இராஜ்ஜிய நகரத்திற்குள் போவதற்கு முன்பாக, இந்த அழகுள்ள இம்மானுவேல் நகரத்தையும் கடந்துச் செல்வாய்! இந்த அழகு நகரம் உன் உள்ளத்திற்கு விசுவாசத்தையும் தைரியத்தையும் தருவதாக!" எனக் கூறி முடித்தாள்!



# 7

## 'பிசாசை எதிர்த்து' முன்னேறிய கிறிஸ்தியான்

ஞானசகோதரி அழைத்துச் சென்ற ஆயுத சாலையில், கிறிஸ்தியான் தன்னை சர்வாயுதவர்க்கத்தாலும், தன்னை தரித்துக் கொண்டான். அவன் தலையை, ஓர் தலைகவசத்தால் அணிந்து கொண்டான். அவன் பாதத்தை வலிமையான இரும்பு போன்ற பாதரட்சையால் தொடுத்துக் கொண்டான்.



அவனுக்கு கொடுக்கப்பட்ட மார்பு கவசத்தை அணிந்து கொண்டான். மார்பு கவசமானது, **சத்துருவின் எந்த தாக்குதலையும்** எதிர்கொண்டு, அவனை பாதுகாப்பதாயிருந்தது! பின்பு, வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் வாங்கிக் கொண்டான்.... அதுவே, **சாத்தானுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு** உதவுவதாய் இருந்தது! இதுதான், ஒரு சபையினுடைய ஊழியமாயும் இருக்கிறது!

ஏனெனில், கிறிஸ்தியான் பிரவேசித்த அரண்மனை, ஒரு ஸ்தல சபையை சித்தரிப்பதாகும். **அந்த உத்தமமான சபையில்,** ஜனங்கள்

சத்துருவை எதிர்த்து நிற்கும் திராணியாகிய 'சர்வாயுதவர்க்கத்தையும்' பெற்றுக்கொள்ளவே ஊழியம் செய்கிறார்கள்! அதன் மூலமாய், அந்த வாரம் முழுவதும் உலகத்தில் அவர்கள் சந்திக்கும் சத்துருவின் எதிர்ப்புகளை எதிர்கொண்டு செல்வதற்கு, சபையின் மூலமாய் பெலன் அடைகிறார்கள்!

சர்வாயுதவர்க்கத்தையும் அணிந்த கிறிஸ்தியான் ஒரு பெரிய பள்ளத்தாக்கிற்குள் பிரவேசித்தான். அந்த பள்ளத்தாக்கு சிறுமைப் படுவதும், ஏராளமான பாடுகளும் நிறைந்த பள்ளத்தாக்காயிருந்தது.



உள்ளே பிரவேசித்த கிறிஸ்தியானை **'அப்பெல்லியோன்' என்ற பிசாசு** கிறிஸ்தியானை பயங்கரமாய் தாக்க வந்தான். அவ்வளவு பெரிய பிசாசை கண்ட மாத்திரத்தில், கிறிஸ்தியான் சற்று தடுமாறி நின்றான்.

ஏனெனில் இதுபோன்ற எதிரியையும், யுத்தத்தையும் தன் வாழ்க்கையில் முன்பு அவன் எதிர்கொண்டதில்லை! பின்பு விழிப்படைந்த கிறிஸ்தியான், சாத்தானை எதிர்க்க வல்ல ஆயுதமாகிய பட்டயத்தை உறுதியாக பிடித்துக் கொண்டான். அந்த பட்டயத்திற்கு பெயர் 'தேவனுடைய வார்த்தை!'

இயேசுவையும், பிசாசானவன் இவ்விதமாய் தாக்க முயன்றபோது, ஆவியின் பட்டயமாகிய இந்த வேதவசனத்தை மாத்திரமே உறுதியாக பிடித்து நின்றார். அவனைப் பார்த்து "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல....." என எழுதப்பட்ட வசனத்தையும், "உன் தேவனாகிய கர்த்தரை சோதித்துப் பாராதிருப்பாயாக" என எழுதப்பட்ட வசனத்தையும், "உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரையே ஆராதிப்பாயாக" என எழுதப்பட்ட வசனத்தையும் ....

**இவ்வாறு, சாத்தானை எதிர்கொண்ட ஒவ்வொரு நேரத்திலும் எழுதப்பட்ட தேவனுடைய வசனத்தை வைத்தே ஆவியின் பட்டயத்தால் பிசாசானவனை இயேசு தாக்கினார்! பிசாசானவன் அவரிடம் தோற்றுப் போய் ஓடிவிட்டான்!**



ஏனென்றால், இயேசு கிறிஸ்து “வேத வசனத்தின்” பட்டயத்தை உபயோகித்தார்.... அவ்வளவுதான். இதுவே நம் யாவருக்கும் ஓர் நல்ல மாதிரி! வேத வசனத்தை மனதில் வைத்திருப்பதும், அதை சாத்தானுக்கு விரோதமாக பயன்படுத்தி தாக்குவதுமே **நமது ஜெயம்!** சாத்தானின் எதிர்ப்புகள் எவ்வளவு இருந்தாலும்.... தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது “தேவன் எனது இரட்சகர்!” மற்றொரு தாக்குதலில், தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது “என் பாவங்களை இனியும் ஒருபோதும் மீண்டும் நினைத்திட மாட்டார்!” மற்றொரு தாக்குதலில் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது “அவர் என்னைவிட்டு விலகுவது மில்லை என்னை கைவிடுவதுமில்லை!”.... இவ்வாறாக, வேத வசனத்தை நாம் பயன்படுத்தும்போது, நாம் பயந்திட மாட்டோம்..... ஜெயித்து வாழ்வோம்!

இதனிமித்தமே, நாம் வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்து வைத்திருப்பது நல்லது! வேத வாக்கியங்களில் உள்ள ஆச்சரியமான வாக்குதத்தங்களை, நம் மனதில் ஏராளமாய் வைத்திருக்க வேண்டும்! அதுபோலவே **விசுவாசம் என்னும் கேடகம்** “தேவன் உன்னை நேசிக்கவில்லை” என கொண்டு வரும் சூழ்நிலை அவிசுவாசத்தை ஜெயம் கொள்கிறது! விசுவாச கேடகத்தைப் பிடித்த நீங்களோ “அப்படி இல்லை, தேவன் மெய்யாகவே என்னை நேசிக்கிறார்!” என விசுவாச கேடகத்தை

*உறுதியாக பற்றிக்கொண்டு, நாம் சாத்தானை ஜெயிக்கிறோம்!*

**எத்தனையோ அவிசுவாசமான எண்ணங்கள் நம்மைத் தாக்கி "உனக்கு கேன்சர் வந்துவிடும்! நடுரோட்டில் உனக்கு விபத்து ஏற்பட்டுவிடும்!....." போன்ற சிந்தை வரும் நேரங்களில் "என் வாழ்வில் சம்பவிக்கும் சிறுசிறு விஷயங் களையும் தேவன் அறிந்திருக்கிறார்" என யோபு.23:10 வசனத்தைக் கூறி, விசுவாச கேடகத்தை உறுதியாகப் பிடித்து அவனை ஜெயித்திட வேண்டும்!**

*யுத்தத்தில் நின்ற கிறிஸ்தியானுக்கு, எல்லா போர்களிலும் நடப்பதைப் போலவே, சில காயங்கள் ஏற்பட்டது. ஏனெனில், கிறிஸ்தியான் அப்பொல்லியோன் பிசாசிடம் ஆறு மணி நேரங்கள் நின்று போராடினான். நீண்ட யுத்தத்தால் கிறிஸ்தியான் சோர்ந்து போய்..... கடைசியாக உரத்த சத்தமிட்டு "இவை எல்லாவற்றிலும் கிறிஸ்து இயேசுவுக்குள் என்னை முற்றிலும் ஜெயம் பெறச்செய்திடும் என்னை அன்புகூர்ந்த தேவன்" (ரோமர்.8:37) எனக்கூற, இந்த வசனத்தை அப்பொல்லியோன் கேட்டவுடன், தன் வாலை சுருட்டிக்கொண்டு, திரும்பித் தோற்று ஓடிவிட்டான்! ஏனெனில், வேதம் அவ்வாறாகவே "பிசாசை எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்!" என்றே கூறுகிறது. ஆம், அவன் உங்களை விட்டு நடந்து அல்ல, ஓடிப் போவான் என்றுகூட இல்லை.... ஆங்கில வேதாகமம் கூறுகிறபடி உங்களைவிட்டு பறந்தே போய் விடுவான்!*



# 8

## ஜெபம் இல்லாமல், பயணத்தில் ஜெயம் இல்லை!

**பி**சாசை எதிர்த்து நின்ற யுத்தத்தில், அவன் தோற்று ஓடிப் போய் விட்டதைக் கண்ட கிறிஸ்தியான் மகிழ்ச்சி அடைந்தான்.



ஆகிலும் அவன் உடம்பில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த தக்க சமயத்தில், பரத்திலிருந்து ஒரு கரம் தோன்றி **சில ஜீவ இலைகளை** கிறிஸ்தியான் கரத்தில் கொடுத்தது. அதைப்பெற்ற அவன் பூரண சுகம் அடைந்தான்! அதுமாத்திரமல்லாமல், தன் இருதயத்தில் மிகப்பெரிய **ஆறுதலை அடைந்தவனாய்,** தேவனோடு ஒப்புரவாக வேண்டிய பகுதிகளை அறிக்கை செய்து திட மனதோடு எழுந்து நின்றான்! பின்பு தன் சர்வாயுதவர்க்கத்தோடு கெம்பீரமாய் புறப்பட்டுச் சென்றான். கிறிஸ்தியான் சந்தித்த முதல் போராட்டத்தில் அடைந்த வெற்றி, இனி அடுத்தடுத்து வரப்போகின்ற போராட்டங்களை ஜெயிப்பதற்குரிய பெலனை அவனுக்குத் தந்தது!

அச்சமயத்தில், இரண்டு பேர் பயத்துடன் ‘பின்னோக்கி’

ஓடிவந்தார்கள். நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திலும், பின்மாற்றமடையும் கிறிஸ்தவர்களை நாம் அவ்வப்போது சந்திக்க நேரிடும்.



இவர்கள் கிறிஸ்தியானைப் பார்த்து "எங்களைப் போல் திரும்பிவிடு! திரும்பி விடு! அநேக ஆபத்துகள் உனக்கு முன்னால் இருக்கிறது!" என பீதியுடன் கிறிஸ்தியானை அழைத்தார்கள். ஆனால் கிறிஸ்தியானோ, ஏற்கெனவே சங்கிலியால் கட்டப்பட்ட சிங்கத்தை சந்தித்திருக்கிறான், பிசாசை எதிர்த்து யுத்தத்தில் சந்தித்திருக்கிறான்! .....ஆகவே, 'அவர்களின் பயத்தின் கூப்பிடுதல்' கிறிஸ்தியானை அசைத்திட முடியவில்லை.

**பல வருடங்களாய் இருக்கும் நமது கிறிஸ்தவ நல்ல நண்பர்கள் கூட, திடீரென பின்மாற்றமடைய முடியும். சபைக்கு திடீரென நின்றுவிட்ட இவர்கள், பின்பு அவர்களை காணமுடியாதபடி நிரந்தரமாய் பின்மாறி போகிறார்கள். நாமோ, இதனிமித்தம் அசைக்கப்படவே கூடாது!**

முன்னேறிச் சென்ற கிறிஸ்தியான், மிகவும் குறுகலான ஒரு பாதை வழியாய் கடந்துச் சென்றான். அந்த பாதையின் ஒரு பக்கம், பல ஆயிரம் ஆழம் கொண்ட நெருப்பின் தனல் வீசிக்கொண்டிருந்தது. பாதையின் அடுத்த பக்கம் உளையான சேறு, அமிழ்த்திவிட காத்திருந்தது. அந்த பள்ளத்தில் இருந்த நெருப்பு சீறி எழுந்து, அச்சுறுத்தும் பல குரலும் கேட்டது. அதன்மேல், அசுத்த ஆவிகள் செட்டை விரித்து பறந்தன.

இந்த இக்கட்டு நேரத்தில், தன்னிடம் உள்ள பட்டயம் போதுமான வலிமை அற்றதைப்போல் கிறிஸ்தியான் உணர்ந்தான்! ஆகவே, முழங்கால் படியிட்டு பரத்தின் உதவியை நாடி ஜெபிக்கத் தொடங்கினான். உண்மைதான், தேவனுடைய வார்த்தை மாத்திரம் போதுமானதாய் இராமல், ஜெபத்தின் உதவியை நாடி 'ஆண்டவரே உமது

*கிருபையைத் தாரும்'* என ஜெபிக்கத் தொடங்கினான். "**சகலவிதமான வேண்டுதலும், ஜெபமும்**" **வேத வசனத்தைப் போலவே, பிசாசை எதிர்த்து ஜெயித்திட வலிமையான ஆயுதம்** *என எபேசியர்.6:18 கூறுகிறது. கிறிஸ்தியான் ஜெபித்து முடித்தவுடன், புதுபெலன் கொண்டு எழுந்து நின்றான்.*



*பின்பு* "**கர்த்தராகிய என் ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு முன்னேறி நடப்பேன்!**" *என்ற சங்கீதம்.71:16-ம் வசனத்தை அறிக்கைச் செய்து, தைரியமுடன் நடந்தான். இவ்வாறு கர்த்தருடைய வார்த்தையை அறிக்கை செய்வதும், அதன் மூலம் நாம் தைரியத்தையும், உதவியையும் பெறுவது, ஓர் ஆச்சரியமான செயலாகும்!*



# 9

## சாத்தானின் தந்திரத்திலிருந்து காத்த கர்த்தர்

கிறிஸ்தியான் தொடர்ந்து முன்சென்றபோது, அவன் கண்களால் காண முடியாத இரண்டு பிசாசுகள், அவனுடைய காதுகளில் பலவிதமான தீமையான மொழிகளைக் கூறின! அவனை சஞ்சலப் படுத்தும்படியான அவிசுவாச வார்த்தைகள்! அவனை தீட்டுப்படுத்தும் படியான பிறர் மீது கொண்ட கசப்புகள்! அவனை சோர்வடையச் செய்யும்படியான அதைரிய வார்த்தைகள்!

நாமும் கூட, சில சமயங்களில் இதுபோன்ற வார்த்தைகளை நம் காதுகளில் கேட்க முடியும்..... அவை யாதொன்றும் பரிசுத்தாவியின் மூலமாய் வருவதல்ல! பிசாசு தரும் நூதனமான "பிறர்மீது சந்தேகப்படும் எண்ணங்கள்" மற்றும் பிறருடைய செயலுக்கு 'இதுதான் காரணம்' எனக்கூறி நம் உள்ளத்தில் பகை கொண்டு வர செய்யும் அவனுடைய முயற்சிகள்.... ஆகிய கெட்ட நோக்கங்களையும், கெட்ட காரணங் களையும் நம் உள்ளத்தில் போடுவான். இது அனைத்தும், பரிசுத்தாவி



யானவர் வழங்கும் நல்ல நோக்கத்திற்கும், நல்ல காரணத்திற்கும் நேர்மாறான சிந்தைகளாகும்! இதுபோன்ற சம்பவம் உங்களுக்கு ஏற்படும்போது, 'இங்கே தரப்பட்டுள்ள' பிசாசு காதில் முனுமுனுப்பது

போன்ற காட்சியை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

**இதுபோன்ற பிசாசின் முனுமுனுப்புகளை கவனித்து கேட்டவர்களின் 'கணவன் மனைவி வாழ்க்கையில்' ஏராளமான பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. 'ஒருவரைப்பற்றி' ஒரு காதில் பேசும் பிசாசின் சத்தம், மறுகாதில் இன்னொருவரைப் பற்றி பேசும் பிசாசின் சத்தம்.... இவைகளையெல்லாம் கேட்டு, கேட்டு கணவனும் மனைவியும் அன்பிலும் ஐக்கியத்திலும் வீழ்ச்சி அடைகிறார்கள்!**

எப்போதெல்லாம் தெய்வ அன்பிற்கு சேதம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்த காட்சியை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால் கிறிஸ்தியானோ, இதே சமயத்தில், **பரிசுத்தாவியின் குரலை** தன் இருதயத்தில் கேட்டுவிட்டான். இந்த கிறிஸ்தியான் பரிசுத்தாவியின் குரலுக்கு மாத்திரமே செவிகொடுத்து ஆச்சரியமான விடுதலையைப் பெற்றான். அவன் உடனே தன் பாவங்களை தேவனிடம் அறிக்கைச் செய்து, தேவனுடைய வார்த்தையை விசுவாசத்துடன் கூறி சாத்தானை ஜெயித்து முன்னேறினான்!



அச்சமயத்தில், திடீரென்று இருள் விலகி வெளிச்சம் உதித்தது. அச்சமயம், தான் கடந்து வந்த பாதையை கிறிஸ்தியான் திரும்பி பார்த்தான். "ஆ, இவ்வளவு இடுக்கமான வழியாகத்தான் நான் நடந்து வந்தேனா? ஆகிலும், நான் எப்படி கீழே விழவில்லை? இது, நிச்சயமாய் ஆண்டவரின் செயல்! அவரே என்னை கால் வழுவாமல் என்னை காத்துக் கொண்டார்" எனக் கூறி வியந்தான்.

*இதுபோன்ற சமயங்களில், நீங்கள் வீழ்ச்சியடையாது வாழ்ந்த வாழ்க்கைக்காக ஒருக்காலும் மேன்மை பாராட்டாதிருங்கள். அதாவது "நானே இந்த வழியில் நடந்து ஜெயம் பெற்றேன்! எனக்கூறாமல்,* **கர்த்தரே எனக்கு ஜெயம் தந்தார்**" *என அறிக்கைச் செய்யுங்கள். இவ்வாறாகவே நாமும் கூட, கர்த்தர் நம்மை 'இடது வலதுபுறம் சாயாமல்' நடத்தி வந்த பாதைகளை நாம் திரும்பிப் பார்த்து தியானிப்பது நல்லது.*

*அது, சில சமயம் சரீர மரணத்திற்கு ஏதுவான சம்பவமாயிருக்கலாம் அல்லது ஒரு சாலையின் விபத்தாய் இருக்கலாம், அல்லது கள்ள உபதேசங்களால் தவறிச் சென்ற வழிகளாய் இருக்கலாம்..... ஆகிய இவை அனைத்தும், நமக்கு தீங்கு செய்ய வந்த அபாயங்கள்! நீங்கள் திரும்பிப் பார்த்து, தேவன் உங்களை அபாயங்களிலிருந்து விடுவித்த செயல் களுக்காக "ஓ கர்த்தாவே, எத்தனையோ அபாயங்களிலிருந்து எங்களை காத்தீரே!" என்ற நன்றியின் ஜெபம் உங்கள் உள்ளத்தில் எழும்புவதாக! அல்லேலூயா.*



# 10

## வீழ்ச்சியில் கை தூக்கிய உண்மையுள்ளவன்

நம் ஜீவப்பாதையில் அபாயங்களைக் கடந்து செல்லும்போது, கர்த்தர் நம்மைக் காத்த விதத்தைத் 'திரும்பிப் பார்த்து' பெலனடைவது தேவன் நமக்குத் தந்த ஒரு வழியாயிருக்கிறது! ஒரு பாடல் வரியைப் போல் *"கடந்த நாளில் நீர் எனக்கு காட்டிய உமது அன்பைக் குறித்த தியானமே, பின்வரும் நாளில் நான் வீழ்ந்து விடுவேனோ? என்ற அச்சத்தை, என் உள்ளத்திலிருந்து எடுத்துவிட்டது!"* என்ற வாசகம், நமக்கு மிகுந்த உற்சாகமளிக்கிறது. பழைய ஏற்பாட்டில் சாமுவேல் தீர்க்கதரிசி ஓர் கல்லை நாட்டி **'எபினேசர்'** என பெயரிட்டான். அதற்கு அர்த்தம் 'இம்மட்டும் காத்தவர், இனிமேலும் என்னைக் காப்பார்!' என்பதே யாகும். இதுவே நன்றியுள்ள இருதயத்தோடு நாம் திரும்பிப் பார்த்து, விசுவாசத்தை எதிர்காலத்திற்கென பெற்றுக்கொள்ளும் இரகசியமாகும்!

இப்போது கிறிஸ்தியான் எழுந்து நின்று "கர்த்தருடைய வெளிச்சத்தைக் கொண்டு நான் இருளை கடந்துச் செல்வேன்" என அறிக்கைச் செய்து முன் சென்ற கிறிஸ்தியான், ஒரு குகைக்குள் நுழைந்தான்! அந்த குகையில் **இரண்டு அரக்கர்கள்** இருந்தார்கள். ஒரு அரக்கனுக்குப் பெயர் 'கள்ளமார்க்கம்'. இந்த கள்ள மார்க்கமே கிறிஸ்தவர்களை உபத்திரவத்திற்குள் நடத்தியது. உதாரணமாய் "ரோம சாம்ராஜ்யமும் அவர்களைப் போன்ற மற்ற கிறிஸ்தவரல்லாத மார்க்கங்களும் கிறிஸ்தவர்களைத்" துன்புறுத்தின.

இரண்டாவது அரக்கன் யாரென்றால் 'கிறிஸ்தவர்கள் என பெயர் கொண்ட அரக்கன்' இவர்களும் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி னார்கள். அது ரோம கத்தோலிக்கர்களோ அல்லது புராட்டஸ்டண்ட் பெயரளவு கிறிஸ்தவர்களோ.... இன்னமும் இதுபோன்ற கிறிஸ்தவ மார்க்கத்தார்களே, உத்தம கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்கள். சுமார் கி.பி.1500-வது ஆண்டுகளில், இவர்கள் 'தங்களைப் போன்ற மார்க்க கிறிஸ்தவர் அல்லாதவர்களை' கொலைச் செய்தார்கள். ஒரு கிறிஸ்தவ

சபையிலுள்ள ஒருவன், வேறொரு கிறிஸ்தவ ஸ்தாபனத்திலுள்ள மற்றொருவரை வழக்கு மன்றத்தில் நிறுத்துவான்! இவ்வாறாக பல்வேறு துன்பங்கள் 'பெயர் கிறிஸ்தவர்கள் மூலமாக' உண்மை கிறிஸ்த வர்களுக்குச் சம்பவித்தது!

**இந்த இரண்டு அரக்கர்களுமே, 'புறஜாதியார்கள்' என்ற பெயருக்கு உரியவர்கள். முதலாவது அரக்கன் 'கிறிஸ்தவரல்லாத' அரக்கன்! இரண்டாவது அரக்கன் 'கிறிஸ்தவத்தைக் கொண்ட' அரக்கன்! ..... இவர்கள் கிறிஸ்துவை அறியாமலே கிறிஸ்தவர்கள் என சொல்லிக் கொண்ட 'புறஜாதிகள்!'.**



கிறிஸ்தியான் அந்த குகையில், ஒருவன் தன் தலையில் சிலுவை சின்னம் அணிந்த கிரீடத்துடன் ஒருவனைக் கண்டான். அவன் அநேகமாக கத்தோலிக்க பிஷப்போல காட்சியளித்தான்! அவன் கிறிஸ்தியானைக் கண்டு ஆத்திரமடைந்து, பல கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தியதைப் போலவே கிறிஸ்தியானைப் பார்த்து "உனக்கு எவ்வளவு தைரியம் இந்த இடத்திற்கு வந்து விட்டாய்? உன்னை எரித்து அழிக்க வேண்டும்" என வெகுண்டு பேசினான். சுவிசேஷத்தை அறிவித்ததினிமித்தமே **மோட்ச பயணம்** எழுதிய ஜான் பணியன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஆனால், அச்சமயத்தில் கிறிஸ்தியான் என்ன செய்தான்? அவன் தைரியமுள்ளவனாய் கடந்துச் சென்றான்! ஆத்திரமாய் பேசிய 'பெயர் கிறிஸ்தவ தலைவனோடு' வாக்குவாதம் செய்து தன் நேரத்தை வீணடிக்க கிறிஸ்தியான் விரும்பவில்லை. எனவே மிகுந்த சாந்தத்துடன், தான் நம்பியிருந்த தேவனை சார்ந்து, முன்னேறிச் சென்றான்!



அவன் முன்னேறிச் சென்றபோது, திடீரென்று வேறொருவன் தனக்கு முன்பாக சென்று கொண்டிருந்ததைக் கண்டான். ஏற்கனவே, அந்த இடுக்கமான வழியை காப்பவனிடத்தில், கிறிஸ்தியான் ஒரு கேள்வியை முன்பே கேட்டிருந்தான். "சற்று முன்பு யாராவது இந்த வழி சென்றார்களா?" எனக் கேட்க, அதற்கு அந்த காவலாளி "ஆம், ஒருவன் சற்று முன்பு சென்றான்" என பதில் கூறினார். அந்த நபரை கிறிஸ்தியான் ஆர்வமுடன் தேடிப்பார்த்து, இப்போது அவனைக் கண்டு கொண்டான். முன்சென்ற அந்த சகோதரன் பெயர் "**உண்மையுள்ளவன்**" என்பதாகும். பரமதேசத்தை நோக்கிச் சென்ற மற்றொரு பிரயாணியே, இந்த உண்மையுள்ளவன்! கிறிஸ்தியான் உற்சாகத்துடன் "சகோதரனே சற்று நில்! இதோ நானும் உன்னோடு சேர்ந்துக் கொள்கிறேன்" எனக் கூறினான்.

**அதற்கு உண்மையுள்ளவன் "நான் யாருக்காகவும் என் பயணத்தை தளர்த்தப் போவதில்லை" எனக்கூறி முன்சென்றான். பின்னால் நின்று கொண்டு ஒருவர் கூப்பிட, அதற்கு நம்முடைய பயணத்தை தாமதிப்பது ஓர் நல்ல கிறிஸ்தவமில்லை!**

அந்த உண்மையுள்ளவன் "நீ என்னைத் தொடர்ந்து என்னோடு சேர்ந்து கொண்டால், சரிதான். ஆனால் என் முன்னேற்றத்தை சற்று நிறுத்தி, உன்னையும் சேர்த்துக் கொள்வதற்கு, என் பயணத்தை தாமதிக்க மாட்டேன்" என பதில் உரைத்தான். அதுவே, உத்தம கிறிஸ்தவர்களாகிய நாம் யாவரும் வைத்திருக்க வேண்டிய ஓர் சாட்சியான பதிலாகும்! அரை-குறை இருதயம் கொண்டவர்களுக்காக என் ஓட்டத்தை தளர்த்தாமல், அந்த இடைவெளியை அவர்களாக வைராக்கியமாய் முன்னேறி வந்தால் மாத்திரமே, நாம் சேர்ந்து பயணம் மேற்கொள்ள முடியும். இந்த பதிலைக்

கேட்டவுடன், கிறிஸ்தியான் தன் முழு பெலத்தையும் கொண்டு, அவனை நோக்கி ஓடினான்!



அப்படி ஒரு ஓட்டத்தை ஓடி, உண்மையுள்ளவனைத் தாண்டி முன்னேறினான். அச்சமயத்தில் கிறிஸ்தியான் "இந்த சகோதரனை விட முன்னேறி ஓடி விட்டேன்" என்ற பெருமையின் சிந்தைக்குள் அகப்பட்டு விட்டான்! பெருமை கொள்ளும்போது என்ன நேரிடும்? '**வீழ்ச்சிக்கு முன்னானது பெருமை**' என உலகத்தின் பழமொழி கூட உண்டு! அவ்வாறாகவே கிறிஸ்தியான் வீழ்ச்சியடைந்து விழுந்தான். பெருமை, ஒருவனை எப்போதும் வீழ்ச்சியடையச் செய்யும்! எந்த சகோதரனை அற்பமான சகோதரனாய், தன் பெருமையில் எண்ணினானோ, இப்போது அந்த சகோதரன், கரம் நீட்டி தூக்கி விட்டான்! ஆம் '**உண்மையுள்ளவன்**' முன்வந்து, அவனுக்கு உதவினான். இதனிமித்தமே, நாம் எப்போதும் 'கர்த்தரோடு ஒருமனம் கொண்ட' ஒரு சகோதரனைக் கண்டால், அவனை பெற்றுக்கொண்ட ஐக்கியத்திற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும்!



# 11

## ‘கிறிஸ்தவன்’ என்ற அறிக்கையில் முன்னேற்றம்

ஒரு தாழ்மையான சகோதரனை கண்டதினிமித்தம், நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு அவரோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாகவே கிறிஸ்தியான், தன்னை தூக்கிவிட்ட ‘உண்மை யுள்ளவனோடு’ ஐக்கியம் கொண்டான். தங்கள் பயணத்தில் அடைந்த அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து பேசிக்கொண்டார்கள். எப்போதுமே நாம் பெற்றிருக்கிற சாட்சியை, மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வது, அவர்களை அதிகமாய் ஊக்குவிக்கும்.

**இந்த பூமியில், யாரைக் குறித்தும் தீது பேசாமல், தன்னுடைய ஜீவிய சாட்சியை பகிர்ந்து கொள்வதே பரலோகத்தின் சாயலாகும்!**

நாம் பரலோகம் செல்லும்போது, ஆயிரக்கணக்கான பரிசுத்த வான்களோடு ‘இவ்வாறாகவே’ மகிழ்ந்து நம் சாட்சிகளை பகிர்ந்து கொள்ள காத்திருக்கிறோம். தன்னுடைய சாட்சியை துவங்கிய உண்மையுள்ளவன்:



நான் பயணமாய் வந்த சமயம், எனக்கு ஏற்பட்ட சோதனை ஒரு ஸ்திரீயே ஆவாள். அவள் பெயர் **‘இச்சை மோகினி’**. அவள் என்னைப் பார்த்து, சிரித்து சிரித்து பேசி, கண்களை அங்குமிங்கும் படபடக்கச் செய்து, என்னை மயக்கினாள்! சோதிக்கப்பட்ட நான், வேறுதிசைக்கு வேகமாய் தப்பி ஓடினேன். அவளுடைய மோகமான சம்பாஷணைக்கு ஒரு வினாடிகூட நான் இடம் தரவில்லை. இவ்வாறு பாலிய இச்சையை ‘விட்டு விலகி ஓடுவது’ தேவன் நமக்கு கற்றுக்கொடுத்த சிறந்த வழி!

நீங்கள் எப்போதெல்லாம் ஒரு ஸ்திரீயானவள் தூய்மையற்று இருப்பதை காண்பீர்களோ.... அதை அவளின் கண்களை வைத்து கண்டுபிடிக்கக்கூடும்! அல்லது அவளுடைய ஒழுக்கமற்ற ஆடையை வைத்து கண்டுகொள்ள முடியும்! அவள் நடக்கின்ற விதத்தை வைத்தும் கண்டுகொள்ள முடியும்! அல்லது அவளுடைய பேச்சின் நயத்தை வைத்து கண்டுகொள்ள முடியும்! இதுபோன்ற ‘இச்சை மோகினி’ நீங்கள் வேலை செய்யும் அலுவலகத்தில் இருக்கக்கூடும் அல்லது உங்கள் உறவினர்களா யிருக்கக்கூடும் அல்லது உங்கள் வீட்டின் அருகிலுள்ள அயலகத்தாரா யிருக்கக்கூடும்! அவ்வாறு நீங்கள் காணும்போது ‘இவளிடத்தில் பரிசுத்தத்தின் ஆவி இல்லை’ என்பதை கண்டு தூர ஓடி விடுங்கள்! இதை கண்ட அவள் கோபமடைந்தாள்.

“உனக்கு நல்ல மனம் இல்லை, கலாச்சார பண்பு இல்லை, இப்படியா ஓடுவது?” என கோபத்துடன் சத்தமிட்டாள். அவள் எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும் என உதறிவிட்டு நான் ஓடி வந்து விட்டேன். இவர்களே தன் ஜீவனை காத்து கொண்டவர்கள். அநேகர், அவளிடத்தில் தன் ஜீவனை இழந்து பறி கொடுத்து விட்டார்கள்!



உண்மையுள்ளவன், தொடர்ந்து தன் சாட்சியைக் கூறும்போது 'ஒரு வயதானவரை' நான் கண்டேன்! அவன் பெயர் 'பழைய ஆதாம்'. அவன் என்னை அழைத்து, நீ என் வீட்டிற்கு வா! எனக்கு மூன்று அழகுள்ள மகள்கள் உண்டு! ஒரு மகளின் பெயர், மாம்சத்தின் இச்சை.... இரண்டாவது மகளின் பெயர் கண்களின் இச்சை, மூன்றாவது மகளின் பெயர் ஜீவனத்தின் பெருமை என கூறி வீட்டிற்கு வர கூப்பிட்டான். அவன் தொடர்ந்து கூறும்போது, என்னுடைய மூன்று பெண்களும் நல்ல கலாச்சாரத்தோடு "நீ விரும்பியபடி உன்னோடு நெருங்கி பழகுவார்கள்" என கூப்பிட்டான். கூப்பிட்ட அந்த நபர் வயது சென்றவராயிருந்த படியால், உண்மையுள்ளவன் அவரை பார்த்து "மன்னித்துக் கொள்ளுங்கள் சார்!" நான் வர இயலாது என கூறிவிட்டான். இவ்வாறாகவே, நம்முடைய மாமாவோ அல்லது நீங்கள் மதிக்கின்ற ஒரு நபரோ, உங்களை மாம்சத்தின் இச்சைக்கோ, கண்களின் இச்சைக்கோ, ஜீவனத்தின் பெருமைக்கோ உங்களை நடத்தினால், அதுபோன்ற ஜனங்களைக் குறித்து கவனமாயிருங்கள்! அதை எதிர்த்து நில்லுங்கள்! இவ்வாறாகவே 'உண்மையுள்ளவன்' 'பழைய ஆதாமை விட்டு' ஓடினான்!



இருப்பினும், கோபத்தோடு மோசே உண்மையுள்ளவனை நெருங்கி "அந்த பழைய ஆதாமின் சம்பாஷணையை நீ ஏன் கவனித்து கேட்டாய்?" என ஆத்திரமுடன் கண்டித்தார். உண்மையுள்ளவன், பழைய ஆதாமின் வீட்டிற்குப் போகாவிட்டாலும், அவன் மாம்ச இச்சைக்கு 'சிறிதளவு' தடுமாறியதையும், 'கண்களின் இச்சைக்கு' சிறிதளவு மனம் படபடத்ததையும், ஜீவனத்தின் பெருமைக்கு அவன் உள்ளம் சிறிதளவு ஈர்க்கப்பட்டதையும் கூட, மோசேயின் பிரமாணம், உண்மையுள்ளவனை

ஆக்ரோஷமாக ஆக்கினைக்கு உட்படுத்தியது!

**அதிர்ச்சியில் திகைத்த உண்மையுள்ளவனுக்கு 'ஆண்டவர் இயேசு' வருகை தந்து மோசேயினுடைய ஆக்கினையை அகற்றி மன்னிப்பு அருளினார்!**

உண்மையுள்ளவன் தொடர்ந்து தன்னுடைய சாட்சியை கூறுகையில் **'திருப்தியற்றவன்'** என்ற பெயர் உடையவனை சந்தித்தான்.



இந்த திருப்தி அற்றவன், யாதொன்றைக் குறித்தும் மகிழ்ச்சியாய் இருக்க மாட்டான்! எதைக் குறித்தும் எப்போதும் முறுமுறுப்பும், குறை சொல்லுதலும் கொண்டிருப்பான். இதுபோன்றவர்களை நாம் பலமுறை சந்திக்கிறோம்! அவர்கள் எதை குறித்தாகிலும் முறுமுறுத்து கொண்டே இருப்பார்கள். நலமான காரியங்கள் நடந்த இடத்திலும், இவர்கள் முறுமுறுப்பை விட்டுவிட மாட்டார்கள்!

திருப்தி அற்றவன், உண்மையுள்ளவனைப் பார்த்து "இந்த இடுக்கமான வழியும் சோதனைகளும் என்னை மனம் மடிய வைத்து விட்டது! இனியும் இந்த ஜீவபாதை எனக்கு வேண்டாம்! நான் அழிவின் நகரத்திற்கே திரும்ப போகிறேன்" என கூறினான். அங்கே எனக்கு ஆணவம், பெருமை, உலக மகிமை ஆகிய பல நண்பர்கள் இருக்கிறார்கள்! அந்த நண்பர்களை நான், இப்போது இழந்து தவிக்கிறேன். அங்கே நான் போய் விட விரும்புகிறேன்! உடனே உண்மையுள்ளவன் "நீ போக விரும்பினால் போகலாம், நான் திரும்பி செல்வதாய் இல்லை" என மறுத்து விட்டான்.

இவ்வாறாக அநேகர், நம்மை இடறச்செய்து, இந்த வழியை விட்டு திரும்பும்படி அழைப்பார்கள். அதுபோன்ற பின்மாற்றத்தை நாம் எதிர்த்து

நிற்க வேண்டும். சில சமயங்களில் 'நண்பர்கள்' பாவம் இருக்ககூடிய சில ஸ்தலங்களுக்கு அழைப்பார்கள். நாம் செய்ய வேண்டியதெல்லாம் 'அவர்களின் நட்பை முறித்து கொள்வதே அல்லாமல்' வேறு வழியில்லை.



உண்மையுள்ளவன் தொடர்ந்து தன் சாட்சியை கூறும்போது "நான் **வெட்கமானவன்** என்ற வேறொரு மனிதனைக் கண்டேன்" என கூறினான். இவன் கிறிஸ்துவை அறிக்கை செய்வதற்கு வெட்கம் கொண்டவன்! இவன் பரலோகம் செல்ல விரும்பினான், ஜீவ பாதையில் நடக்க விரும்பினான்..... ஆனால் அவனுடைய அலுவலகத்திலோ அல்லது வேறு இடத்திலோ அவனை சந்திப்பவர்கள் 'நீ கிறிஸ்தவன் தானே!' என கேட்டவுடன்.... ஆம் என தைரியமாய் சொல்ல அவனால் முடியவில்லை! அவனுடைய அலுவலகத்தில் உள்ளவர்கள் அவனிடம் வந்து நீ பொய் சொல்லுவதில்லையே? வேலையில் நேர்மையாயிருக்கிறாயே? எங்களைப்போல் சண்டை போடுவதில்லையே? இதற்கெல்லாம் என்ன காரணம்? என கேட்கும்போது, **நீங்கள் சற்றும் வெட்கப்படாமல் "நான் கிறிஸ்தவன்" என தைரியமாய் அறிக்கை செய்யுங்கள்!**

நான் கப்பற்படையில் வேலை செய்தபோது, கிறிஸ்துவை பிறருக்கு வெட்கமில்லாமல் அறிவிப்பதற்கு, என் கண்களுக்கு முன்பாக, நான் எப்போதும் இந்த காட்சியை வைத்திருப்பேன்: "ஆண்டவராகிய இயேசுவே, நீர் சிலுவையில் எனக்காக மரித்தபோது யாதொரு உடையுமில்லாமல், அரையில் கட்டப்பட்ட ஒரு சிறிய துணியை அணிந்து கொண்டு, எனக்காக வெட்கத்தை சகித்து! சுற்றியிருந்த ஜனங்கள் அனைவரும் உம்மை பரியாசம்பண்ணி நிந்தித்தபோது, 'எனக்காகவே அத்தனை வெட்கத்தையும் சகித்தீர்!' எனக்கூறி,

கிறிஸ்துவை பிறருக்கு அறிவித்திட ‘வெட்கமடையாதவனாயிருக்க வேண்டும்’ என்பதை நான் என் மனதில் உறுதி செய்து கொண்டேன்.

**ஆகவே என்னுடைய சீனியர் ஆபிஸர் என்னிடத்தில் கேட்கும்போது “சார், நான் ஒரு கிறிஸ்தவன்!” என தைரியமாய் உறுதியுடன் அறிக்கை செய்திருக்கிறேன்.**

அலுவலகத்தில் எல்லோரும் மதுபான பாட்டிலோடு நிற்கும்போது, நான் ‘ஆரஞ்சு ஜூஸ்’ பாட்டில் கையில் வைத்திருப்பேன். “நீங்கள் ஏன், ஆரஞ்சு ஜூஸ் மாத்திரம் குடிக்கிறீர்கள்?” என சிலர் கேட்கும்போது நான் உடனே, நீங்கள் என்னிடம் கேட்டதற்கு நன்றி.... “நான் ஒரு கிறிஸ்தவன்” என ஆரம்பித்து முழு சுவிசேஷத்தையும் அவரிடம் கூறிவிடுவேன். கப்பற்படையில் நான் சுவிசேஷம் சொல்ல வாய்ப்பில்லாவிட்டாலும், அவர்களே என்னிடம் கேட்கும்போது, நான் பெற்றிருக்கும் சுவிசேஷத்தை கூறுவதற்கு எனக்கு முழு உரிமை உண்டு!

இதற்கெல்லாம் மாறாக “வெட்கமானவன்” கூறும்போது “நம்முடைய ஆவிக்குரிய தரத்தை நம்மோடு வைத்துக்கொள்ள வேண்டும்! கிறிஸ்துவை அறிவித்து நம்முடைய கௌரவத்தை குறைத்துக் கொள்ளக் கூடாது” எனக்கூறி சமாளித்துவிட்டான். என்னுடைய, அவருடைய இரட்சகர், எங்களை இரட்சிப்பதற்கு யாதொரு கௌரவத்தையோ அந்தஸ்தையோ எதிர்பார்த்ததில்லையே? ஆகவே “நான் என் இரட்சகரை பிறருக்கு தைரியமாய் அறிவிப்பதற்கே நாடுகிறேன்” எனக் கூறி ‘உண்மையுள்ளவன்’ அவனைவிட்டு விலகினான்.

அங்கிருந்து தொடர்ந்து உண்மையுள்ளவனோடு பயணம் சென்ற கிறிஸ்தியான், ஒரு மனிதனை சந்தித்தான். அவன் பெயர் **‘வீண் பேச்சாளன்’**.



இதுபோன்றவர்கள் பெண்களிலும் இருக்கிறார்கள், 'ஆண்களிலும்' இருக்கிறார்கள். அவர்கள் எதையாவது பேசுவதற்கு வாய் திறந்து விட்டால், மிக எளிதில் வாய்மூட மாட்டார்கள்! இவர்கள் பேசிக்கொண்டே இருப்பது வீணாண வார்த்தை என இல்லா விட்டாலும், அவர்களின் வார்த்தைகள் ஒன்றாகிலும் பக்திவிருத்திக்கு ஏதுவாய் இருப்பதில்லை! அவர்கள் வேதத்திலிருந்துகூட பேச ஆரம்பித்து ஆதாமிற்கு ஏன் இப்படி நடந்தது? கானானியர்கள் அனைவரும் ஏன் கொல்லப்படவில்லை? என வாக்குவாதங்களை முன்வைத்து பேசிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் எதைப் பேச மாட்டார்கள் என்றால் "**பரிசுத்த ஜீவியம் வாழ்வது எப்படி?**" என்பதை மாத்திரம் பேச மாட்டார்கள்! இதுபோன்றவர்கள், உலக காரியங்களை ஓர் கவர்ச்சிமிக்க ஆர்வத்தோடு பேசுவார்கள். அவைகளை நாம் கவனித்து நேரத்தை போக்கி விடக்கூடாது. "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக" (கொலோசெயர்.4:6) என வாசிக்கிறோம். நாம் பேசும் வார்த்தைகள் எப்போதும் பக்தி விருத்திக்கு ஏதுவாகவே இருந்திட வேண்டும்.



இந்த மனிதனைவிட்டு உண்மையுள்ளவனும், கிறிஸ்தியானும் புறப்பட்டு சென்றபோது, அவர்களுக்கு 'சுவிசேஷகன்' எதிர்கொண்டு வந்தான். சுவிசேஷகனிடம், வழியில் சந்தித்த அனைவரைக் குறித்தும் கிறிஸ்தியான் கூறினான். ஆகிலும், தங்களுக்கு நேர்ந்த எல்லா துன்பத்திலும் கர்த்தர் உதவி செய்தார் என மகிழ்ச்சியுடன் கூறினான். இதைக் கேட்ட சுவிசேஷகன், தொடர்ந்து உண்மையுள்ளவர்களா யிருக்கும்படி ஊக்குவித்து, தூரத்தில் காணப்பட்ட ஒரு நகரத்தை

காண்பித்தான். சுவிசேஷகன் காண்பித்த திசையில் அவர்கள் இருவரும் நோக்கிப் பார்த்தார்கள்:



சுவிசேஷகன் கூறும்போது "நீ பார்க்கும் அந்த நகரம் ஆபத்து நிறைந்த இடம்!" என முன்கூட்டி எச்சரித்தான். நம்மை தேவன் சபையில் வைத்திருக்கிற ஒரு முக்கியமான நோக்கம் என்னவென்றால் "வரப் போகின்ற அபாயத்தை, தீர்க்கதரிசனமாய் நம்மை முன்கூட்டியே எச்சரிப்பதேயாகும்.

**சபையிலிருந்து நீங்கள் கேட்கும் தீர்க்கதரிசன வார்த்தைகள் அடுத்து வரப்போகும் வார நாட்களில் அல்லது சில மாதங்களில் சம்பவிக்க காத்திருக்கும் சோதனைகளை எச்சரிப்பதாக இருக்கக்கூடும்! இதுவே, நம் சபை கூட்டங்கள் ஒன்றுகூட விட்டுவிடாமல் தொடர்ந்து வரும் விசுவாசி களுக்கு சம்பவிக்கும் நன்மையாயிருக்கிறது.**

இவ்வாறாக அநேக தீமையிலிருந்து நம் சபை மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்!

கிறிஸ்தியான் செல்ல வேண்டிய வழி, சுவிசேஷகன் எச்சரித்து சொன்ன **நகரத்தின் ஊடாகவே** சென்றது. எனவே நாம் இந்த உலகத்திலிருந்து தப்ப முடியாமல் உலகத்தில் வாழ்ந்தாலும், நம்மைச் சுற்றிலும் அவிசுவாசிகளே சூழ்ந்து இருந்தாலும்.... உலகமாகிய 'மாயாபுரியில்' தான், நாம் வாழ வேண்டியதாயிருக்கிறது! 'மாயை' என்பதற்கு அர்த்தம் யாதொரு மதிப்பும் இல்லாத ஒன்றின் மீது நாம் கொண்டிருக்கும் வெறுமையான பெருமையேயாகும்! இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும், நித்தியத்தில் ஒரு மதிப்பும் இல்லை! பணம்! மதிப்பு! பாலிய இன்பம்! இவை யாதொன்றுக்கும் நித்தியத்தில்

ஒரு மதிப்பும் இல்லை. ஆனால் உலகத்திலுள்ள திரளான ஜனங்கள் உலக காரியங்களில் பெருமை கொண்டு, அதில் திருப்தியாயிருக்கிறார்கள். எங்களுக்கு பணமும் உண்டு, மதிப்பும் உண்டு, என்ற திருப்தி!



இவர்கள் இருவரும் நுழைந்த மாயாபுரி பட்டணத்தின் பகுதி "களியாட்டு சந்தையாகும்". இந்த சந்தையானது ஒரு வருடம் முழுவதும் நடந்து கொண்டே இருக்கும். இந்த களியாட்டு சந்தையை 'உலகத்தின் அதிபதி' முன் நின்று நடத்துகிறான். இன்று அதிகமாய் பேசப்படும் 'பாலிவுட், ஹாலிவுட்....' போன்ற அனைத்து களியாட்டு பகுதிகளும் இந்த சந்தையில்தான் இருக்கிறது. இந்த சந்தையின் மூலமாய் ஜனங்களை சாத்தான் தன் பக்கத்தில் ஈர்த்துக் கொள்கிறான். இன்று பிரபல்யமாய் படிக்கப்படும் புத்தகமாகிய 'ஹாரி பாட்டர்' மூலமாய் அசுத்த ஆவிகளின் உறவை ஜனங்களுக்குள் புகுத்தி, இந்த உலகத்தின் அதிபதி மிக சாதுரியமாய் செய்து வருகிறான். இதன் மூலமாய் தெய்வ பயத்தை அகற்றி விட்டு, **அசுத்த ஆவிகளை 'நண்பர்களைப்போல்'** காண்பித்து வஞ்சிக்கிறான்.

அந்த சந்தையை கடந்து கிறிஸ்தியானும், உண்மையுள்ளவனும் நடந்து சென்றபோது, அங்குள்ள ஜனங்களின் 'ஆடை உடுத்துதல் மிக வித்தியாசமாய், கவர்ச்சி உள்ளதாய் இருக்கக் கண்டார்கள். ஆகவே, சகோதரிகளே "நீங்கள் கல்லூரிக்குச் சென்றாலும் அல்லது வேறு இடங்களுக்குச் சென்றாலும், உங்களுடைய உடுப்பு அவர்களைப்போல் அல்லாமல், தகுதியுள்ள உடுப்பாயிருக்க" கவனம் கொண்டிருங்கள். அவர்களோ இறுக்கமான ஆடையை அணிந்து, தங்கள் உடல் உறுப்பின் தோற்றத்தை வெளிகாட்டுகிறார்கள். நல்லதொரு தகுதியான வஸ்திரம் உடுத்துதலை அறிய, நீங்கள் கிராமப்புற பெண்களைப் பார்த்து கற்றுக்

*கொள்ள வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாய், இன்றுள்ள கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை சரியான விதத்தில் உடுத்தும்படி நடத்துவதில்லை. பெற்றோரே உங்கள் பெண் பிள்ளைகளைக் குறித்து கவனமாயிருங்கள்!*

*நம்முடைய உரையாடலில்கூட, கல்லூரியிலோ அல்லது வேறு இடங்களிலோ மற்றவர்கள் பேசுவதைப்போல் கொண்ட சம்பாஷணை வைத்திருக்ககூடாது. இதுபோன்ற களியாட்டு சந்தைக்குள் இவர்கள் நடந்து சென்றபோது, அங்குள்ள ஆண்களும் பெண்களும் "இந்த இரண்டுபேரை பாருங்கள்! ஏதோ 18 -ம் நூற்றாண்டு ஆட்களைப்போல் உடுத்தியிருக்கிறார்கள்!" என பரிகசித்தார்கள். இப்படித்தான் உங்களையும் ஜனங்கள் கூறுவார்களோ? அங்குதான் நீங்கள், உங்கள் சாட்சியை கூற வேண்டிய நல்ல நேரமாகும்.*

**நீங்கள் அவர்களிடம் "நாங்கள் இயேசுவின் சீஷர்கள்!" என கூறும் நல்ல சாட்சி! உங்கள் சாட்சியில் நான் வித்தியாசமான உடை உடுத்தி ஆண்களை கவர்ச்சிப்பதில்லை! என கூறும் சாட்சி!**

*இதுபோன்ற சாட்சியை தருவதற்கு நாம் ஒருபோதும் வெட்கமடைந்திட கூடாது. உங்களுடைய பள்ளியோ அல்லது கல்லூரியோ அல்லது வேறு எந்த இடங்களிலோ உள்ளவர்கள் உங்களின் சீரான நடை உடைகளை குறைகூறும்போது, நீங்கள் வருத்த மடைவதற்குப் பதிலாய் பெருமிதம் கொள்ளுங்கள். ஏனென்றால், இயேசு கற்ற கல்விசாலையில் அவர் இவ்வாறாகவே இருந்தார். ஆகவே நம்முடைய பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே உங்களுடைய நடை உடைகளைப் பார்த்து யாராகிலும் பரியாசம் செய்தால், அதைக் குறித்து சிறிதுகூட மனக்கலக்கம் அடைந்து விடாதீர்கள்! இயேசு உங்களோடு இருக்கிறார்!" என தைரியப்படுத்திக் கூறுங்கள். மேலும் "உலக நண்பர்களை உங்களோடு ஈர்ப்பதைவிட, இயேசு உங்களோடு இருப்பதே மேலானது!" என உற்சாகப்படுத்துங்கள்!*



# 12

## சத்தியத்திற்குப் பலியான உண்மையுள்ளவன்

**மா**யாபுரி நகரில், அவர்கள் இருவரையும் பரிகசித்தது மாத்திரமல்லாமல், அவர்களைப் பிடித்து, தங்கள் அதிகாரிகளுக்கு முன்பாக நிறுத்தி “கனம் பொருந்திய அதிகாரி அவர்களே, இவர்களைப் பார்த்தால் பைத்தியம் போல் தோன்றுகிறது! அல்லது நம்முடைய மாயாபுரி நகரில் ஏதோ தீமை விளைவிக்க வந்தவர்கள் போல் தோன்றுகிறது?” என புகார் கூறினார்கள்.



உடனடியாக அந்த மாயாபுரி நகர் அதிகாரிகள் “இவர்கள் இருவரையும் பிடித்து சிறைக்குள் அடையுங்கள்! நம் மாயாபுரி மக்கள் இவர்களைப் பார்த்து நகைத்து பரிகசிக்கட்டும்!” என கட்டளையிட்டு, சிறைகூண்டிற்குள் அடைத்தார்கள்! உண்மையான கிறிஸ்தவர்களைக் கண்டு அவர்களைப் பரிகசிப்பதில், அநேக ஜனங்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அவ்வாறாகவே அவர்கள் அடைக்கப்பட்ட கூண்டை சுற்றி வந்த மக்கள், ஏராளமான பரிகாச வார்த்தைகளைக் கூறி ஆனந்தம்

அடைந்தார்கள்! இதுபோன்ற ஏராளமான பரிகாசங்களை, என்னுடைய கல்விசாலையில் நான் அடைந்திருக்கிறேன்.

அதன்பின்பு, கிறிஸ்தியானையும், உண்மையுள்ளவனையும் நீதிபதிக்கு முன்பாக நிறுத்தினார்கள்.



அந்த நீதிபதிக்கு பெயர் **'நல்லதை வெறுப்பவன்'** என கூறினார்கள். அச்சமயம், உண்மையுள்ளவனுக்கு எதிராக மூன்று நபர்கள் கூடி வந்து பொய்குற்றம் சாட்டினார்கள். அவ்வாறு பொய்குற்றம் சாட்டியவர்களின் பெயர், ஒருவன் பெயர் **பொறாமை!** இரண்டாவது நபர் பெயர் **மூட நம்பிக்கையாளன்!** மூன்றாவது நபர் பெயர் **'அசுத்தவாயன்!'** இந்த உலகத்திலுள்ள ஜனங்களில் அதிகமான பேர், பொறாமை கொண்டவர்கள். மேலும், அநேகர் மூட நம்பிக்கைகளை கொண்ட மார்க்கத்தாராய் இருக்கிறார்கள். ஆனால் நாமோ, மெய்யான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறோம். இவர்களோடு அசுத்தவாயனும் சேர்ந்து கொண்டு, நீதிபதியிடம் தங்கள் சார்பாய் குற்றம் சாட்டினார்கள். "நீதிபதி அவர்களே நாங்கள் இவனுக்கு தீங்கு செய்யவில்லை. எந்த தொந்தரவும் செய்யவில்லை. இவர்கள்தான் குற்றவாளிகள்" என பொய் குற்றஞ்சாட்டினார்கள். அந்த நீதிபதியோ, துன்மார்க்கத்திற்கே கை கொடுத்தவன். இன்றும், 'நல்லதை வெறுக்கும்' உலகத்தைச் சார்ந்த நீதிபதிகளே எங்கும் இருக்கிறார்கள். ஆகவே, அனைத்து நல்ல கிறிஸ்தவர்களையும் தீமையாய் தீர்ப்பு செய்கிறார்கள்.

அந்நாட்களில், நீதிபதியினுடைய தீர்ப்புக்குப் பிறகு, அந்த நகரத்திலுள்ள 'நியாயவான்களிடத்தில்' அனுப்புவார்கள். நீதிபதியின் தீர்ப்பை அவர்களிடத்தில் கூறி, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை 'இந்த நியாயவான்கள்' தெரிவிப்பார்கள்.



அந்த ஐந்து குழு கொண்ட நியாயவான்களில் ஒருவன் பெயர் Mr.நன்மை தெரியாதவன்! மற்றொருவன் பெயர் Mr.பகையாளன்! மற்றொருவன் பெயர் Mr. இச்சையாளன்! மற்றொருவன் பெயர் Mr.பொய்யன்! மற்றொருவன் பெயர் Mr.ஒப்புரவாக மறுப்பவன் (நான் யார் சொல்வதையும் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்பவன்). இவர்கள் அனைவரும் சாத்தானுக்கு கைகூலிகளாயிருக்கிறார்கள். ஒரு நீதிபதியே தவறு செய்யும்போது, அவனை சூழ்ந்து எத்தனை விசாரணை குழுக்கள் இருந்தாலும், அவர்களும் அதே அநீதியுடையவர்களாய் எப்போதும் இருப்பார்கள்.

**இவர்கள் அனைவரும் சேர்ந்து ஒருமனமாய் நீதிபதியின் கருத்தை ஆமோதித்து "இந்த உண்மையுள்ளவன், நீதிபதி கூறியதைப்போல் குற்றவாளி!" என கூறினார்கள். ஆனால், உண்மையுள்ளவன் என்ன செய்தான்? என்பதற்குரிய எந்த சாட்சியமும் அங்கு இல்லை.**

காலகாலங்களாய் கிறிஸ்தவர்கள், நீதிமன்றங்களில் 'பொய்யான தீர்ப்புகளையே' சந்தித்திருக்கிறார்கள். அதற்கு ஒரே காரணம் 'இவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள்' என்ற குற்றமேயாகும். உடனே நீதிபதி, நியாயவான்களின் அறிக்கையின் ஆதாரத்தில், உண்மையுள்ளவனை கம்பியினால் அடித்து, கத்தியினால் குத்தி, அவனை எரிக்கும்படிக்கு கட்டளை பிறப்பித்தார்.

அதன்படியே 'உண்மையுள்ளவனை' ஒரு மரத்தில் கட்டிவைத்து நெருப்பை மூட்டி, அந்த தீயில் **உண்மையுள்ளவன் எரிந்து போகும்படி** செய்தார்கள். அந்த நேரத்தில், இரதத்தில் வந்த ஒரு தூதன்

உண்மையுள்ளவனின் ஆத்துமாவை 'பத்திரமாய் எடுத்துக்கொண்டு' பரலோகம் நோக்கி விரைந்து சென்றான். இதுதான் "நீ மரணபரியந்தம் உண்மையுள்ளவனாயிரு!" என்பதின் பொருளாகும். பல நூறு ஆண்டுகளாய், இதுபோன்ற சம்பவமே ஒத்தவேஷம் தரியாத திரளான கிறிஸ்தவர்களுக்கு சம்பவித்திருக்கிறது.



ஆகிலும் தேவன் அற்புதமாய் கிரியை செய்து, உண்மையுள்ளவனின் வைராக்கியமான மரணத்தைக் கண்ட 'ஒருவன்' மிகப்பெரிய மனமாற்றம் அடைந்தான். அவன் பெயர் 'நம்பிக்கையாளன்'. கிறிஸ்துவுக்கு உத்தமமாய் வாழ்ந்து, தன் ஜீவனையும் இழக்கத் துணிந்த ஒருவனுடைய தைரியம், திரள் கூட்டத்திலுள்ள ஒரு மனிதனை எழுச்சியடையச் செய்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள்!

அந்நாட்களில், ரோமானிய பந்தயத் திடலில், உண்மையுள்ள கிறிஸ்தவர்களை அந்த திடலின் நடுவே தூக்கி எறிந்து, சிங்கங்களை அனுப்பி, அவர்களை அடித்துத் தின்னும்படி செய்வார்கள். அந்த கிறிஸ்தவர்களோ, பசி கொண்ட சிங்கம் அவர்கள்மீது பாய்ந்த போது, கரங்களை உயர்த்தி தேவனைத் துதித்துப் பாடிக் கொண்டிருந்தார்கள்! திடலில் கூடி இருந்த திரளான மக்களில் ஒருவன் அதைக் கண்டு, மனம் உடைந்து, உள்ளம் கவரப்பட்டான்! அவன் ரோம வீரர்களின் அநீதியைக் கண்டு, அதே சமயத்தில் **உண்மை கிறிஸ்தவர்களின் உத்தமத்தால்** சவாலிடப் பட்டு உரத்த சத்தமாய் "இன்றிலிருந்து நானும் ஒரு கிறிஸ்தவன்!" என கூறியிருக்கிறான்! உடனே ரோம சேவகர்கள் அவனையும் பிடித்து, சிங்கத்திற்கு இரையாக்கினார்கள். நாம் தேவனுக்கு உண்மையாயிருக்கும் போது சம்பவிக்கும் அதிசயங்களைக் காண்பது நம் உள்ளத்தை பரவசமடையச் செய்கிறது!



# 13

## உலக ஆவியின் பிரதான வலை "பணம்"

இவ்வாறாகவே உண்மையுள்ளவனின் தீரமிக்க மரணத்தைக் கண்ட 'நம்பிக்கையாளன்' கிறிஸ்தியானோடு பயணத்தில் சேர்ந்து கொண்டான்! **தேவன் எப்போதுமே, நம்மை தனித்திருக்கவிடாமல் நல்ல ஐக்கியத்தை தருகிறார்.** ஒரு சகோதரனை நீங்கள் இழந்த சமயத்தில், முழு இருதயம் கொண்ட மற்றொரு சகோதரனை உங்களோடு சேர்ந்து கொள்ளும் ஐக்கியத்தில் நடத்துவார். இவ்வித சகோதர சிநேகத்தோடு அவர்கள் இருவரும் இணைந்து முன்னேறினார்கள்!



அந்த சமயத்தில் அவர்கள் இருவரும் வேறொரு மனிதனை சந்தித்தார்கள். அவனுடைய பெயர் **'கிறிஸ்தவத்தை ஆதாயமாய் கொண்டவன்'** என்ற பெயருடையவன். அதாவது, இவன் கிறிஸ்தவத்தை தனக்கென ஆதாயமாய் கொண்டு வாழ்ந்தவன்!

ஒரு சபைக்குச் சென்று, தனக்கென உலக ஆதாயம் ஏதாவது கிடைக்குமா? என நாடுபவன்! அது பணமோ அல்லது தனக்கென ஒரு

மதிப்போ ஆகிய எதையாகிலும் ‘தனக்கென’ நாடுபவன். அவனொரு பிரசங்கியாகக் கூட இருந்திட முடியும். அவன் கிறிஸ்தவத்தை ஆதாய தொழிலாக்கி, பணம் சம்பாதிக்க நாடுபவன். அவன் கிறிஸ்தியானைப் பார்த்து “நானும் உங்களைப்போன்ற கிறிஸ்தவன்தான்! ஆகிலும் என் நிலையைப் பாருங்கள். நான் உங்களைவிட எவ்வளவோ ஆஸ்தியும், அந்தஸ்தும் உடையவனாய் மாறிவிட்டேன்” என கூறினான்!

அவனுடைய சம்பாஷணையைக் கேட்ட கிறிஸ்தியானும், உடன் வந்த சகோதரனும் “ஓ அப்படியா, நாங்கள் வாழும் கிறிஸ்தவ ஜீவியத்தில், ஆஸ்தியிலும் அந்தஸ்திலும் மனம் கொண்டவர்கள் அல்ல!” என கூறிவிட்டு அவனைக் கடந்து, முன்னேறிச் சென்றனர். இவ்வாறாகவே, நீங்கள் கிறிஸ்துவை தீவிரமாய் முன்னேறிச் செல்வதற்கு ஒட்டாமல், சாத்தான் அநேக வழிமுறைகளைக் கைகொண்டு தடை செய்ய முயல்கிறான்! அநேக சமயங்களில், உங்கள் வாழ்வின் இருப்பிடத்திலோ அல்லது உங்கள் வேலை செய்யும் ஸ்தலத்திலோ வாழும் மனிதர்களைக் கொண்டே, இவ்வாறு முயற்சிக்கிறான். நாம் மிகுந்த கவனமாயிருக்க வேண்டும்.



சிறிது தூரம் முன்னேறிச் சென்ற பிறகு, இவர்கள் இருவரும் தற்செயலாய் பின்னோக்கிப் பார்த்தார்கள்! அங்கு இருந்த மனிதன் மூன்று நண்பர்களுக்கு முன்பாக தலைவணங்கி “நீங்கள் சொன்னது சரிதான்! இப்போது வந்து சென்ற நபர்கள் வாழத்தெரியாதவர்கள்” என கூறினான். அந்த மூன்று நண்பர்களுடைய பெயர் 1) உலகத்தான் 2) பண நேசன் 3)ஆஸ்தியை ஆள்பவன். தங்களை எப்படியெல்லாம் வஞ்சிப்பதற்கு பிசாசானவன் முயற்சிக்கிறான் என்பதை அறிந்து, கிறிஸ்தியானும் நம்பிக்கையாளனும் தொடர்ந்து முன்னேறிச் சென்றார்கள்.

அவர்கள் தீவிரமாய் முன்னேறிச் சென்றபோது, அந்த மூன்று நபர்களில் ஒருவன், இவர்கள் இருவரையும் வேகமாய் பின்பற்றி சந்தித்தான்!



அவன் கிறிஸ்தியானை நோக்கி "என்னை கவனியுங்கள், கிறிஸ்தவ நபர்களின் தொடர்பைக் கொண்டு, வியாபாரத்தை விருத்தி செய்து அதிக பணம் சேர்ப்பதில் என்ன தவறு?" என கேட்டான். மீண்டும் வலியுறுத்தி "பணம் படைத்தவர்கள் கொண்ட சபையில் சேர்ந்து, அவர்களின் சகாயத்தை எதிர்பார்ப்பதில் தவறொன்றும் இல்லையே!" என கேட்டான். மீண்டும் அவன் குறிப்பிடுகையில் "நானும் பரவசத்தோடு பாடுகிறேன், ஜெபிக்கிறேன், என் வியாபாரத்திற்கு நல்ல ஆதாயமும் பெறுகிறேன்.... இதிலென்ன தவறு என்று கூறுங்கள்!?" என வாதம் செய்தான்.

கிறிஸ்தியான் அவனை உற்று நோக்கி "பண ஆசைக்கு நாங்கள் தூரமாய் விலகி நிற்பவர்கள்!" என கடிந்து கூறிவிட்டு உடனே அவனை விட்டு திரும்பி முன் சென்றார்கள். உலக காரியங்களுக்காக வாதம் செய்பவர்களோடு, நாம் ஒருபோதும் வாக்குவாதத்தில் ஈடுபடக்கூடாது என்பதை கிறிஸ்தியானும் அவன் நண்பனும் அறிந்திருந்தார்கள். ஏனென்றால் "அதுபோன்றவர்களின் மனது முழுவதும் பணம், செல்வம், ஆஸ்தி" ஆகியவைகளால் மாத்திரமே எப்போதும் நிறைந்திருக்கும்!

எங்கள் சபையில் கூட, தனிப்பட்ட இலாப நோக்கம் கொண்ட ஜனங்கள் இருக்கிறார்கள்! ஆகவே நாம் அனைவருமே இதைக் குறித்து மிகுந்த கவனம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

தொடர்ந்து சென்ற அவர்களின் பயணத்தில் ஒரு உயர்ந்த குன்றை

அடைந்தார்கள். அந்த குன்றிற்கு பெயர் "பணம்" என்பதே ஆகும்.



350 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த 'ஜான் பணியன்' இன்று நாம் வெளிப்பாடாய் காண்கின்ற பகுதிகளை அன்றே அவர் அறிந்திருந்தார். அதன் இரகசியம் என்னவென்றால் 'தேவனை அறிந்த மனிதனுக்கு' ஜீவிய பாதையின் சகல அந்தரங்கங்களையும் தேவன் வெளிப்படுத்துகிறார்!

**எனவே எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பாக அவர்கள் வாழ்ந்திருந்தாலும், தேவனை அறிந்த மாந்தர்களுக்கு, இன்று நாம் வெளிப்பாடாய் காணும் அனைத்து சத்தியங்களையும் அவர்களுக்கும் தேவன் வெளிப்படுத்தி யிருக்கிறார்!**

அந்த குன்றின் வாசலில் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அவன் பெயர் **தேமா.** அவன் அப்போஸ்தலனாகிய பவுலின் உடன் ஊழியனாய் இருந்தான். இருப்பினும் **பணத்தை அவன் நேசித்தபடியால்,** பவுலை விட்டு விலகினான்!

ஏனென்றால் பவுலோடு சேர்ந்த ஊழியத்தில் 'தனக்கென பணம் சேர்க்க முடியாது' என்று அவன் அறிந்திருந்தான். இப்போதல்ல, ஆனால் ஆரம்ப காலங்களில் நம் கிறிஸ்தவ ஐக்கிய சபையில் ஊழியராய் இருந்த பலர் 'அவர்களின் பண ஆசையினிமித்தம்' நம்மை விட்டு விலகினார்கள். ஏனெனில் இங்குள்ள ஊழியங்களுக்கோ அல்லது பிரசங்கங்களுக்கோ 'பணம் பிரதி உபகாரமாய்' தரப்படுவதில்லை என அறிந்து விலகினார்கள்! இவ்வாறு சென்றவர்கள், பணத்தை தாராளமாக்கித் தரும் மற்ற ஸ்தாபனங்களுக்குச் சென்று விட்டார்கள்.

தேமா அந்த இருவரையும் அழைத்து "சற்று உள்ளே வாருங்கள்,

இங்கே நான் ஏராளமான பொக்கிஷங்களை சேர்த்து வைத்திருக்கிறேன்" என அழைத்தான். "நானும் பவுலோடு ஊழியக்காரனாய் இருந்தவன் தான்! ஆகிலும் ஏராளமான பணம் சம்பாதிப்பதற்கு நல்ல வாய்ப்புகள் எனக்கு கிடைத்தது. இப்போது அவைகளையும் பெற்றுக் கொண்டேன். கர்த்தருக்கும் ஊழியம் செய்கிறேன்!" என அழைத்தான்.

இவைகளைக் கேட்ட கிறிஸ்தியான் "மெய்யாகவே இவன் யூதாஸ் காரியோத்தின் மகன்" என அறிந்து, "உன்னுடைய அழைப்பு எங்களுக்கு தேவையில்லை" என கூறி முன்னேறினான்! யூதாஸ்காரியோத்திற்கு என்ன நடந்தது என கிறிஸ்தியான் அறிந்திருந்தான்! அவனைக் குறித்து இயேசு கூறும்போது "நீ பிறவாதிருந்தால் நலமாயிருந்திருக்கும்" என அவனுடைய பண ஆசையை முன்னிட்டு கூறி..... நமக்கும் எச்சரிப்பைத் தந்துள்ளார்!



# 14

## குறுகலான ‘ஜீவ வழி’ விலகிடக் கூடாது!

**பி**ன்பு அவர்கள் ‘ஒரு பெண் நினைவுச் சிலையை’ தங்களை வழியில் கண்டார்கள். அந்த நினைவு சிலை உப்பின் படிவத்தால் இருந்தது. அந்த சிலைக்கு கீழாக ‘லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்’ என எழுதப்பட்டிருந்தது. லோத்தின் மனைவிக்கு நடந்தது உங்களுக்குத் தெரியுமல்லவா? சோதோம் நகரத்தை விட்டு வெளியே வரும்படி அவளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.....



அவளோ, பின்னால் திரும்பிப் பார்த்து.... தான் விட்டு வந்த சேலை களையும், தன் அழகு தோட்டங்களையும், தன் பீரோவில் வைத்திருந்த விலையேறப் பெற்றவைகளையும் மனதில் எண்ணி திரும்பிப் பார்த்தாள்! இதைக் கண்ட கர்த்தர் “நீ அங்கே போக விரும்புகிறாயோ?” என கேட்டார். அவளோ அங்கேயே உப்புத்தூணாய் நின்று விட்டாள். இது நம் யாவருக்கும் ஒரு எச்சரிக்கையாகும். நீங்கள் இயேசுவைப் பின்பற்றும் ஜீவியத்தில், எக்காலத்தும் பின்னிட்டு திரும்பி பார்க்காதிருங்கள்!



பின்பு அவர்கள் இருவரும் ஒரு மனம் கவரும் நதியண்டை வந்தார்கள். அந்த நதிக்கு **'ஜீவ நதி'** என்று பெயர். அங்கே அவர்கள் இருவரும் பல நாட்கள் தங்கியிருந்து புத்துணர்வு பெற்றார்கள். தங்கள் பசிக்கு அங்குள்ள கனிகளைப் புசித்து, ஜீவத்தண்ணீரால் தங்கள் தாகம் தீர்த்தார்கள்.

ஆகவே அவர்கள் வந்து சேர்ந்த இருப்பிடம், **பரிசுத்தாவி அருளும் 'தேற்றும் ஊழியமாய்'** இருந்தது. அநேக சமயங்களில் இதுபோன்ற ஆறுதலை பரிசுத்தாவியானவர் நமக்கு நேரடியாகவே தருகிறார். சில சமயங்களில், நம் சகோதர சகோதரிகள் மூலமாகவும் தருகிறார். ஆகவேதான் "சகல ஆறுதலின் தேவன்" என தேவன் அழைக்கப்படுகிறார். நம்மை ஆறுதல் செய்வதை தேவன் ஒருநாளும் கைவிடுவதில்லை!

நாம் பரிசுத்தாவியை எப்போதும் கவனித்து கேட்பவர்களா யிருந்தால், நம் யாவரையும் 'ஜீவ நதியண்டை கொண்டு செல்ல' தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்!

இதுவும் தேவன் நமக்கு தந்தருளும் ஒரு ஈவுதான்! தேவன் நம்மை எப்போதும் நெருக்கத்திலேயே வைத்திருப்பவர் அல்ல! நம்முடைய வாழ்க்கையின் அழுத்தத்தைப் போக்கி, ஆறுதலையும், சுகத்தையும் நமக்கு தந்து மகிழ்விக்கிற நல்ல தேவன். ஆகிலும் ஒரு சுகமான ஆறுதலை 'கொஞ்ச காலம்' மாத்திரமே தேவன் தருகிறார். எனவே, இந்த சுகமான வழி கொஞ்ச தூரம் மாத்திரமே இருந்தது. இவ்வாறாக, நம்முடைய ஜீவியத்தின் 'அதிகபட்சம்' நெருக்கமான வழியாகவே இருக்கிறது. இதை, நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்! ஆகிலும் அந்த சுக வழிக்காக, அவர்கள் இருவரும் கர்த்தரை ஸ்தோத்தரித்து மகிழ்ந்தார்கள்.

சில நாட்கள் கழித்து, அவ்விடத்திலிருந்து இருவரும் பயணத்தை தொடர்ந்தனர். மணல் சரிவு கொண்ட ஒரு செங்குத்தான பாதையின் வழியாய் நடந்து சென்றார்கள். கரடு முரடான அந்தப் பாதை, அவர்களின் கால்களுக்கு அதிக நோவு தந்தது. கடினமான அந்தப் பாதையில் சென்ற போது, மிக எளிதான பாதையை அவர்களின் மனம் நாடியது. இதுபோன்ற தருணத்தில்தான், நாம் உலகத்தோடு ஒத்தவேஷம் தரிப்பது மிக எளிதாயிருக்கும். இங்குதான் நாம் கவனம் கொண்டிருக்க வேண்டும்!

சற்று திகைத்து நின்ற கிறிஸ்தியான், பின்பாக கர்த்தருக்கு உறுதியுள்ளவனாய் ஜீவிக்க வேண்டும் என்பதை மீண்டும் நிலைப்படுத்திக் கொண்டான்!



திடீரென்று கிறிஸ்தியான் தன் பயணத்தை நிறுத்தி தன் வலது பக்கத்தில் காணப்பட்ட 'ஒரு சிறிய வேலி' அடைக்கப்பட்ட பாதையைக் கண்டான். அந்த வேலியைத் தாண்டுவது சுலபமாயிருந்தது. அதுமாத்திரமல்ல, அந்த இடம் முழுவதும் நல்ல பசுமையாய் இருந்தது. உடனே கிறிஸ்தியான், இணைந்து வந்த சகோதரனைப் பார்த்து "இது ஒரு அருமையான குறுக்கு வழியாயிருக்கிறது. இந்த கடின பாதையை விட்டு, விட்டு இந்த பசுமையான குறுக்கு பாதையில் நாம் சென்றுவிட்டால், பரம வாசலை சீக்கிரம் அடைந்துவிடலாம்" எனக் கூறி அந்த வேலியை தாண்டினான். இந்த கிறிஸ்தியான், ஏற்கெனவே சுவிசேஷகன் மூலமாய் எச்சரிக்கப்பட்டிருந்தான். "**இந்த குறுகலான பாதையை விட்டு விட்டு வேறு எந்த பாதைக்குள்ளும் நீ சென்று விடக்கூடாது**" என ஏற்கெனவே எச்சரித்துள்ளார்! "உன் சுயபுத்தியை சார்ந்து கொள்ளாமல், கர்த்தரை நம்பி இரு!" என்றே வேதம் கூறுகிறது. கிறிஸ்தியான் எண்ணியதோ,

குறுக்கு பாதையில் செல்வது, 'குறைந்த நேரத்தில்' போக வேண்டிய இடத்திற்கு சென்று விடலாம்! என தவறாய் எண்ணி விட்டான்.

அந்த வேலியைத் தாண்டி சென்றபோது, அவர்களுக்கு முன்பாக வேறொருவன் போய் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.



இவன் ஏற்கெனவே, வேலியைத் தாண்டி குறுக்கு வழியில் சென்றவன்! இவனுக்கு பெயர் 'வெற்று சுய நம்பிக்கையாளன்'. சுய நம்பிக்கை கொண்டவர்கள், எப்போதுமே பின்மாற்ற குணம் கொண்டவர்கள். அவன் கிறிஸ்தியானை உற்சாகப்படுத்தி, "வாருங்கள் வாருங்கள் பரம தேசம் செல்ல இதுதான் குறுக்கு வழி" என கூறினான். சுவிசேஷகன் எவ்வளவுதான் எச்சரித்து, இந்த இடுக்கமான வழியைத்தவிர 'பரம தேசம் செல்ல' வேறொரு வழி இல்லை என கூறியிருந்தும் கிறிஸ்தியானோ, தேவ பக்தியுள்ளவன் போல தோற்றமளித்த அந்த மனுஷனுடைய ஆலோசனையைக் கேட்டு, குறுக்கு வழி சென்றான்.

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில், துன்பங்களை கண்டு ஒருபோதும் துவண்டுபோகக் கூடாது. மெய்யாகவே, நம் ஜீவியத்திற்கு சம்பூரண ஆறுதலை தருபவர், நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரே ஆவார். அவர் நமக்காக செய்திடும் மிகச் சிறந்த ஊழியம், தேவப் பக்தியாய் வாழும் துன்பத்தில் நம்மைத் தேற்றுவதேயாகும்.

நாம் என்று, நமக்கு அருளப்பட்ட தேற்றரவாளனின் ஆறுதலைப் பெற தவறுகிறோமோ, அதுவே நாம் இடுக்கமான பாதையை விட்டு, விசாலமான பாதையை தெரிந்து கொள்ளும் அபாய நேரம் என்பதை நாம் எப்போதும் மனதில் கொண்டு ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்! இந்த உலகத்தின் எளிய வாழ்க்கை, விசாலமாய் தோன்றினாலும், அதன் முடிவோ அழிவு என, இயேசு எச்சரித்துள்ளார்! மத்தேயு 5,6,7 அதிகாரங்கள், நம் மோட்ச பயணத்திற்கு வழிகாட்டும் சத்தியங்கள்!



திடீரென்று ஒரு செங்குத்தான குன்றை அடைந்தவுடன், முன்னால் சென்ற ‘சுய நம்பிக்கையாளன்’ அந்த குன்றின் பாதாளத்தில் விழுந்தான்! பெரிய அலறலோடு அவன் விழுந்ததை இவர்கள் பார்க்காவிட்டாலும், அவன் தலையில் அணிந்திருந்த தொப்பி ஒரு மரக்கிளையில் தொங்குவதைக் கண்டு, கிறிஸ்தியான் “வேண்டாம் வேண்டாம், இந்த அபாய இடத்தை விட்டு நாம் சீக்கிரமாய் வந்த இடத்திற்கே திரும்பி விடுவோம்” என கூறினான். உலகத்தின் அதிபதியாகிய பிசாசு தன்னுடைய உடைமையாக வைத்திருக்கும் பங்கிற்கு, அவனே அதிபதியானான்! ஆகவே அவனுடைய எல்லைக்குள் சென்றவர்களை, இந்த உலகத்தின் அதிபதி கடுமையாக தாக்க முயற்சிப்பான். அவர்கள் திரும்பிச் செல்ல முயன்றபோது, எங்கு பார்த்தாலும் அந்தகாரம் மூடி இருந்தது. இதுபோன்ற உலக ஜனங்களின் ஆலோசனை நம்மை எப்போதுமே ‘அந்தகார இருளுக்குள் நடத்திவிடும்’ என்பதை அறிந்து நாம் ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்! வேலியை தாண்டி வந்த இடத்திற்கு இவர்கள் இருவரும் எவ்வளவுதான் முயன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அலைந்து அலைந்து சோர்ந்து போய், இருவரும் ஒரு இடத்தில் படுத்து தூங்கிவிட்டார்கள்!



# 15

## பாதாள குழி விடுவித்த 'வாக்குதத்த' சாவி!

தூக்கம் கலைந்து கண்விழித்தவுடன், ஒரு பெரிய அரக்கன் அவர்கள் முன் நின்று கொண்டிருந்தான். அந்த அரக்கனின் பெயர் 'மன தைரியத்தை இழக்கச் செய்பவன்' என்பதாகும். இவர்களைக் கண்ட அந்த அரக்கன், தன்னுடைய ஆளுகையின் சுதந்திரத்திற்குள் பிரவேசித்த அவர்களைக் கண்டு, கோபத்துடன் அவர்களைப் பிடித்துக்கொண்டான்.



அவர்களைப் பார்த்து "என்னுடைய எல்லைக்குள் ஏன் பிரவேசித்தீர்கள்?" என கோபத்துடன் கேட்டு, மனதைரியத்தை இழக்க செய்வதற்கு, அவர்களை இறுகப்பிடித்து முறைத்தான்! அவர்கள் இருவரையும் இந்த அரக்கன் இழுத்துக் கொண்டுபோய், ஓர் அருவருப்பான நாற்றம் மிகுந்த ஒரு கிடங்கிற்குள் போட்டு வாசலை அடைத்துச் சென்றுவிட்டான்.

அந்த கொடிய பாதாளத்தில் சிக்கிய அவர்களுக்கு உணவு தரப்பட வில்லை! மனதில் சோர்வும், வேதனையும், அடுத்து என்ன செய்வோம்? என்ற குழப்பமும் அவர்களை வெகுவாய் ஆட்கொண்டு விட்டது!



அவ்வாறு மனதில் அலைக்கழிக்கப்பட்டு சீரழிய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, அந்தகார லோகாதிபதி அவர்களை அந்த **பாதாள சிறையில் அடைத்து வைத்திருந்தான்.** இரவுபகல் என அறிய முடியாத அந்த இடத்தில், பல நாட்கள் கிடந்தார்கள்.

நம் அனைவருடைய ஜீவியத்திலும் 'இந்த பகுதியை குறித்து' நாம் யாவருமே மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும். உலக நண்பர்களோ அல்லது தேவ பக்தியை போன்ற ஆலோசனை தரும் நபர்களோ **சிலுவையின் பூர்வ பாதையை இழக்கும்படி நடத்தினால்,** நாமோ சிலுவையின் பாதையை இழந்து விடாதிருக்க மிகுந்த கவனம் கொண்டிருக்கக்கடவோம்!

'மனம்' கிறிஸ்தவ ஜீவியத்திற்கு மிக முக்கியமானது! பிசாசானவன், தன் தந்திரத்தாலே நம் 'மனதைக்' கெடுப்பான் என பவுல் எச்சரித்தார். நம்முடைய விசுவாசத்தை இழந்து, நம் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி, கிறிஸ்துவின் தியானத்தை விட்டு நம்மைப் பிரிப்பதே பிசாசின் ஒரே நோக்கம்! எக்காலத்தும் 'தேவ சமாதானம்' நம் மனதை ஆள்வதை விட்டுவிடாத உறுதியை நாம் பெற்றிருக்க வேண்டும்! இல்லையெனில், பிசாசாகிய 'கொடூரன்' நம்மை, நிம்மதி இழக்கச் செய்து, இந்த பூமியின் மாந்தரைப்போலவே நிலைகுலையச் செய்திடுவான்!

அந்த சமயத்தில் அந்த அரக்கனோடு, மாயாவி பெண்ணைப்போல் கொடூரமாய் தோற்றமளித்த அரக்கனின் மனைவியும், பாதாளச் சிறையை திறந்து உள்ளே வந்தார்கள்! அப்போது இந்த அரக்கன் தன் மனைவியை பார்த்து "இந்த கைதிகளுக்கு நாம் என்ன செய்யலாம்?" என கேட்டான். அதற்கு அவள், ஒரு பெரிய உருளைத் தடியை எடுத்துச் செல்லும்படி கூறி, அவர்கள் இருவரையும் சிறிதளவு இரக்கமும் காட்டாதபடி, அந்த பெரிய

தடியைக் கொண்டு பலமாய் அடித்து உதைக்க கூறினாள்!



'மனச்சோர்வு என்ற அரக்கன்' மகா கொடியவன் என நாம் அறிந்திருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் இந்த மனச்சோர்வின் பாதாள அறைக்குள் விழுந்து விடக்கூடாது! உள்ளே நுழைந்த அவன் மேலும் மேலும் மனச்சோர்வு அடையும்படி அவர்களை நைய புடைத்தான். அச்சமயத்தில் கிறிஸ்தியான் செய்த ஓர் நல்ல செயல் என்னவென்றால், எவ்வளவுதான் மனதைரியத்தை இழந்தாலும் **'விசுவாசத்தை'** இறுகப்பிடித்து கொண்டான்!




அப்போது அந்த மனச்சோர்வின் அரக்கன், இன்று அநேகருக்கு சம்பவிக்கிற ஒரு கொடிய பாதையை காட்டினான். இந்த மனச்சோர்விலிருந்து விடுதலை பெற "உங்களுக்கு மூன்று வழிகள் உண்டு!" என அவர்களின் இருதயத்திற்கு அருகில் வந்து கூறினான். அதை நானே உங்களுக்குத் தருவேன். ஒன்று இந்த கூர்மையான கத்தியைக் கொண்டு உங்கள் உயிரை போக்கி கொள்ளலாம். அல்லது இந்த விஷபாட்டிலைக் குடித்து **உங்களை மாய்த்துக் கொள்ளலாம்.** அல்லது இந்த கயிற்றைக் கொண்டு தூக்கில் தொங்கி, உயிரை விட்டு விடலாம்! என

கூறினான். ஆனால் அவர்கள் இருவரும் தங்கள் பிழையை உணர்ந்திருந்தபடியால், இப்பொழுது விழிப்படைந்து "மிக்க நன்றி, நீங்கள் எங்களுக்கென்று வழங்கிய இந்த மூன்றும் வேண்டவே வேண்டாம்" எனக் கூறி மறுத்து விட்டார்கள். ஏனென்றால் 'தற்கொலை' என்பது கொலைக்கு சமமானதேயாகும். **நீங்கள் யாரோ சிலரை கொலை செய்வதும், உங்களையே நீங்கள் கொன்று போடுவதும் ஒரேவிதமான குற்றமாகும்.** அதற்கு கிறிஸ்தியான் "இதுபோன்ற குற்றத்தை எங்களால் செய்ய முடியாது! எங்களுடைய ஜீவியம் தேவனுடைய கரத்தில் இருக்கிற படியால், நாங்களாக அதைப் பறித்து போட இயலாது. நாங்கள் மன தைரியத்தை இழந்தது உண்மையாயிருந்தாலும், அது எங்கள் பிழை... அதிலிருந்து நாங்கள் நிச்சயமாய் வெளியே வந்துவிடுவோம்! இதை விட்டு விட்டு, தற்கொலை செய்தால் எங்கள் கதி என்ன?" என கூறினான். அந்த அரக்கன் கோபத்தை வெளிக்காட்டாமல், அந்த பாழடைந்த இடத்தின் உச்சி மாடிக்கு அவர்களை அழைத்துச் சென்றான்!



அங்கே குவியலாய் கிடந்த மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் காண்பித்தான். பின்பு அவர்களை பயமுறுத்துவதைப்போல் பார்த்து "இதோ பார்த்தீர்களா, **என்னுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்த அனைவரையும் நான் அழித்து விட்டேன்.** இவர்களும் உங்களைப் போலவே சிலுவையின் பாதையை விட்டுவிட்டு, கடினமான அந்த பாதைக்குப் பதிலாய், என் இராஜ்ஜியத்தின் இலகுவான பாதைக்குள் வந்தவர்கள்! அவர்கள் அனைவருடைய கதியும் இதுதான்!" என அவர்களை மமதையுடன் மிரட்டினான்!

அவர்களோ மனத்தளர்ச்சியிலிருந்து மீண்டு உறுதியான இடத்திற்கு வந்தபடியால், அந்தகாரலோகாதிபதியின் அச்சுறுத்தல், தங்களை மீண்டும் மன உளைச்சலுக்குள் வர அனுமதிக்கவில்லை! அந்த அரக்கனோ, தன்னுடைய செயல்கள் யாதொன்றும் பழிக்கவில்லை என அறிந்து, கோபத்துடன் மீண்டும் அவர்களை அந்த கிடங்கிற்குள் போட்டு விட்டான்.



அந்த பாதாள கிடங்கிற்குள் வீசப்பட்ட இருவரும் "ஓ கர்த்தாவே, நாங்கள் செய்யக் கூடிய **மிகப்பெரும் பகுதி 'ஜெபம்' ஒன்றுதான்!** உம்மாலன்றி எங்களை யாரும், இந்த பாதாளக்கிடங்கிலிருந்து விடுவித்திட முடியாது! தயவாய் எங்களை விடுவியும்" என ஜெபித்தார்கள். இவ்வித தொடர்ச்சியான ஜெபத்தோடு, உங்களிடம் **அந்நியபாஷை பேசும் வரமிருந்தால்,** அதையும் பயன்படுத்தி இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்! ஒருவேளை உங்களிடம் அந்நியபாஷை பேசும் வரம் இல்லையென்றால், மனந்தளராமல் இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்!

ஜெபம் முடிந்தவுடன், திடீரென்று கிறிஸ்தியான் நினைவுகூர்ந்து, தன் பையிலிருந்த சாவியை எடுத்து, மகிழ்ச்சி அடைந்தான்....

**"ஆ இந்த வாக்குதத்த சாவி நமக்கு விடுதலையின் உணர்வை கொடுத்து விட்டது! இந்த வாக்குதத்த சாவி, எந்த மூடிய கதவையும் திறந்துவிடும்!" என மகிழ்ச்சியுடன் அறிக்கையிட்டான்.**

இப்போது அவிசுவாசம், சந்தேகம் நிறைந்த இந்த குகையின் சிறைவாசலையும் இந்த சாவி நிச்சயமாய் திறந்து விடும் என முழக்க மிட்டான். தான் அடைப்பட்டிருந்த மனச்சோர்வு, சந்தேகம், அவிசுவாசம் ஆகிய குகையிலிருந்து விடுதலைப் பெறப்போகிறோம் என்ற நம்பிக்கை அவனுடைய உள்ளத்தை ஆட்கொண்டது!



தன் விசுவாசத்தை செயல்படுத்தும் விதமாய், **வாக்குதத்த சாவியை பிடித்துக்கொண்டு** விரைந்து ஓடினான்! அவன் கண்ட முதல் சிறைக்குகையை திறந்தான்! விரைந்து ஓடி, இரண்டாவது சிறைக் குகையையும் திறந்தான்! இவ்வாறு ஓடி ஓடி வாக்குதத்த சாவியை உறுதியாய் பிடித்துக்கொண்டு, கடைசி குகையின் கதவையும் திறந்தான்!

அந்த கடைசி கதவை திறந்தபோது, அதிலிருந்து ஒரு மிகப்பெரிய "கிரீச்" ஒலி உண்டானது. அங்கு வாசலில் படுத்திருந்த **மனச்சோர்வின் அரக்கன்** உடனே தூக்கத்திலிருந்து எழுந்து விட்டான்! அவர்கள் வெளியே வாக்குதத்த சாவியை பிடித்துக்கொண்டு ஓடுகையில் ஆத்திரமடைந்த மனச்சோர்வின் அரக்கன் வெகு வேகமாக சென்று அவர்களைப் பிடிக்க வந்த நேரத்தில், இந்த மனச்சோர்வின் அரக்கனின் காலில் 'முடக்குவாதம்' ஏற்பட்டு கீழே விழுந்தான்!

தேவன் எவ்வாறெல்லாம் தன் வாக்குதத்தத்தைக்கொண்டு தன் ஜனத்தை காப்பாற்றுகிறார் என்பதற்கு, அரக்கன் கீழே விழுந்த செயல் நிருபணமாயிருந்தது!



# 16

## பாதை செவ்வைப்படுத்திய, மேய்ப்பர்கள்!

இவ்வாறாக மனச்சோர்வின் குகையிலிருந்து இந்த மோட்ச பயணிகள் தப்பிவிட்டனர். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், தேவனுடைய வாக்குதத்தங்களுக்கு முன்பாக 'மனச்சோர்வு' எக்காலத்தும் நிலைநிற்க வல்லமை கொண்டதில்லை என்பதுதான்!

> **வாக்குதத்தத்தின் சாவியானது சந்தேகம், அவிசுவாசத்தின் குகையிலிருந்து விடுதலை பெற மகா வல்லமை கொண்டது என்பதை நாம் அறிந்திருக்கக் கடவோம்!**

இனியும் நம்மில் ஒருவராது, ஒரு நாள்கூட மனச்சோர்விற்கு சிறைப்பட்டு விடக்கூடாது.



அந்த இடத்தைவிட்டு தப்பி வந்த கிறிஸ்தியானும் அவனுடைய நண்பனும் மீண்டுமாய் இராஜரீக பாதையான, நித்திய ராஜ்ஜியத்திற்கு நடத்தும் "இடுக்கமான பாதையை" கண்டடைந்தார்கள்!

அவர்கள் வெளியே வந்தவுடன், தங்களுக்குப் பின்னால் வரும்

மோட்ச பயணிகளுக்கு, இந்த குறுக்கு பாதையைக் குறித்து ஒரு எச்சரிக்கை வாசகம் எழுத வேண்டும் என தீர்மானித்து "**ஒருபோதும் குறுக்கு வழி நாடாதீர்கள்**" என்ற வார்த்தைகளை எழுதினார்கள். அப்படி அவர்கள் ஒரு எச்சரிக்கையை எழுதி வைத்தபடியால், ஏராளமான மோட்ச பயணிகள் அந்த குறுக்கு வழிக்குள் செல்லாமல் தங்களை மனச் சோர்விலிருந்து காத்துக்கொண்டார்கள்!

**நாம் தோல்வியிலிருந்து சில பாடங்களை கற்றுக்கொண்டால், அதே தோல்வியை மற்றவர்களும் அடையாதபடி நாம் உதவி செய்திட முடியும்!**

ஆகவே தோல்வியிலிருந்தும், சில ஆசீர்வாதங்களை நாம் அடைந்து, அதன் மூலமாய் மற்றவர்களையும் நாம் ஆசீர்வதித்திட முடியும் என்பதை அறிவோமாக!

மிகுந்த மகிழ்ச்சியோடும், வைராக்கியத்தோடும் பயணத்தை தொடர்ந்த நமது மோட்ச பயணிகள், பரம தேசத்தின் அழகுள்ள தோட்டங்களின் குன்றுகளையும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் விரைந்து குன்றுகளின் அடிவாரத்திற்கு வந்தபோது தேவபக்தியான 'மேய்ப்பர்களைக்' கண்டார்கள்!



அந்த மேய்ப்பர்கள் இந்த இருவரையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். பல இன்னல்களைத் தாண்டி இந்த ஸ்தலம் வந்ததற்காக அவர்களை மெச்சிக் கொண்டார்கள். மேய்ப்பர்களாயிருந்த அந்த மூப்பர்களின் பெயர் 1)தேவனை அறியும் அறிவு 2)அனுபவம் 3)விழிப்புள்ளவன் 4) உண்மையுள்ளவன்.

**இவ்வாறாக தேவனை அறிகிற அறிவிலும் அவரோடு நடந்து சென்ற அனுபவத்திலும் ஆத்துமாவை விழிப்புடன் கண்காணிப்பதிலும், மற்றும்**

**உண்மையுள்ளவர்களாயிருந்து தங்கள் மந்தையை நடத்தியவர்கள்! இதுபோன்ற குணாதிசயங்களே, மூப்பர்களாயிருக்கும் தலைவர்கள் அனைவரிடத்திலும் காணப்பட வேண்டும்.**

அவர்களைப் பார்த்து, இந்த நான்கு மூப்பர்களும் "வாருங்கள், இந்த இடத்திற்கு பெயர், இம்மானுவேல் பூமி!" என கூறி வரவேற்றார்கள். நீங்கள் இங்கே வாசம் செய்து 'பரம தேசத்தை' நீங்கள் தெளிவாய் காணலாம் என கூறியதைக் கேட்டு, மோட்ச பயணிகள் அதிக மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அவர்கள் அளித்த அன்பின் உபசாரங்களை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு, அன்று இரவு முழுவதும் அவர்களோடு ஐக்கியம் கொண்டு இளைப்பாறினார்கள்.



மேய்ப்பர்கள் கிறிஸ்தியானையும் அவன் உடன் சென்ற நம்பிக்கை யாளனையும் ஒரு குன்றின் மேல் நடத்தி சென்று, அதற்கு கீழாக இருந்த அகல பாதாளமான பள்ளத்தை காண்பித்தார்கள்! "அங்கே விழுந்து மரித்து கிடக்கும் ஜனங்களைக் கண்டீர்களா?" என காண்பித்தார்கள்.

மேலும் ஒரு மேய்ப்பன் கூறும்போது இந்த குன்றின் பாதாளத்திற்கு பெயர் '**பிழை**' என்பதாகும்..... அதாவது, 'பிழையான உபதேசம் என்பதே அர்த்தமாகும்' என கூறினான். ஏற்கெனவே சில கள்ள உபதேசங்களை தாண்டி வந்த பிறகும்கூட, இன்னமும் பொய்யான உபதேசங்கள் ஒருவனை தவறச் செய்திட முடியும்! இதுபோன்ற நிலையே, அநேக நல்ல சகோதரர்களுக்கு கூட ஏற்பட்டிருப்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். பல வருடங்கள் சத்தியத்தில் நிலைநின்ற அவர்கள், தவறான உபதேசங்களுக்குள் திடீரென்று வீழ்ச்சி அடைகிறார்கள்.

இவ்வாறாக உன்னதத்தின் பாதையை அல்லது சிலுவையின் பாதையை இவர்கள் இழந்து **"இனியும், நாம் சிலுவை எடுத்து வரும் வாழ்க்கை அவசிய மில்லை!" என்ற பிழையான உபதேசத்திற்குள்** வீழ்ச்சி அடைகிறார்கள். ஒரு உச்ச ஸ்தானத்திற்குச் சென்றபிறகு, அகல- பாதாளத்திற்குள் வீழ்கிறோம் என்பது அவர்களுக்கே தெரிவதில்லை!

அவர்களின் வீழ்ச்சிக்கு காரணம் "தேவனை நேசிப்பதும், பிறரை நேசிப்பதும்" ஆகிய உன்னத சத்திய வழியிலிருந்து தவறிப்போகிறார்கள். நம் இரட்சிப்பின் உச்சகட்டமாய் இருக்க வேண்டியதெல்லாம், நம் தாய் தந்தை மனைவி ஆகிய யாரைக் காட்டிலும், நமக்குரிய எல்லாவற்றையும் காட்டிலும், தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடு அன்புகூர வேண்டும் என்பதையும், பிறர் நமக்கு எத்தனை தீங்கு செய்தாலும் அவர்களை அன்புகூர வேண்டும் என்பதையும் நமது நிரந்தர இலக்காய் வைத்திருக்க வேண்டும்! இந்த இலக்கை நாம் எப்போது தவற விடுகிறோமோ, அந்த கணமே நாம் பிழையான உபதேசத்திற்குள் வீழ்ச்சி அடைவோம்!

இந்த கடைசி நாட்களில், ஏராளமான கள்ள உபதேசங்கள் தோன்றியுள்ளன. இதுபோன்ற கள்ள உபதேசங்களுக்கு "பெருமை கொண்டவர்கள்" மிக எளிதில் விழுந்து விடுகிறார்கள். இதுபோன்ற நிலைமையை கடந்த 40 ஆண்டுகளாய் எங்கள் CFC சபை அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன். தாறுமாறான கள்ள உபதேசங்களுக்கு **"பெருமையுள்ளவர்களே" வீழ்ச்சி அடைந்தார்கள்** என்பதை நான் கண்டிருக்கிறேன்!



இந்த மேய்ப்பர்கள் அவர்களை நடத்தி ஒரு பெரிய மலை உச்சிக்கு கொண்டு சென்றார்கள். அந்த மலைக்கு **"ஜாக்கிரதையாயிருங்கள்"** என்ற

பெயராம்! அந்த மலைக்கு கீழாக ஒரு கல்லறை தோட்டம் இருந்தது. அந்த கல்லறைத் தோட்டத்தின் நடுவில் குருடான ஜனங்கள் அங்குமிங்கும் தடுமாறி நடந்து கொண்டிருந்தார்கள். அந்த காட்சியை அந்த மேய்ப்பன் அவர்களுக்கு காண்பித்து "தாங்கள் எங்கு செல்ல வேண்டும்? எந்த பாதையில் செல்ல வேண்டும்?" என திக்கு தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் அவர்களைப் பாருங்கள்! என கூறினார். மேலும் அந்த மேய்ப்பன் கூறும்போது "இந்த பயணிகள் **மனச்சோர்வின் அரக்கனால்** அடிக்கப்பட்டவர்கள். அவன் அவர்களை கொன்று போடாமல் குருடர்களாய் மாற்றிவிட்டான்!" என கூறினர்!

இந்த மனச்சோர்வு என்ற அரக்கன், மிக கொடூரமானதாகும். நாம் அவனை விட்டு துரிதமாய் வெளியே வரவில்லையென்றால் **'நம் மன கண்களை'** குருடாக்கிப் போடுவான்!



அதன் பின்பு, நரகத்திற்குச் செல்லும் வாசலின் ஒரு பெரிய கதவைக் கண்டார்கள். அவர்கள் அடைந்த ஆச்சரியம் என்னவென்றால், இவ்வளவு நீண்ட பயணத்தில்..... பரலோகத்தை நெருங்கி வரும் நேரத்தில், நரகமும் மிக அருகில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்! இது எதைக் குறிக்கிறது என்றால்:

> நாம் நீண்ட வருடங்களாய் ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து, தேவ ராஜ்ஜியத்திற்கு மிக அருகில் வந்தாலும் கூட "நாம் மிகுந்த கவனமாய் இல்லையென்றால்" நரகத்திற்கு சென்றுவிட முடியும் என்ற அபாயத்தை ஜான் பணியன் உணர்ந்து நமக்கு எழுதியது மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது!

அவர்களை நடத்தி வந்த மேய்ப்பன் "மாய்மாலக்காரர்களே இப்படி ஒரு நரகத்தின் சோகத்தை அடைகிறார்கள்! ஆனால், நேர்மையுள்ள

கிறிஸ்தவர்கள் எத்தனை முறை வீழ்ச்சி அடைந்தாலும் உண்மை யுள்ளவர்களாய் மனந்திரும்புகிறபடியால், இந்த கேட்டின் வாசலுக்குத் தப்புகிறார்கள்" என கூறினார். ஆகவே, யாரெல்லாம் தங்களை ஆவிக்குரியவர்களைப் போல் நடித்து மாய்மாலம் செய்கிறார்களோ, அவர்களே இந்த கேட்டின் வழிக்குள் விழுகிறார்கள் என எச்சரித்து கூறினான்.

எபிரெயர்.3:14 - கூறுகிறபடி "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" என்று கூறுகிறது! அதுபோலவே வெளி.3:5 கூறும்போது "ஜெயம் பெறுகிறவர்கள் எவர்களோ, அவர்கள் இரண்டாம் மரணத்தை சந்திக்க மாட்டார்கள்!" எனவும் வாக்குரைக்கிறது.



# 17

## பயணத்தில் 'ஆவிக்குரிய உறக்கம்' கூடாது!

**உ**த்தம கிறிஸ்தவ ஜீவிய பயணத்தின் இரகசியம் என்னவென்றால், நாம் உறுதியாய் நிலைத்திருப்பதற்கு **கர்த்தரே உதவி செய்வார்** என்பதுதான்! ஆனால் நாமோ பெருமைக்கு விலகியிருக்க வேண்டும்! நம்முடைய இரட்சிப்பின் பயணம் பாதியில் நின்று விடுவதற்கு, **'பெருமையே'** மிகப்பெரிய அபாயமாயிருக்கிறது.



பின்பு, அந்த மேய்ப்பன், அந்த மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்றான். அந்த குன்றின் பெயர் 'தெளிந்த பார்வை' என்பதாகும். அந்த மேய்ப்பன் கிறிஸ்தியானுக்கு 'ஒரு தொலை நோக்கு கருவியை' கொடுத்து தூரத்தில் காணும் பரலோக நகரத்தை காணும்படிச் செய்தான். நாம் தேவனை நெருங்கி கிட்டிச் சேர சேர 'தேவனுடைய சமூகத்தை' நாம் அதிகமாய் உணர்ந்திடுவோம்! அதுபோலவே 'தேவ தூதர்களும்' நம்மை நெருங்கி சூழ்ந்திருப்பதையும் நாம் உணர்வோம்!

ஒரு வயதுசென்ற தேவ பக்தியுள்ள மனிதனை நான் அறிவேன். அவருடைய மனைவி இறந்துவிட்டார்கள். பிள்ளைகளும் தூர இடத்தில்

வசிக்கிறார்கள்! அச்சமயத்தில் "நீங்கள் மாத்திரம் தனியாயிருப்பீர்கள் அல்லவா?" என சிலர் கேட்டார்கள். அதற்கு அவர் "அப்படி இல்லை, என் வீட்டிற்குள் ஏராளமான தூதர்கள் இருக்கிறார்கள். நான் உள்ளே வரும்போது அவர்களை கொஞ்சம் ஒதுக்கி விட்டுதான் உள்ளே வருவதுண்டு! ஆகவே நான் ஒருபோதும் தனிமையில் இருப்பதாக உணர்ந்ததில்லை" எனக் கூறினார்! இது ஒரு ஆச்சரியமான வாழ்க்கை அல்லவா? உங்கள் ஜீவியத்தின் முடிவை நெருங்க நெருங்க தேவனுடைய சமூகமும், பரலோகத்தின் நகரமும், பரலோக தூதர்களும் உங்களோடு மிக சமீபமாய் இருப்பதைக் காண்பது அதிக பரவசமல்லவா!

தொடர்ந்து அந்த மேய்ப்பன் "பரலோக நகரத்தை காண்பித்து" 'இடைவிடாமல் முன்னேறி பயணத்தை தொடருங்கள்' என உற்சாகப் படுத்தினார். "எந்த நிலையிலும், பரலோக ராஜ்ஜியத்தின் மீது பதித்து வைத்த உங்கள் கண்களை சிறிதுகூட விலக்காமல் முன்னேறுங்கள்" என்றார்.



அந்த இடத்தைவிட்டு அவர்கள் தொடர்ந்து பயணித்த போது, ஒரு வாலிபனைக் கண்டார்கள். அந்த வாலிபனின் பெயர் **'அறியாமை'** என்பதாகும். பரலோகம் நெருங்கி வரும் நேரத்தில்கூட அல்லது உச்சக்கட்டமான இடத்தை அடைந்த பிறகும்கூட இன்னும் சிலர் 'அறியாமைக்குள்' வீழ்வதைக் காண்பது ஆச்சரியமாயிருக்கிறது. அறியாமை என்பது சத்தியத்தை அறிந்து கொள்ளும் மதிப்பை இழப்பதேயாகும்! இதை ஆண்டவர் கூறும்போது "நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார்.

ஆகவே நாம் சத்தியத்திற்கு அளித்திடும் மதிப்பை எப்போதும் அறிந்து உணர்ந்தவர்களாயிருக்க வேண்டும். அந்த நிலையில் மாத்திரமே

ஒருவன் அறியாமை வலைக்குள் விழாதபடி தன்னை காத்துக்கொள்ள முடியும்!

**இல்லையென்றால் சத்தியத்தின் மதிப்பை இழக்கிற யாராயிருந்தாலும் அவர்களுக்கு பின்மாற்றம் துரிதமாய் ஏற்பட்டுவிடும்!**

அவனைக் கண்ட கிறிஸ்தியானும் நம்பிக்கையாளனும் உரத்த சத்தமாய் "சகோதரா, திரும்பிப் போக வேண்டாம், தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள்!" என புத்தி கூறினார்கள். ஆனால் 'அறியாமையோ' அவர்களைப் பார்த்து "நீங்கள் வேண்டுமானால் தொடர்ந்து பயணியுங்கள். நான் எல்லாவற்றையும் பார்த்து விட்டேன்" என அசட்டை செய்தான்!

இதுபோன்று, தங்களுக்கு எல்லாம் தெரியுமென்றும் தங்களுக்கு முன்பாக சென்ற பக்தியுள்ள சகோதரர்களைக் காட்டிலும் அதிகமாய் தெரியுமென்றும், இவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள்! இதுவே அறியாமையை சூழ்ந்திருக்கும் மதியீனமாகும்.

**இதுபோலவே பல வருடங்களாய் சபையில் ஜீவித்தவர்கள் 'தங்களுக்கு எல்லாம் தெரியும்' என்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இதுபோன்ற நிலை பெருமை என்ற ஊற்றுக்கண்ணிலிருந்து தோன்றியதாகும். எப்போதுமே 'பெருமை' நம்மை வழிதப்பிபோகச் செய்யும் என்பதை நாம் யாவரும் அறிந்திருப்போமாக.**

இதுபோன்ற 'தனக்கு எல்லாம் தெரியும்' எனக் கூறி பயணம் செய்பவர்கள், பின்மாற்றத்தின் வழி நடந்து, முடிவில் நரகத்தின் வாசலுக்குள் செல்வார்கள்!



அவர்கள் தொடர்ந்து சென்ற பாதையில் ஒரு குறுகலான வழியை

கண்டார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி அளித்தது. அங்கே ஒரு மனிதனை ஏழு பிசாசுகள் கட்டி இழுத்துக்கொண்டு சென்றன. இயேசு இதை நமக்கு ஏற்கெனவே எச்சரித்துள்ளார்: "ஒருவனிடத்திலிருந்து ஒரு பிசாசு வெளியேற்றப் பட்டவுடன்..... அவன் அந்த இடத்தை பரிசுத்தாவியினால் நிறைத்து வைத்திருக்காவிட்டால், அந்த வெறுமையான இடத்தைக் கண்ட அந்த முதல் அசுத்தஆவி, ஏழு பிசாசுகளைத் தன்னோடு அழைத்துக்கொண்டு மீண்டும் அவனுடைய இருதயத்தில் அமருவான்" என எச்சரித்துள்ளார்! இவ்விதமாய் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டுப் போன அந்த மனிதனின் பெயர் "**விசுவாசத்தை விட்டு விலகியவன்**" என்பதாகும். அவன் வசித்த ஊரின் பெயர் "மீண்டும் வீழ்ச்சியடையச் செய்யும் பட்டணம்" என்பதாகும்.

இவ்வாறாக நம் கர்த்தரை விட்டு திரும்பி சென்றிட, நம் ஜீவியத்தின் கடைசி நேரத்தில்கூட அபாயங்கள் உள்ளன. ஆகவேதான் "தன்னை நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதிருக்க எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" என வேதம் குறிப்பிடுகிறது. இதுபோன்ற அபாய ஸ்தலத்திலிருந்து நாம் எவ்வாறு பாதுகாக்கப்பட முடியும்? அதற்கு மூன்று காரியங்கள் உள்ளன: 1)தாழ்மை, 2)தாழ்மை, 3)தாழ்மை..... அவ்வளவுதான்! இதையே நீங்கள் எப்போதும் பின்பற்றி வாழுங்கள்.

இதை கிறிஸ்தவ ஜீவியத்தின் 'மூன்று இரகசியங்கள்' என மனதில் பதித்துக் கொள்ளுங்கள். இதுவே இயேசு நடந்து சென்ற வழியாகும்..... அவருக்கு முதலும் தாழ்மை, முடிவும் தாழ்மை! இதற்குப் பெயர்தான் **சிலுவையின் வழி** என அர்த்தம். இவை அனைத்தும் நமக்கு எச்சரிக்கையாகவே தரப்பட்டுள்ளன.



இந்த மனிதன் இழுத்துக்கொண்டு செல்லப்படுவதை கிறிஸ்தியான் பார்த்தவுடன் "தான் கேட்ட ஒரு நிகழ்ச்சியை" நினைவுகூர்ந்தான்:

அவன் நினைவுகூர்ந்த மனிதனின் பெயர் **'கொஞ்ச விசுவாசம்'** என்பதாகும். இவன் வாழ்ந்த நகரத்தின் பெயர் 'உண்மை' என்பதாகும். இவனும் ஒரு மோட்ச பயணிதான். ஆனால் இவனோ, நன்றாய் தூங்குபவன்! அவன் தூங்கச் செல்லும் இடத்தின் பெயர் **'சாகத் தேடியவர்களின் ஸ்தலம்'** என்பதாகும். இவனிடத்தில் கொஞ்சம் விசுவாசம் வைத்திருந்து, அதில் உண்மையுள்ளவனாய் ஜீவித்தபோதும் தூங்குவதற்கு சென்று விட்டான்!

இவ்வாறு சாகத்துணிந்தவனின் ஸ்தலத்தில் தூங்கிக்கொண்டிருந்த அவனை மூன்று கெட்ட கொள்ளைக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு கொள்ளைக்காரனின் பெயர் 1) இதயம் சோர்ந்தவன் 2) நம்பிக்கை இழந்தவன் 3)குற்றமனப்பான்மைக் கொண்டவன். இவர்கள் மூவரும் சூழ்ந்து.....



அவனிடமிருந்து பணத்தை கொள்ளையாடினார்கள். தடியினால் அவனை அடித்தார்கள்! இது எதைக் காட்டுகிறது என்றால், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தேங்கிய அல்லது 'தூங்குவது போன்ற' மந்த நிலையை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது! என்ற எச்சரிப்பேயாகும்.

நாம் அனைவருமே இடுக்கமான இந்த ஜீவவழியில் உண்மை யுள்ளவர்களாய் இருக்க முடியும்! ஆகிலும் எவ்வளவு உண்மை யுள்ளவர்களாயிருந்தாலும் **'ஆவிக்குரிய உறக்க நிலைக்கு'** ஒருபோதும் சென்றுவிடக்கூடாது. இந்தப் பாடத்தை, இன்று அநேகர் கற்றுக்கொள்ள வில்லை! ஆகவே அவர்களுடைய ஆவிக்குரிய மந்த நிலையில்,

பிசாசானவன் அவர்களை கொள்ளையாடி, பின்பு அழித்தும் போடுகிறான்.

அந்த சமயத்தில் ஒரு கெம்பீரமான மனிதன் தோன்றினான். அவனுக்கு பெயர் "**மாபெரும் கிருபை**" என்பதாகும்!



'மாபெரும் கிருபை' என்ற அந்த மாமனிதனைக் கண்ட மாத்திரத்தில், அந்த மூன்று கொள்ளைக்காரர்களும் 'கொஞ்ச விசுவாச' மனிதனை அப்படியே விட்டுவிட்டு ஓடினார்கள்!

இந்த கெம்பீரமான மனிதன் 'கொஞ்ச விசுவாச' மனுஷனுக்கு உதவும்படியே தோன்றிய 'மாபெரும் கிருபை' மனிதனாவான். ஏனென்றால் இந்த கொஞ்ச விசுவாசம் கொண்ட மனிதன், தீமையானவன் அல்ல. அவன் உண்மையுள்ளவன்தான்!

இன்றும் சிலர் இவ்வாறாகவே இருக்கிறார்கள்.... அவர்கள் தீமையானவர்கள் அல்ல, பணத்தை நேசிப்பவர்களும் அல்ல, பெருமை கொண்டவர்களும் அல்ல.... ஆனால், அவர்கள் விசுவாசமோ வெகு குறைவாய் இருந்தது! ஒருவன் இந்த மோட்ச பயணத்தில், தன்னுடைய இந்த கொஞ்ச விசுவாசத்தை நாளுக்குநாள் பெருகச் செய்திருக்க வேண்டும்!

அப்படி இல்லையென்றால் அவன் விசுவாசம் கொஞ்சமாய் இருக்கிறபடியால், ஆவிக்குரிய மந்த நிலை அவனை சீக்கிரத்தில் சூழ்ந்து கொண்டு, கொள்ளைக்காரர்களைப் போன்ற பிசாசினால் தாக்கப் படுவார்கள் என்பது நிச்சயம்!

ஆகிலும் இந்த 'மா கிருபை' என்ற பெலசாலியான மனிதன் அங்கு வந்து உதவி செய்தபடியால், 'கொஞ்சம் விசுவாசம்' பிழைத்தான்!

இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால்:

**விசுவாசத்தில் கொஞ்சம் குறைவுபட்டாலும் 'உண்மையுள்ளவர்களாய்' நாம் நிலைத்திருந்தால், தேவனுடைய கிருபை நம்மை வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்கும்!**

மேலும், ஆண்டவராகிய இயேசு 'கொஞ்ச விசுவாசம் கொண்டவர்களை' புறக்கணிக்காமல் அவர்களையும் தூக்கி எடுத்து உதவுகிறார் என்ற உண்மையை நமக்கு காட்டுகிறது. நம் கிறிஸ்தவ ஜீவிய பயணத்தில், எத்தனை தோல்விகள் ஏற்பட்டாலும்.... அதனிமித்தம், நம்மை மனம் துவள வைத்து, நம் விசுவாசத்தைப் பறித்துகொள்ளவே பிசாசு நாடுகிறான். தேவனோ, நம் மோட்ச பயணத்தில், நம் சார்பாகவே எப்போதும் நிற்கிறார் என்பதை அறிந்து கொள்வது, நம் உள்ளத்திற்கு மிகுந்த ஆறுதலைத் தருவதாய் உள்ளது!



# 18

## முகஸ்துதியா? சிட்சிக்கும் ஆண்டவரா?

**ந**ம் வீழ்ச்சியின் எந்த நிலையிலும், நாம் கிருபையை அழைத்து கூப்பிடும்போது, அந்த ஏற்ற வீழ்ச்சியின் நேரத்தில் அவர் நமக்கு உதவி செய்யும்படி தமது கிருபையை தந்து நம்மை தேவன் ஆதரிப்பார்!



அதன்பின்பு, இவர்கள் இருவரும், பாதை இடது வலது பக்கமாக இரண்டாக பிரியும் இடத்திற்கு வந்தார்கள். இதில் எந்தப் பாதையை தெரிந்துகொள்வது? இடது பக்க பாதையும் நன்றாகத் தோன்றுகிறது. வலது பக்க பாதையும் நன்றாகவே தோன்றுகிறது! அங்கே ஒருவன் 'வெண் வஸ்திரம் தரித்து' நின்று கொண்டிருந்தான். நாம் எல்லோரும் பொதுவாக எண்ணுவதெல்லாம், வெண் வஸ்திரம் தரித்த யாராயிருந்தாலும் நல்லவர்களாயிருப்பார்கள்! என்றே எண்ணுகிறோம். ஆகவே நாம் அவர்கள் கூறுவதை கவனிக்கிறோம். அந்த வெண் வஸ்திரம் தரித்தவனின் பெயர் **'வீண் புகழ் பாடுபவன்'.**

அவன் அவர்களைப் பார்த்து, இந்த இடது பக்கம் நடவுங்கள்....

இதுவே நல்ல வழி! என அழைத்தான். ஆனால், உண்மையில் அது சரியான வழி அல்ல. இதுபோன்ற சமயத்தில்தான் நாம் கவனமாயிருக்க வேண்டும். ஏனென்றால், சாத்தான்கூட "ஒளியின் தூதனுடைய வேஷத்தில் வருவான்" என வேதம் நம்மை எச்சரித்துள்ளது! ஆகிலும் கிறிஸ்தியானும் நம்பிக்கையாளனும் அவனை நம்பிச் சென்ற பாதையில் ஒரு வலைக்குள் சிக்கிக்கொண்டார்கள்.



இந்த வலையைக் குறித்து நீதிமொழிகள்.29:5 எச்சரிக்கை வார்த்தைகளை கூறியுள்ளது: "**பிறனை முகஸ்துதி செய்கிறவன்,** அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான்" என்பதேயாகும். இவ்வாறாகவே அநேக விசுவாசிகளை 'வீண்புகழ்ச்சியின் - முகஸ்துதி வைத்து' பிசாசானவன், அவர்களை தன் வலையில் சிக்க வைத்து விடுகிறான்!

ஆகவே யாராகிலும் நம்மிடத்தில் வந்து "நம்மைப் புகழ்ந்து முகஸ்துதி செய்யும்போது" அதை ஏற்றுக்கொள்ளாதீர்கள். உங்கள் கால்களின் கீழாய் விரிக்கப்படும் வலையை உடனே பார்த்து, அது சாத்தானுடைய வலை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்!

**சாத்தான் எப்போதுமே நம்மை மீண்டும் மீண்டும் ஏதாவது கட்டுகளுக்குள் கொண்டு வரவே முயற்சிக்கிறான்.**

இதற்கு நேர்மாறான இரட்சிப்பு எதுவென்றால் "உங்கள் முகத்துக்கு நேராக கடிந்து கொள்ளும் சகோதரனை" அன்புடன் ஏற்றுக்கொள்வதே சிறந்த வழியாகும்.

இந்த உலகத்திலுள்ள ஜனங்களோ அல்லது உலக ஆவியை கொண்ட விசுவாசிகளோ தங்களை கடிந்து கொள்பவர்களை அன்புடன் ஏற்றுக் கொள்வதில்லை! அதற்கு நேர்மாறாக, தங்களை புகழ்ந்து முகஸ்துதி

செய்யும் நபர்களையே எப்போதும் விரும்பி, அவர்களை தங்களுடைய நண்பர்களாக சேர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். அவர்களின் கால் சாத்தானின் வலையில் சிக்கிவிட்டது என இன்னமும் அறியாமலே ‘முகஸ்துதியில்’ மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்!

மோட்ச பயணத்தில், இந்த வலையில் சிக்கிக்கொண்ட இவர்கள், அதிலிருந்து விடுதலை பெற முயற்சித்தபோது, அந்த முகஸ்துதியாளன், தன்னை மூடி வைத்திருந்த வெள்ளை துணியை வீசி எறிந்தான்! இப்போது இவர்கள் இருவரும் தங்களை சந்தித்தவன் ‘ஒளியின் வேஷத்தை தரித்த பிசாசானவன்’என்பதை அறிந்து கொண்டார்கள். ஆகவே நாம் அனைவருமே, **நம் ஜீவியத்தின் கடைசி நேரம் வரை** மிகுந்த கவனமாய் ஜீவிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதுபோன்ற கவனம் நாம் பரலோகத்தின் வாசலை அடையும் வரை வைத்திருக்க வேண்டும் என்ற பாடத்தையே இங்கு நாம் கற்றுக்கொள்கிறோம்.



அந்த நேரத்தில் ஒரு வெண்மையான தூதன், தன் கையில் சாட்டையுடன் தோன்றினார். இது எதை காட்டுகிறது என்றால், “நாம் வழி தவறிப்போகும் நேரமெல்லாம் சிட்சிக்கப்பட வேண்டியது அவசியம்” என்பதையே காட்டுகிறது. அந்த தூதன் அவர்களை சாட்டையினால் சிட்சித்து **“நீங்கள் எவ்வாறு, நான் மேய்ப்பர்களாய் வைத்திருக்கிற தாசர்களின் ஆலோசனைகளை அலட்சியப்படுத்தலாம்?”** என சிட்சித்தார். இவ்வாறு சம்பவிக்கும் என, முன்கூட்டியே ‘இம்மானுவேல் தேசத்தில்’ தன் மேய்ப்பர்களை வைத்து அவர்களுக்கு புத்தியும் ஆலோசனையும் கூறியிருந்தார். அந்த ஆலோசனை என்னவென்றால் “நீங்கள் இலக்கை நெருங்கி வந்து விட்டீர்கள் என்பதற்காக மெத்தனம்

கொண்டு அசட்டையாய் இருக்க வேண்டாம்!" என்றே கடிந்து புத்தி சொல்லப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறாக அந்த வெண் தூதனாகிய பரிசுத்தாவியானவர் அவர்களை எச்சரித்து, இனிமேலாவது உங்கள் தொடர் பயணத்தில் விழிப்புடன் ஜாக்கிரதையாயிருங்கள் என எச்சரித்தார். நம்மை வீழ்ச்சியில் விட்டு விடாதபடி 'சிட்சிக்கும்' நல்ல தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக! அந்த சிட்சை பொருளாதார நெருக்கடியாகவோ அல்லது சில சமயங்களில் சரீர நோவாகவோ கூட இருக்கக்கூடும். சிட்சைக்குப் பிறகு, அவர்களை அந்த வலையிலிருந்து விடுவித்து, ஜீவ பாதைக்குள் அவர்கள் தொடர்ந்து செல்ல ஊக்குவித்தான்! அதே சமயத்தில் "உங்களை இம்மானுவேல் தேசத்திலிருந்த மூப்பர்களும் மேய்ப்பர்களும் கூறிய நல்ல அறிவுரைகளை மறந்துபோகாமல், அதை மனதில் வைத்து விழிப்புடன் முன் செல்லுங்கள்" என கூறி அனுப்பி வைத்தார்!



தங்களை விடுவித்து அனுப்பி வைத்த பரிசுத்தாவியானவருக்கு மோட்ச பயணிகள் மிகுந்த நன்றிகூறி, தங்கள் பயணத்தை ஸ்தோத்திர பாடல்கள் பாடி தீவிரமாய் முன் சென்றார்கள்!



# 19

## ‘ஆவிக்குரிய முதிர்ச்சியிலும்’ அபாயம்!

**ப**ரிசுத்தாவியானவருக்கு மாத்திரமல்ல, நம்மை எச்சரித்து ஊக்குவிக்கும் தேவ பக்தியுள்ள சிறந்த மூத்த சகோதரர்களுக்காகவும் நாம் மிகவும் நன்றியுள்ளம் கொண்டவர்களாயிருக்க வேண்டும்!



ஆலோசனை திருத்துதலை நன்றியுடன் ஏற்றுக்கொண்ட அவர்கள், தங்கள் வழியில் **‘நாத்திகன்’** என்ற மனிதனை சந்தித்தார்கள். இதை உங்களால் நம்ப முடிகிறதா? தன் மோட்ச பயணத்தில் நீண்ட தூரம் பயணித்து வந்த ஒருவன் “மெய்யாகவே தேவன் ஒருவர் உண்டா?” என்ற கேள்வியின் எண்ணத்திற்கு பலியாகிப் போய் விட்டான்!

உங்களுக்குத் தெரியுமா? பல வருடங்கள் கிறிஸ்தவர்களாய் வாழ்ந்தவர்கள், தங்கள் விசுவாச பயணத்தில் கஷ்டங்களைச் சந்திக்கும் போது, தங்கள் ஜெபத்திற்கு பதில் கிடைக்காமல் போகும் நேரத்தில், சஞ்சலமடைந்து “நான் செல்லும் வழி சத்தியமானதுதானா?” என்ற சந்தேகம் அவர்களுடைய இருதயத்தில் முளைக்கத் தொடங்குகிறது!

இதுபோன்ற சந்தேகம், யோவான் ஸ்நானகனுக்கும் ஒருமுறை

*ஏற்பட்டது! இந்த யோவான்ஸ்நானகன், ஒரு அனல் கொண்ட தீர்க்கதரிசி!*

**ஆனால் அவனோ சிறையில் அடைக்கப்பட்டான். அவன் காலத்தில் வாழ்ந்த இயேசு கிறிஸ்து, இந்த யோவான் ஸ்நானகனை சிறையிலிருந்து விடுவிக்க வில்லை! அந்த சமயத்தில்தான் "சந்தேகம்" அவன் இருதயத்திற்குள் புகுந்தது!**

*ஆகவே அவன் இயேசுவிடம் இவ்வாறாக ஆட்களை அனுப்பி அல்லது ஜெபம் செய்து "நீர் மெய்யாகவே வரப்போகிற மேசியாதானா? நீர் மேசியா என்பது உண்மைதானா?" என சந்தேகித்துக் கேட்டான்.*

*இதுபோன்ற சந்தேகத்தைத் தூண்டும் மனகிலேசம் எப்போது வேண்டுமானாலும், எல்லோருக்குமே ஏற்படக்கூடும்! இதுபோன்ற நேரத்தில்தான் நாம் வேத வசனத்தை இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் மோட்ச பயணிகள் செய்தனர். நல்ல கிறிஸ்தவ பயணத்தை தொடங்கி 'நாத்திகனாய் மாறிவிட்ட' அவனைக் குறித்து ஏற்கெனவே எச்சரிக்கை பெற்றிருந்த இந்த மோட்ச பயணிகள் அவனுடைய அதைரிய வார்த்தைகளைக் கேட்காமல் பயணத்தை முன் தொடார்ந்தார்கள்.*

*அவனைக் கடந்து சென்ற கிறிஸ்தியானும் நம்பிக்கையாளனும், சிறிது தூரம் சென்ற பிறகு 'தூக்க கலக்கம்' அடைந்தார்கள். ஏனெனில், இவர்கள் இப்போது வந்து சேர்ந்த இடத்திற்கு பெயர்* **'மதிமயக்கும்'** *நிலமாகும்! இந்த நிலத்தைக் குறித்தும் முன்கூட்டியே மேய்ப்பர்களும், மூப்பர்களும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அந்த நிலத்தில் சிங்கம் ஏதுமில்லை! பிசாசானவன் எய்திடும் அக்கினியாஸ்திரங்கள் இல்லை! ஆனால், இந்த நிலத்தில் 'தூக்க கலக்கமே' ஆட்கொள்ள முயற்சிக்கிறது. இந்த தூக்க கலக்கம் என்னவென்றால், கர்த்தரை பல ஆண்டுகள் உத்தம சீஷர்களாய் பின்பற்றி, அவருக்கென ஏராளமான ஊழியங்களை செய்து முடித்து, "நான் ஒரு சாதாரண விசுவாசி அல்ல, முதிர்ச்சி பெற்ற விசுவாசி! என்னுடைய ஊழியங்களினிமித்தம் எல்லோரும் என்னை பாராட்டு கிறார்கள்....." என்ற எண்ணம் இவர்களை ஆட்கொள்ளத் தொடங்கிய வுடன் 'தூக்க கலக்கம்' அவர்களைப் பிடித்துக்கொண்டது!*

*இவ்வாறு நம்மைக் குறித்த யாதொரு மேன்மைகளை நாம் எண்ணத் துவங்குகிறோமோ, அவ்வித பெருமை நமக்கு 'ஆவிக்குரிய தூக்கத்தை' கண்டிப்பாய் கொண்டு வந்து தரும்!*

*அதன் விளைவு மிக கொடியதாயிருக்கும்: 1) நீங்கள் பெற்ற அபிஷேகத்தை இழப்பீர்கள்! 2) நீங்கள் ஆதியில் தேவனோடு கொண்டிருந்த ஊக்கமான அன்பை இழப்பீர்கள்! 3) முழுமையான*

பரிசுத்தத்திற்கு நீங்கள் கொண்டிருந்த வைராக்கியத்தை இழப்பீர்கள்! 4)பிறரை ஆவிக்குரிய மரணத்திலிருந்து தூக்கி எடுக்கும் வாஞ்சையை இழப்பீர்கள்! 5) புதிய உடன்படிக்கையில் 'நாம் பாவத்தை ஜெயித்து வாழ முடியும்' என்ற உன்னத செய்தியை பிறருக்கு அறிவிக்கும் தாகத்தை இழப்பீர்கள்!..... ஆகிய இவையனைத்தும், நாம் ஆவிக்குரிய மயக்கம் அடைந்து விட்டோம் என்பதை காட்டும் அடையாளங்களாகும். இந்நிலையில் நீங்கள் நின்று கொண்டிருக்கும் நிலமே 'ஆவிக்குரிய மந்தத்தைத் தரும் மனக்கலக்கம்' தரும் நிலமாகும். இதுபோன்ற நிலைக்கு வந்துவிட்ட யாராயிருந்தாலும், ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து 'துரிதமாய்' விழித்து ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

வயது முதிர்ந்த சகோதரர்களும், சகோதரிகளும், இதுபோன்ற ஆவிக்குரிய பெருமையின் மதிமயங்கிய இடத்திற்கு வந்துவிட முடியும்! அவர்கள் சபையில் நீண்ட காலம் இருப்பதும், எல்லா ஊழியங்களிலும் மனப்பூர்வமாய் பங்கு பெறுவதும், சபை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு கொள்வதும் ஆகிய நீண்ட கால ஆவிக்குரிய முதிர்ச்சியினிமித்தம் இவர்கள் எச்சரிக்கையாயிருக்க தவறுவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது! இதுபோன்றவர்கள், வெளிப்புறமான பாவங்களில் விழுவதில்லை! ஆனால், கர்த்தரிடமும் அவருடைய ஊழியத்திலும் கொண்டிருக்கும் தீராத வாஞ்சையை தங்கள் ஆவிக்குரிய பெருமையின் தூக்கத்தில் இழந்து போகிறார்கள். உண்மை என்னவென்றால், கிறிஸ்துவுக்காய் அனல் கொண்டு பற்றியெரியும் வாஞ்சையை, நாம் அனைவரும் 'நம் ஜீவிய கால முடிவுவரை' காத்துக்கொள்ள வேண்டும்!



'அந்த மனக்கலக்க' துயர நேரத்தில் கிறிஸ்தியானும் நம்பிக்கையாளனும்

ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி மீண்டும் அனல் கொண்டார்கள்.

**இங்குதான் ஐக்கியத்தின் மேன்மை நமக்கு விளங்குகிறது. எனவே தான் ஆவிக்குரிய விழிப்பை எப்போதும் வழங்கும் ஒரு சபையில் நாம் ஐக்கியம் கொள்வதை நாட வேண்டும்! அப்போது மாத்திரமே உத்தமமான அந்த சபையின் ஊக்கம், நாம் பூரணம் அடைந்திட கைக்கொடுக்கும்.**

பின்பு அவர்கள் முன்சென்று ‘பியூலா’ என்ற இடத்திற்கு வந்தார்கள். அதற்கு அர்த்தம் ‘திருமணம் கண்டோம்’ என்பதாகும். இந்த நிலம் மணவாட்டியாகிய சபைக்கு ஒப்பனையாயிருக்கிறது! அந்த இடத்தின் ரஞ்சிதம், தாங்கள் பரலோகத்திற்கு நெருங்கி வந்துவிட்டோம் என்பதை உணர்த்துவதைப்போல் இருந்தது.

இவ்வாறாக, அவர்கள் நாடி வந்த பரமதேசம் மிக அருகில்தான் உள்ளது என்பதை ‘ஒளியின் வெண் தூதன்’ கூறிய வார்த்தை நிறைவேறியதைக் கண்டார்கள்.



# 20

## 'மோட்ச பயண' முடிவின், கெம்பீரம்!

கடைசியாக, பரம நகரத்தை அவர்கள் கண்கள் கண்டது. அதை அவர்கள் கண்ணார கண்டு களித்து, **பயணத்தின் முடிவிற்கு** வந்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள்!



இருப்பினும் கண்குளிர கண்ட பரமதேசத்திற்கும் தங்களுக்கும் இடையே **ஒரு பெரிய ஆறு** ஓடுவதை கண்டார்கள். அந்த ஆற்றை கடப்பதற்கு பாலம் ஒன்றும் இல்லை! மகா ஆழம் கொண்டதாயும் இருந்தது! அந்த ஆற்றிற்கு பெயர் "**மரணம்**" என்பதாகும்!

இதுவே, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இளைப்பாறும் ஸ்தலமாகும்! இந்த ஆற்றைக் குறித்தே அநேகர் பயப்படுகிறார்கள்! யாரெல்லாம் இந்த மரண ஆற்றிற்கு பயந்தார்களோ, அவர்கள் அந்த ஆற்றில் மூழ்கிப் போகிட வாய்ப்புண்டு!

மரண நதியின் ஓரத்தை கண்டவுடன் "ஆண்டவரே நான் உம்மோடு வருவேன் என்பது நிச்சயம் தானா?" என்றெல்லாம் சந்தேகமும், குழப்பமும் அடைகிறார்கள். அப்படி ஒரு சந்தேகம் வந்தவுடன் அவர்கள்

இந்த நதியில் மூழ்கத் தொடங்குகிறார்கள்! அதுபோலவே கிறிஸ்தியானும் பயந்து, மூழ்கத் தொடங்கினான்!



இந்த ஆபத்தான நேரத்தில், நம்பிக்கையாளன் கிறிஸ்தியானை தைரியப்படுத்தி, அவன் மூழ்காமல் இருக்கும்படி தூக்கி நிறுத்தினான்! இவ்வாறாக, நம் அனைவருக்குமே "ஐக்கியம்" மிக முக்கியமானதாகும். இந்த ஐக்கியம் எவ்வளவு முக்கியமென்றால், நம் ஜீவியத்தின் கடைசி மரணம் வரை முக்கியமாகும்!

இதுபோன்ற ஐக்கியம் இல்லாமல், தனித்திருக்க நாடுவது அபாயமென்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

**இன்றைய திரளான ஸ்தாபன சபையில், ஜனங்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியம் இல்லாமல் தனித்து நிற்கிறார்கள். மனச்சோர்வும் கலக்கமும் வருகின்ற நேரத்தில் ஒருவரையொருவர் தூக்கியெடுத்து உற்சாகப்படுத்தும் ஐக்கியம் மிகுந்த பலன் கொண்டதாகும்!**

இடுக்கமான வழியாக, சிலுவை எடுத்து வரும் வாழ்க்கையில் நாம் ஒருவரையொருவர் எச்சரித்து, ஊக்கம் தந்து 'அனுதின சிலுவையை விட்டு விடாதிருங்கள்!' என உற்சாகத் தூண்டுதலை தந்து நடந்திடும் ஜீவியம், ஐக்கியத்தில் மாத்திரமே ஏற்பட முடியும்! மரணபரியந்தம் நம்முடைய உத்தமத்தை காத்துக்கொள்ளும் ஜீவியத்தில், கடைசி நேர 'மரணமும்' உள்ளடங்கியிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது! "அக்கரைக்குப் போங்கள்" என இயேசு தன் சீஷர்களிடம் அவ்வப்போது கப்பல் பயணத்தில் கூறியுள்ளார்! நம்மை இந்த பயணத்தில் அனுப்பியவர் 'உண்மையுள்ளவர்' என விசுவாசித்தவர்கள் மாத்திரமே, மரண பயத்தை வென்றவர்கள்!

“நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், பொல்லாப்பிற்கு பயப்படேன்!” என்ற 23-ம் சங்கீதத்தின் கடைசி வசனங்கள், கிட்டதட்ட எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளும் அறிந்திருந்தாலும், அவர்கள் ஏன் அஞ்ஞானிகளைப்போலவே, மரண நேரத்தில் அச்சமடைகிறார்கள்? ஒருவேளை “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்” என அவர் நடத்தும், பரம தேசத்தின் பயணத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்காமல் இருந்திருக்கக்கூடும்! தங்கள் ஜீவ காலமெல்லாம் கர்த்தர் நடத்தும் “மோட்ச பயணத்தை” மேற்கொண்டவர்கள் அனைவருக்கும் “நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், பொல்லாப்பிற்கு பயப்படேன்.... ஏனெனில், என் ஜீவிய இந்த நீண்ட பயணத்தில் அன்றும் இன்றும், தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்.... இந்த மரண இருளில் நீர் எனக்கு முன் நிற்பதை நான் காணாவிட்டாலும்.... உமது கோலும் உமது தடியும் எழுப்பும் ஓசையை நான் கேட்கிறப்படியால், நான் பயப்படேன்!” என்றே தன் ஜீவிய ஓட்ட பயணத்தின் கடைசி நேரத்தில் கெம்பீரித்து, பரம தேசம் காண்பார்கள்!



கடைசியாக, அவர்கள் இருவரும் மரண நதியை ஜெயமாய் கடந்து வந்தார்கள்! பரம நகரத்தை நோக்கி பெருமகிழ்ச்சியுடன் வீறு நடை போட்டார்கள்!

**தங்களின் நீண்ட மோட்ச பயணத்தில் “மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருங்கள்” என்ற வார்த்தைக்கு பழுது ஏற்படாமல் கீழ்ப்படிந்து, முடிவில் பரம தேசத்தை கண்டடைந்தார்கள்!**

பரம தேசத்தின் வாசலை மகிழ்வுடன் நெருங்கியபோது அங்கு நின்ற

தூதன் "உங்களுடைய 'மோட்ச பயணி' பாஸ்போட்டை காண்பியுங்கள்!" என கேட்டான். மேலும், உங்களுக்கு தரப்பட்ட 'சான்றிதழ் சுருளை காண்பியுங்கள்' எனவும் கேட்டான். அவர்கள் இருவரும் மிகப் பத்திரமாய் 'இரட்சிப்பின் நிச்சயம்' என்ற அங்கீகார சான்றிதழையும், 'பரம தேச பயணிகள்' என்ற தங்கள் பாஸ்போட்டையும் பத்திரமாய் பாதுகாத்து வைத்திருந்தார்கள்! அதை எடுத்து அந்த தூதனிடம் கொடுத்தார்கள். அப்போது பரம தேசத்திலிருந்து, பரம இராஜன் உரத்த சத்தமாய் "**இவர்களுக்கு கதவை திறவுங்கள்!**" என எதிரொலிக்க கூறினார்.



தூதன் வாசலைத் திறந்தவுடன் அவர்கள் இருவரும் பரம தேசத்திற்கு உள்ளே நுழைந்தார்கள். உள்ளே நுழைந்த அவர்கள் இருவரும் "**இயேசுவை போலவே**" **மாறினார்கள்!** அவர்கள் இருவரும் புதிய உடையை பெற்றார்கள்..... அது தங்கத்தைப்போல் ஜொலித்தது! அவர்கள் உள்ளே பிரவேசித்தவுடன், அந்த பரம வாசல் மூடிவிட்டது!

'அறியாமை' என்ற மனிதனைக் குறித்து ஏற்கெனவே கண்டிருந்தோம். அவன் உண்மையுள்ளவன்..... ஆனால், அறியாமையில் வீழ்ச்சி அடைந்தான். இப்போது அவனும் திரும்பி வந்துவிட்டான். அவன் பரம வாசலுக்கு வந்தவுடன் "உன்னுடைய சான்றிதழ் சுருள் எங்கே?" "உன் பரம தேச பயணி" பாஸ்போட் எங்கே?" என தூதன் கேட்டான். அதற்கு அவன் "அவைகளை நான் பாதுகாக்கவில்லை" என கூறினான். தூதனோ, அவனை திருப்பி அனுப்பி விட்டான். ஆ, இது துயரமல்லவா? கிறிஸ்தவ ஜீவியத்தின் உத்தமம்.... பரம வாசல் கடைசி அடிச்சுவடு வரை இருந்திட வேண்டும் என்ற எச்சரிக்கை, நம் யாவருக்கும் உண்டாவதாக! இங்குதான் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் முடிவடைகிறது! ஒரு பழைய கீர்த்தனைப்

*பாடல் "மோட்ச பயணத்தின் இனிமையை" இவ்வாறு பரவசத்துடன் கூறி மகிழ்கின்றது!*

**"நான் இயேசுவின் முகத்தை காணும்போது**

**பயணத்தின் பாடுகள் தகும் என்பேன்!**

**என் ஜீவிய துன்பங்கள் வெகு குறைவென்று கண்டேன்!**

**அவர் என்னைக் கண்ட ஒரு அன்பின் பார்வை**

**அவர் என்னை விட்டு விலகாத ஐக்கியம்**

**என் பயண துயரத்தை முற்றிலும் மாற்றியது.**

**பயணத்தில் நான் அடைந்த துன்பம் தகும்!"**

**தகும்! தகும்! என பலமுறை கூறி வியந்தேன்!!**

*என்பதே அந்தப் பாடல் ஆகும்.*

*இப்போது நம்மைக் குறித்து என்ன? "முடிவுபரியந்தம் நிலை நிற்பவன் 'மாத்திரமே' இரட்சிக்கப்படுவான்!" ஆகவே இதை வாசிக்கும் நாம் அனைவரும், மரணபரியந்தம் (நிச்சயமாய் மரணபரியந்தம்) உண்மையுள்ளவர்களாய் இருக்கக்கடவோம்! அப்போது 'மாத்திரமே' ஆண்டவர் இயேசு வாக்களித்த "ஜீவ கிரீடம்" சூட்டப்படுவோம்!*

ஆமென்.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பாக ஜான் பணியன் என்ற தேவ மனிதனுக்கு தேவன் தந்த ஞானத்திற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்கக்கடவோம்! அவர் கூறிய மோட்ச பயணத்தின் அனைத்து வார்த்தைகளும், இன்றும் நம் யாவருக்கும் மிக தேவையாயிருக்கிறது.... கேட்பதற்கு காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள்!

*- சகரியா பூணன்*

**என் தீர்மானம் :**

**என் ஜெபம் :**